# ஈழகேசரி

EELAKESARI - NATIONALIST TAMIL WEEKLY

தேசிய வார வெளியீடு | நிறுவியவர்: நா. பொன்னையா

மலர் 25 | சுன்னாகம், ஜய ஐப்பசி க — 17-10-54 — ஞாயிறு | இதழ் 14

சாம்பசிவம் அன்ட் கோ.
38, கஸ்தூரியார் வீதி : பெரியகடை : யாழ்ப்பாணம்

H. M. V. — றேடியோ, கிராமபோன், றெக்கோட்டுகள்

விற்பனைக்கிருக்கின்றன.

N. Sambasivam & Co.,
38, Kasthuriar Road : Grand Bazaar : JAFFNA

★ சென்ற ஜனவரி மாதம் நிறைவேறிய நேரு—கொத்தலாவல உடன்படிக்கையை நடைமுறையிற் கொண்டு வருவதில் இருந்த சங்கடங்களும், முட்டுக்கட்டைகளும் தகர்க்கப்பட்டு விட்டன.

# நெருக்கடியான இறுக்கம் தளர்தல்

## இலங்கை இந்தியச் சிக்கலில் ஒருதெளிவு



சாவகச்சேரி மகளிர் அரசினர் கல்லூரியிற் காலஞ்சென்ற கௌரவ டி. எஸ். சேனநாயகா அவர்களின் உருவப்படத்தை முதல் அமைச்சர் சேர் ஜோன் கொத்தலாவல வெள்ளிக்கிழமை காலை திரைநீக்கம் செய்துவைத்தார்.

### கொழும்பு நிருபர் கடிதம்

கொழும்பு 14-10-54

இலங்கை இந்தியர் சிக்கலில் உருவாகியிருந்த நெருக்கடியான இறுக்கம் தளர்ந்து அமைதி ஏற்பட்டிருக்கிறது. இத் தொடர்பில் புதுடில்லி சென்று திரும்பியுள்ள முதல் அமைச்சர் சேர் ஜோன், திரு. டட்லி சேனநாயகா, திரு. பண்டாரநாயகா உட்பட்ட தூதுக் குழுவினர் விலங்கத்துக்கேதுவாயிருந்த விவகாரங்களைத் தெளிவுபடுத்திக்கொண்டு திரும்பியுள்ளனர்.

எனினும் 'நாடற்றவர்' என்னும் ஒரு வர்க்கத்தினர் சிருட்டிக்கப்படுவதையிட்ட சிக்கல் முன்பிருந்தமேனியாகவே, தீர்வு காணப்படாமல் நிற்கிறது. இலங்கைக் குடியுரிமை அளிக்கப்பெறுதவர்கள் எவராயினும், இந்திய வம்சாவளியினராகஇருந்தால் அவர்கள் இந்தியர்களாகவே கருதப்படவேண்டும் என்ற இலங்கைத் தூதுக்குழுவின் கோரிக்கையை இந்திய முதல் அமைச்சர் நேருஜி ஒப்புக்கொள்ளவில்லை.

### இழுவலான முடிவு

நாடற்றவர்களையிட்டு இலங்கையரசாங்கம் ஆக்கும் சட்டமைதையும் இந்திய அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவேண்டுமென இலங்கைத் தூதுக்குழு விடுத்த வேடிக்கையான கோரிக்கையையும் இந்திய அரசாங்கம் நிராகரித்துவிட்டது. இலங்கைத் தூதுக்குழுவின் நோக்கம் முற்றிலும் நிறைவேறவில்லை என்பதைத்தான் இது காட்டுகிறது. இலங்கைத் தூதுக்குழு மனத்துட்கொண்டிருந்த அதி முக்கிய இலட்சியம், நாடற்றவர் சிக்கலுக்குத் தீர்வு காண்பதேயாகும். எனினும் டில்லிப்பேச்சுவார்த்தைகளில் இதையிட்ட சமரசம் ஏற்படாததுடன், இழுவலான ஒரு முடிவும் காணப்பட்டிருக்கிறது. இரண்டு ஆண்டுகளின் பின்பே இதையிட்டு மீண்டும் ஆலோசிப்பதென்று இதைப்பின்போட்டிருக்கிறார்கள்.

ஆயினும் சென்ற ஜனவரி மாதம் நிறைவேறிய நேரு-கொத்தலாவல உடன்படிக்கையை நடைமுறைக்குக் கொண்டுவருவதில் இருந்த சங்கடங்களும், முட்டுக்கட்டைகளும் தகர்க்கப்பட்டுவிட்டனவென்று முதல் அமைச்சர் சேர் ஜோன் கொத்தலாவல கூறியுள்ளார்.

### ஜனநாயகக் காங்கிரஸ்

டில்லிப் பேச்சுவார்த்தைகளின் இன்னொரு முக்கிய அம்சம், இலங்கை இந்திய மக்களின் தாபனமாகிய இலங்கை ஜனநாயகக் காங்கிரஸின் அபிப்பிராயத்தையும் இந்திய அரசாங்கம் செவிமடுத்துக்கேட்டது என்பதாகும். இலங்கையில் முன்பு நடந்த மகாநாடொன்றில் இலங்கை ஜனநாயகக் காங்கிரசைச் சேர்த்துக்கொள்ளாது ஒதுக்கிவைத்

(தொடர்ச்சி 6ஆம் பக்கம் பார்க்க)

# தமிழுக்குச் சம உரிமை

## கொழும்பு மேயர் உறுதி மொழி

யாழ்ப்பாணம், 14-10-54

முதல் அமைச்சர் சேர் ஜோன் கொத்தலாவல அவர்கள் சமீபத்தில் (29-9-54) யாழ்ப்பாணத்துக்கு வருகை புரிந்தபோது தமிழும் சிங்களமும் அரச கரும மொழியாக அமைவதற்கான திருத்தத்தை அரசியல் அமைப்புச் சட்டத்தில் தாம் செய்து வைப்பதாக வாக்களித்திருந்தார். இதன் அவசியத்தைக் கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர் திரு. எஸ். எச். பேரின்பநாயகன் அவர்கள் தமது கல்லூரியில் முதல் அமைச்சரை வரவேற்றுப் பேசியபோது வற்புறுத்தியிருந்தார். சென்ற வாரம் யாழ்ப்பாண மக்கள் கொழும்பு மேயர் டக்டர் என். எம். பெரேரா அவர்களை வரவேற்றபோது தாய்மொழிச் சிக்கல் குறித்து முதல் அமைச்சர் செய்யவிருக்கும் திருத்தத்தை டக்டரும் பாராட்டினுர். இத் திருத்தத்துக்குச் சம சமாஜக் கட்சியினர் முழு ஆதரவையும் மனங்கோணுமல் அளிப்பார்கள் என்பதை அக்கட்சியின் சார்பில் கொழும்பு மேயர் கூறினுர்.

ஆனல் முதல் அமைச்சரின் இந்த வாக்குறுதியைத் தென்னிலங்கையிலிருந்து கிளம்பியுள்ள வகுப்புவாதத் தீ பொசுக்கிவிடக் கூடுமெனவும் டக்டர் பெரேரா தெரிவித்தார். திரிசிங்கள பெரமுன போன்ற வகுப்புவாதத் தாபனங்களைத் தடைசெய்ய முடியாத முதல் அமைச்சர் அரசியல் அமைப்புச் சட்டத்தில் திருத்தங்கொண்டு வந்தாலும் அதனை இன்றைய அரசாங்கம் நடைமுறைக்குக்கொண்டு வருமோவென்பது சந்தேகமான காரியமெனவும் டக்டர் குறிப்பிட்டார்.

### அமோக வரவேற்பு

சென்ற 9-10-54 சனிக்கிழமை கொழும்பு மேயர் டக்டர் என். எம். பெரேராவுக்கும், உதவி மேயர் திரு. சி. உருத்திராவுக்கும் யாழ்ப்பாண மக்கள் பிரமாண்டமான வரவேற்பொன்றை யளித்தனர். இப் பொது வரவேற்பு கொக்குவில் இந்துக்கல்லூரி அதிபர் திரு. எஸ். எச். பேரின்பநாயகன் தலைமையில் நடைபெற்றது. காந்தீயவாதியாகிய தாம் சமசமாசக் கட்சிக்காரரை வரவேற்கக் காரணமென்னவென்பதைக் கூற முன்வந்த திரு. பேரின்பநாயகன் காந்தீயத்துக்கும் சமதர்மத்துக்குமுள்ள ஒற்றுமைகளைத் தெளிவுபடுத்தினுர். இக் கூட்

நமது நிருபர்

டத்தில் யாழ்ப்பாண மேயர் சாம் ஏ. சபாபதி, முடிக்குரிய வழக்கறிஞர் திரு. ரி. முத்துச்சாமிப்பிள்ளை, செனேட்டர் பி. நாகலிங்கம், திரு. ஏ. துரைராஜசிங்கம், எம். எம். ஸி., திருமதி விவியன் குணவர்த்தன உட்பட வேறும்பலர் பேசினர்.

யாழ்ப்பாணம் நகர சபைத் தேர்தலுக்கான காலம் நெருங்க நெருங்க அபேட்சகர்களின் பிரசாரமும் அதிகரித்துவருகிறது. அத்துடன் இம்முறை அபேட்சகர்களின் தொகையும் அதிகமாகவே காணப்படுகிறது. கச்சேரியடி வட்டாரத்திற் போட்டியிடமுன் வந்திருக்கும் ஒருவர் வெளியிட்டுள்ள விண்ணப்பத்தில் தன் வயதையும் அறிவையும் அளந்துகாட்டியிருக்கிறுர். தாம் வயதிற் குறைந்தவனுயினும் அறிவில் மிகுந்தவனென்று அவர் குறிப்பிட்டுள்ளார். நாலாம் வட்டாரத்திலிருந்து வாக்காளன் ஒருவர் நியாயமான கோரிக்கையொன்றை விடுத்துள்ளார். உறுப்பினர் பதவியை ஒருவரே தமது சொந்தச் சொத்தெனக்கருதாமல் தகுதியும் திறமையுமுடைய ஏனையோருக்கும் சந்தர்ப்பமளித்து அவர் விட்டுக்கொடுக்கவேண்டுமென்று இந்த வாக்காளர் தமது அபிப்பிராயத்தைத் தெரிவித்துள்ளார்.

இடதுசாரி ஐக்கிய முன்னணியினரும் சமசமாசக்கட்சியினரும் தேர்தலில் ஈடுபட்டுப் பலமான திட்டங்கள் போட்டுவருகின்றனர். ஐக்கிய முன்னணி 10 வட்டாரங்களுக்காவது அபேட்சகர்களை நியமிக்குமெனத் தெரிகிறது. இந்த இரு கட்சியினரும் தத்தம் பிரசாரங்களை ஏற்கனவே ஆரம்பித்துவிட்டனர். சமசமாசக் கட்சியைச் சேர்ந்த திரு. கே. குகதாசன், எம். எம். சி. அக்கட்சியிலிருந்து வெளியேறியதற்கும் அடுத்த தேர்தலில் அவர் கட்சிப்பற்றில்லாத முறையிற் கலந்துகொள்ளப்போவதற்கும் தொடர்புண்டாம். சென்ற தேர்தலில் அதிகம் வெற்றியீட்டிய தமிழ்க் காங்கிரஸ், தலத்தாபனத் தேர்தல்கள் யாவற்றிலும் கலந்துகொள்வோமெனக் கூறிய தமிழரசுக்கட்சி ஆகியோர் இன்றுவரை மௌனமாகவே யிருக்கின்றனர்.

### தபால் ஊழியர்

அகில இலங்கைத் தபால் ஊழியர் சங்க யாழ்ப்பாணப் பிரிவின் வருடாந்தப் பொதுக் கூட்டம் சென்ற 10-ந் திகதி யாழ்ப்பாணம் பாரதி பாஷிய வித்தியாசாலையில் நடைபெற்றது. அங்கு பேசிய பேச்சாளர் ஒவ்வொருவரும் தாம் அரசாங்க ஊழியர் என்பதைக் கூட மறந்து உணர்ச்சிவசப்பட்டு இன்னல்களை எடுத்தியம்பினர். அரசாங்க நெருக்கடியை அவர்கள் வாயிலாகக் கேட்கும்போது பரிதாபமாகத்தானிருந்தது. கொழும்பிலுள்ள தலைமைக் கந்தோரிலிருந்து வந்த முக்கிய நிர்வாகிகளில் ஒரு சிலர் அரசாங்க அதிகாரிகளுக்குச் சவால் விடக்கூடத் தவறவில்லை. ஆனல் கூட்டத்துக்குத் தலைமைதாங்கிய திரு. வி. சி. பரமானந்தம் மிகவும் சாந்தமாகப் பொறுத்திருப்போம், காலம்மாறும் என்றதன்மையில் புத்திமதி கூறினுர்.

# தமிழர் ஐக்கிய முன்னணி

## கூட்டத்தில் ஒரே அமர்க்களம்

கொழும்பு

"தமிழ் மக்களை இந்நாட்டிலிருந்து வெளியேற்றிவிடக் கங்கணங்கட்டி நிற்பது 'தேசிய வாதம்.' ஆனல், தமிழ்மக்களை நாடற்றவராக்காதே; நடுக்கடலில் தள்ளாதே என்று நாம் எதிர்த்துக் கூறினுல் அது 'வகுப்புவாதம்'! இலங்கையில் வாழும் தமிழ் பேசும் மக்களில் பத்து இலட்சம் மக்களை வெளியேற்றிவிடவே இன்றைய அரசாங்கம் துடியாகத் துடிக்கிறது: புதுடில்லிக்குக் காவடி எடுத்துச் சென்றுமிருக்கிறது! ஆம்! இலங்கையைச் சிங்களமயமாக்க முயற்சிக்கும் வேளையில், தமிழ்பேசும் மக்களின் தொகையிற் பத்து இலட்சத்தைக் குறைத்து விட்டால், அம்முயற்சியில் வெற்றிபெறுவது மிகவும் சுலபமானதாகிவிடும்!" இவ்வாறு 10-10-54 ஞாயிற்றுக்கிழமை மாலை கொழும்பு சைவ மங்கையர் கழகத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் இலங்கைத் தமிழ் அரசுக்கட்சித் தலைவர் எஸ் ஜே. வி. செல்வநாயகம கூறினுர். இலங்கைவாழ் தமிழ்பேசும் மக்களிடையே ஓர் ஐக்கிய முன்னணியை ஏற்படுத்தும் இலட்சியத்துடன் அக்கூட்டம் கூட்டப்பட்டது. இலங்கைத் தமிழ் அரசுக்கட்சி, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ், எல்லாளன் முன்னணிக் கழகம், இலங்கை ஜனநாயகக் காங்கிரஸ் முதலிய கட்சிகளின் பிரதிநிதிகள் கூட்டத்திற் பங்குபற்றினர். தமிழ்பேசும் மக்களிடையே ஐக்கியமேற்படுத்தக் கூட்டப்பட்ட கூட்டத்திற் பலமுறை குழப்பம் ஏற்பட்டது, தமிழ் பேசும் மக்களுக்கே ஏமாற்றத்தையும் அதிருப்தியையும் கொடுத்திருக்கிறது. கூட்டத்திற் பேசிய ஒருவர் திரு. ஜீ. ஜீயை இழுத்துக் கண்டித்தபொழுது, கூட்டத்திற் குழப்பம் ஏற்பட்டது. சபையில் அமைதி ஏற்படுத்துவதே இயலாததாகி விட்டது. எனினும்,

நமது சிறப்பு நிருபர்

இன்றைய நிலையில் தமிழ்பேசும் மக்கள் தம்மிடையே உள்ள வித்தியாசங்களை மறந்து, எல்லோரும் ஒன்றுசேர்ந்து ஒத்துழைக்க வேண்டும் என்பதை வற்புறுத்தும் பிரேரணை ஒன்றை டக்டர் ஈ. எம். வி நாகநாதன் அவர்கள் பிரேரித்தார்கள். அதை எம். பி. பாரதி அவர்கள் ஆமோதித்தார். பிரேரணை ஏகமனதாக ஏற்கப்பட்டது.

கூட்டத்தை ஆரம்பித்து வைத்து டக்டர் ஜே. ரி. அமரசிங்கம் பேசியபொழுது இன்றைய அரசாங்கத்திலே எத்தனை குறைகளை நாம் காண

(தொடர்ச்சி 5ஆம் பக்கம் பார்க்க)

## ஆசிரியருக்குக் கடிதங்கள்

# நாவலர் அவர்கள் படத்தில் ஒரு சந்தேகம்

வண்ணார்பண்ணையில் உள்ள நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலைப் புதிய கட்டடப் பிரவேச தினத்தன்று, ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை அவர்கள், வித்தியாசாலை மனேஜர் த. கைலாசபிள்ளை அவர்களுக்கு அவ் வித்தியாசாலையில் வைக்கும் பொருட்டு ஒரு படத்தைக் காட்டினார்கள். அப் படம் ஏரம்பையர் என்பவரை நாவலர் அவர்கள் கோலத்தில் இருத்தி எடுத்த படம். அதனை மனேஜர் அவர்கள் ஏற்கவில்லை. பிறகு இப்பொழுது வழங்கும் படம் வந்தது. இதனை மனேஜர் அவர்கள் தாம் எழுதிய நாவலர் அவர்கள் சரித்திரத்தில் வெளியிட்டார்களாயினும், அதில் வெறுப்புள்ளவர்களாயே யிருந்தார்கள். இப் படம் சிதம்பரம் சைவப்பிரகாச வித்தியாசாலை மனேஜரால், சென்னையில் சித்திரிக்கப்பட்டது என்று வித்துவான் ந. சுப்பையா பிள்ளை அவர்கள் சொல்லுகின்றார்கள்.

பொன்னுவெளி உடையார் வீட்டிலிருந்த படம் மேலே காட்டிய இருவகைப் படத்திலும் வேறானது. அதனை ஏரம்பையர் படத்தோடு ஒப்பிட்டுப் பார்த்தோம். அன்றி ஏரம்பையரோடு நன்கு பயின்ற மகாவித்துவான் கணேசையா அவர்களுக்குங் காட்டினோம். ஏரம்பையர் படத்துக்கும் இதற்கும் சம்பந்தமேயில்லை; இது ஏரம்பையர் படமே அன்று என்று தீர்மானித்தார்கள்.

நவாலி திரு. தம்பையா உபாத்தியாயர் அவர்களுக்குத் தொண்ணூற்று மூன்று வயசு; நாவலர் அவர்களைக் கண்டவர்கள். அவர்களுக்குக் காட்டினோம். அவர்கள் "இது நாவலர் அவர்களின் யதார்த்தமான படமே" என்று கண்ணீர் சொரிந்து வணங்கினார்கள்.

இந்த நிலையில் பொன்னுவெளியிற் கிடைத்த படத்தை நாவலர் அவர்களின் நிழற் படம் என்றே நம்பினோம், பச்சையப்பன் கல்லூரியில் எடுத்தபடம் என்று உடையார் வீடு பரம்பரையாகச் சொல்லிவரும் வார்த்தையும் நமது நம்பிக்கைக்குப் பெரிதும் உபகாரமாயிருந்தது. பொன்னுவெளியிற் படம் ஒன்றே ஒன்றுதான் இங்கே உள்ளதென்றும் கருதியிருந்தோம். ஆனால் இப்பொழுது அதே போன்று மூன்று படம் வண்ணார்பண்ணையில் மூன்று வேறு இடங்களிற் கிடைத்திருக்கின்றன. இன்னும் கிடைக்கலாம். இப் படங்களைப் பிடித்தவர் மானிப்பாயில் உள்ள எஸ். கே. லோட்டன் என்பவர். அவர் பெயர் அப் படங்களின் கரைச் சித்திரத்தில் இருக்கிறது. ஒரு படம் மடிப்பான ஒரு காகிதத்தின் உட்பக்கத்தில் அமைந்திருக்கிறது. எதிர்ப்பாகத்தில் நாவலர் தலைமையனார் புத்திரர் மனேஜர் த. கை. அவர்களின் படம் இருக்கிறது. இரு படங்களின் கீழும் இருவர் பெயரும் ஆங்கிலத்திற் பொறிக்கப் பட்டிருக்கின்றன.

லோட்டன் எடுத்த படங்களைக் கண்டதும், பொன்னுவெளியிற் படமும் லோட்டன் எடுத்த ஒரு படத்தின் ஒரு பிரதி என்றே கருதினோம். பின் பொன்னுவெளிப் படத்தோடு ஒப்பிட்டு நோக்கியபோது, லோட்டனுடைய படங்களுக்குப் பொன்னுவெளியிற் படம் மூலம் என்று தெரிந்தது, லோட்டன் பொன்னுவெளியிற் படத்தைப் படம் பிடித்துப் பின் பெருப்பித்திருக்கிறார்.

நாங்கள் பொன்னுவெளியிற் படத்தைப் படம் பிடித்தபோது சிறு தவறுதலினால், இருபக்க முழங்கையும் படத்தில் அமையவில்லை. அதே தவறு லோட்டனுக்கும் சம்பவித்திருக்கிறது. இதனால், பொன்னுவெளியிற் படம் லோட்டன் எடுத்ததேயன்று என்பது தெளிவு.

ஆகவே ஏரம்பையர் படம், இப்பொழுது வழங்கும்படம், லோட்டன் எடுத்த படம் இந்த மூன்றுக்கும் வேறாய், லோட்டன் எடுத்த படத்துக்கு மூலமாய் விளங்குகின்றது பொன்னுவெளிப்படம். அப் படத்தின் பிரதியாய் லோட்டன் படம் இருந்தும் அது ஏன் பயின்று வழங்கவில்லை? என்பது கேள்வி.

ஏரம்பையர் படத்தை ஏற்றுக் கொள்ளாதவர்களும், இப் பொழுது வழங்கும் படத்தை ஏற்றுக் கொள்ளாதவர்களுமான மனேஜர் த. கை. அவர்களே லோட்டன் எடுத்த படப் பிரதிகளைக் கண்டிருக்கலாம். அப்படியானால் லோட்டன் எடுத்தபடம் நிச்சயம் வழங்கியிருக்க வேண்டுமே யென்று மேலும் கேள்வி வலியுறலாம்.

கேள்விகளுக்குச் சந்தேகம் தீர விடையிறுத்துப் பொன்னுவெளியிற் கிடைத்த படத்தை நாவலர் அவர்கள் படம் என்று தாபித்தல் எளிதன்று, அதே சமயத்தில் என்னைப் பொறுத்தவரையில் பொன்னுவெளியிற் படத்தை நாவலர் அவர்கள் படம் அன்று என்று தீர்த்துக்கட்ட முடியாமையும் ஸ்திரப்படுகிறது.

1. தொடக்கத்தில் திரு. ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை ஏரம்பையரை இருத்தி ஒரு படம் அமைத்தார் என்ற சம்பவம், சென்னையில் அமைத்த படம், லோட்டன் எடுத்த படம் எல்லாவற்றையும் ஏரம்பையர் படம் என்று சொல்லவும், நாவலர் அவர்களுக்குப் படமே இல்லையென்று சொல்லவும் வைத்துவிட்டது.

2. பெரியவர்கள் படம் பிடிக்க விடுவதில்லை; பெரியவர்களுக்குப் படம் இல்லாமலிருப்பதே நல்லது. என்ற ஓர் அபிப்பிராயம் பிரபலஸ்தர்களிடம் குடிகொள்ளுமாயின் உண்மையான படமே வழக்கொழிந்து போவதில் நூதனம் இல்லை. நாவலர் பெருமானுடைய சில உண்மைகள், அவர்களோடு தொடர்பு வைத்தவர்களின் அபிப்பிராய பேதத்தால் மறைந்து போனதை நான் நேரில் பார்த்திருக்கிறேன்.

(தொடர்ச்சி 10ஆம்பக்கம்பார்க்க)

கடிதர், கட்டுரையாளர்களின் கருத்துக்கள் ஈழகேசரியின் சொந்தக் கருத்துக்களாமெனக்கொள்ள வேண்டியஆவசியகமில்லை-பர்




கொழும்பு கொமேர்சல் கொம்பனி லிமிட்.

(அங்கத்தவர்களின் உரிமை வரையறுக்கப்பட்டது. இங்கிலாந்தில் இணைக்கப்பட்டது.)

C. C. C. பசளை கிடைக்குமிடங்கள் :-

சுன்னுகம் — R. M. கான்பாய் ஸ்ரோர்ஸ்

யாழ்ப்பாணம் — M. S. மணியம் அன்ட் கோ

ஊர்காவற்றுறை — கைற்ஸ் டிஸ்ரிபியூரேர்ஸ்

# கேள்வி மண்டலம்

## சூள்ளனுர்

பி. எஸ். யோகம், மட்டக்களப்பு.

கேள்வி: புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் ஒருகாலத்திற் பக்திப் பாடல்கள் இயற்றியதாக எனது சிநேகிதி கூறுவதில் உண்மையுண்டா?

மறுமொழி: ஒருகாலத்திலா? இப்போதுந்தான் அவருக்குத் தமிழ் மொழிப் பக்தி அதிகமுண்டு.

தம்பி, ஆவரங்கால்.

கே: திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் யாழ்ப்பாணத்துக்கு வருகைபுரிந்தபோது அன்னருக்கு அளிக்கப்பட்ட வரவேற்பு இதழ் ஒன்றில், "காலப்போக்கிற் கொள்கையைத் திரிக்கும் கோலம் புனைவோர் நாணுவர் நினக்கே!" என்ற குறிப்பிட்டிருப்பதின் காரணமென்ன?

மறு: காலத்துக்காலம் அரசியற் கோலம்போடுவதில் அவர் மகா நிபுணரானபடியால்.

ஏ. மகாலிங்கம், நவாலி தெற்கு.

கே: சியாற்ரோவில் இலங்கை சேராதிருப்பதாற் கெடுதி ஏதாவது நேருமா?

மறு: கெடுதி நேராது; கெடுபிடி ஏற்படும்.

கே: நீர் தமிழரின் தலைவனானல் என்ன செய்வீர்?

மறு: தமிழ் மொழியை நன்கு பயின்று நல்ல தமிழில் விரிவுரைகள் ஆற்றுவேன்.

கே: தமிழரும் தமிழ் மொழியும் இலங்கையிற் சேமமுற வாழ ஒருவழி கூறும்.

மறு: தமிழ்ப் பேசும் மக்கள் ஒன்றுபடவேண்டும்.

டி. என். ரசு, அரசடிப் பாடசாலை, மட்டக்களப்பு.

கே: தமிழா, சிங்களமா உயர்ந்தது?

மறு: அடடா, மொழியிலுமா இப்போது உயர்வு தாழ்வு எழுந்துவிட்டது?

கே: உலகில் மனிதனுடைய வாழ்க்கை நீர்மேற் குமிழியாக இருக்கிறதா?

மறு: உலகைச் சுற்றியுள்ள நீரில் மனிதன் குமிழியாக இருக்கின்றான்!

கா. இரகுநாதன், நாயன்மார்கட்டு

கே: பார்த்தீரோ தமிழர் நிலை! 'பாராண்ட நந்தமிழன் பட்டம் பதவிக்காக இனத்தையே அடகுவைத்து..........' இதனை நிரப்பும் பார்க்கலாம்?

மறு: இளிச்சவாயனுயினன்!

கே: தமிழரிடையே ஒற்றுமை என்ற பண்பு எப்போது உருவாகும்?

மறு: உள்ளப்பண்பு உண்டாகும்போது.

இ. தியாகராசா, தாண்டவன் வெளி, மட்டக்களப்பு.

கே: 'தன்வினை தன்னைச் சுடும் ஓட்டப்பம் வீட்டைச் சுடும்' என்பதன்பொருள் என்ன?

மறு: உப்பிட்ட பாண்டமும் உபாய மிகுந்த நெஞ்சமும் தட்டியுடையாமற் தாமேயுடையும் என்பதுபோலவே,

கே: நட்டாயிரம் பட்டாயிரம் என்பதென்ன?

மறு: இது பனையைக்குறிப்பது. பனை பலவருடகாலம் பயன் தருவது. அது பட்டபின்னரும் பலவகையிற்பயனுகின்றது.

கே: நான் இவ்வுலகில் ஏன் பிறந்தேன்?

மறு: வேலனே! இந்த விண்ணை ஏன் படைத்தாய் என்று பாடுவதற்காக!

கே: பசிவந்தால் என்ன செய்யும்?

மறு: எதற்கும் மசியும்.

கே. சதாசிவம், மட்டக்களப்பு.

கே: புத்தகம் விற்பனையாவதற்குச் சிறந்த சித்திரம் தேவையா, முதிர்ந்த எழுத்தாளர் தேவையா?

மறு: வாய்ச் சாதுரியம் மிக்க புத்தக வியாபாரிகளும் புத்தகங்களை வாங்குவதற்கு வாசகர்களுந்தான் தேவை.

★ சிறுவர் முதற் பெரியோர் வரை யாவரும் இன்புறத்தக்க கீதங்களை இசைத்த பெருங் கவிஞர் இவர்.

# காலத்தை வென்ற கவிஞர்

பண்டிதர் வி. சீ. கந்தையா

தமிழகம் கண்ட தெய்வப் புலவர்கள் எவரும் இதுவரை உயிருடன் போற்றப்படாத ஒரு காலத்தின் போக்கினையே வென்றுவிட்ட கவிஞர்பிரான் தேசிகவிநாயகம் பிள்ளையாவர்; அவரை நினைக்கும்போது:

‘நல்லசகுனம் நோக்கிச்
செல்லடி
நான்படும் பாடவர்க்குச்
சொல்லடி”

என்னும் தெய்வக் காதற் பாடல் காதில் கலந்து ஒலிக்கின்றது, ‘கருங்கல் நெஞ்சும் கரைந்துருகுமாறு’ தமது பிற்கால வாழ்வில் இவர் பாடியுள்ள பக்திமயமான கீர்த்தனங்கள் ஈடிணையற்ற பெருமைபடைத்தன. நினைக்குந்தோறும் இவர் மண்ணுலகை நீங்கினரென்ற செய்தி நெஞ்சை உருக்குகின்றது.

தெய்வத் தமிழ் நாட்டிலே ஒரு சுடும்புயல் வீசிற்று. நச்சுமரங்கள் பல அவ் ஊழிக் காற்றில் முரிந்து அழிந்தன. தூங்கிக்கிடந்த சருகுகள் கூட அக் கடுங்காற்றால் உணர்ச்சி கொண்டு அள்ளுண்டு பறந்தன. காற்றின்வேகம் பியூஜி தீவுவரை உணரப்பட்டது. பாரதியார் என்னும் அந்தப் பெரும்புயல் வீசியமைந்ததும், குமரிக் கோடியிலிருந்து வீசிய ஒரு தமிழ்த் தென்றலாக எழுந்தார் கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளை.

“பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ் மொழியிற் பெயர்த்தல் வேண்டும்” என்று பாரதியார் செய்த கற்பனைக்கு மேலாய் பிற நாட்டாருடைய நல்ல இலக்கியங்களான மீராவின் கதை, பாரசீகத் தனிக்கவிகள், உமர்கய்யாம் பாடல்கள் என்பவற்றைக் கவிமணி தமிழ் செய்து, செயலில் ஒருபடி மேற்சென்று வழிகாட்டினார்கள். உமர்கய்யாம் என்னும் புலவரது பாடல்களை மொழிபெயர்க்கும் போது தமிழ் உணர்ச்சி, அங்கு எவ்வாறு இவருள்ளத்திற் துடித்தது என்பதைக் கூர்ந்து நாம் காணலாகும். பாரசீகக் கவிஞர் பாட்டிலே

“கையிற் கம்பன் கவியுண்டு
கலசம் நிறைய மதுவுண்டு”

என்று தமிழ்ப்புலவர் பெருமகனை கம்பனைத் திணித்துப் பாடலையே தமிழ் மயமாக்கிவிட்டார்.

சிறுவர் முதற் பெரியோர் வரை யாவரும் இன்புறத்தக்க கீதங்களை இசைத்த பெருங்கவிஞர் இவர். ‘மலரும் மாலையும்’ என்னும் தொகுப்பு, அவற்றைத் திரட்டி நமக்குத் தந்து கவிமணியின் பேரொளியை எங்கும் ஒளிரச் செய்கின்றது.

“அல்லும் பகலும்
அலைந்துவந்தேன்—எங்கள்
ஆழியிறைவனைக்
காணவந்தேன்
நில்லும் எனக்கினி
நேரமில்லை—இன்னும்
நீண்டவழி போக
வேண்டுமம்மா”

என்று ஓர் ஆறு கூறு முகமாக இவர் அமைத்த அடிகள், இப் பெருமகனார் தமக்கே ஆக்கிக் கொண்ட இறுதிவார்த்தைகள் போன்று ஒலிக்கின்றன. ஆறு இறைவனைத் தேடுமா! ஆழம் காண முடியாத இறைவனை.

“கோயில் முழுதுங்
கண்டேன்
கோபுரம் ஏறிக் கண்டேன்
தேவாதி தேவனை யான்
எங்கும்
தேடியும் கண்டிலனே”

என்று அலைந்து தேடி, ஈற்றில் உலக ஊழல்களினின்றும் நீங்கி, நம்மை நோக்கி ‘நில்லும் எனக்கினி நேரம் இல்லை’ என்று சொல்லிச் சென்றுவிட்டார். ஆண்டவனையடைய ஒருவன் படவேண்டிய துன்பம் அனைத்தையும் காட்டிய அப் பாடலின் இறுதியில் இன்னும் நீண்டவழி போக வேண்டுமம்மா என்று, இறைவன் நமக்குத் தூரத்திலே இருந்தாலும் அவனை விடாப்பிடியாக முனைந்து சென்றுற் சேர்ந்துவிடலாம் என்னும் உறுதியையும் புகட்டி, அவனடி சென்றுவிட்டார்கள். ஆழ்ந்த தத்துவக்கருத்துகள், நல்ல செஞ்சொற்கோப்பு, படிக்குந் தோறும் மிளிர்ந்துவரும் செய்யுள் நயம் என்பன அமைந்த இவரது பாடல்களும் காலத்தை வென்று அழியாது நிற்பன. அவற்றைத் தந்த தமிழ் மகனாரது கருத்துக்கள் நமக்கு ஒளியூட்டி இன்பமும், அமைதியும் நலனுமாக.

**வாழ்க கவிமணி திருநாமம்!**

கவிதைக் கடிதம்

# மதத் திருத்தம்

— மகேஸ்வரன் —

அப்படியே தொன்றுமில்லை; அன்ப! பதிலெழுத
எப்படியோ காலம் இழுத்துவிட்டேன்—தப்பதனை
மன்னிக்க! அந்த மதத்திருத்தக் கட்டுரையில்
இன்னொன்றும் உண்டு இனி:

மதச்சார்பில் தாபிக்கும் மண்ணரசு என்றும்
இதமாய் இயங்காது என்பேன்—“மதமொருவர்
சொந்த விஷய(ம்)அதைத் தூய்மையுடன்
இந்தியா வாழும்”....என— [பேணிவரின்

மந்திரமாய்ச் சொன்னார், மகாத்மா ஓரிடத்தில்;
இந்தியா–பாகிஸ்தான் என்றிரண்டு—துண்டுபட்டே
பாரதநா டின்றுபடும் பாடுகளைப் பார்த்துமதச்
சார்பரசை யான்வெறுக்கின் றேன்!

மனிதசக்திக் கெட்டாத மாசக்தி யொன்றைப்
புனிதமாய்ப் போற்றிவந்தான் பூர்வ—
மனிதனென்றே
கண்டுசொன்ன அந்தக் கடவுட் கருத்துரைகள்
நன்(று;)இன்னும் ஒன்றுரைப்பேன் நான்:

கட்டுப்பா டெல்லாங் கருத்தற்ற கொள்கைகளாய்க்
கெட்டுவிடு மாறு கிளப்பதுதான்—நட்டமென்றேன்;
இப்படியே மேலும் எழுதவுண்டு காரியங்கள்;
அப்பால் மொழிவேன் அவை.

சோம்பேறி வாழ்க்கைமுறை; சூழலின்
பேய்ப்போக்குப்
போம்பாதை சொல்லாதென் போதுகளை—வேம்பாக்கி
வைப்பதினால், நானும் மறுமொழியைத் தாழ்த்தினேன்;
செப்பிடுக உங்கள் திறம்!

# கவின் பெறு திலகம்!

கலைநாதன்

அழகுணர்வு நிரம்பிய அறிஞர்களின் உள்ளத்தினின்றும் முகிழ்த்த இன்பம் கலைகளாக மலர்ந்தது. அந்தக் கலைகள் இறையருளின் திறத்தை ஒல்லும் வகையால் உணர்த்தி நின்றன. பலவகைப்பட்ட நுண்கலைகளிலும் ஈடுபட்டுத் திளைத்தது குலம், தமிழ்க் குலம். தமிழனுடைய வாழ்க்கை காவியங்களால் சீர்பெற்றது; ஓவியங்களால் அழகு பெற்றது; சிற்பங்களால் சிறப்புற்றது! வாழ்க்கை வரலாற்றில் விழுப்புடைய காவியக்கலை மிளிரும்; கற்கோயில் கலைக் கோயிலாகத் திகழும். இது தமிழின் தன்மை; தமிழனுடைய பெருமை! இவை எல்லாம் இறந்த காலச் சிறப்பு!

### கலையின் கதி

இன்று கலை என்றால் கொலை! காவியம் என்றால், ‘வேண்டாம் எரித்துவிடு’ என்பான் பகுத்தறிவு வாதி. ‘செய்யுள் பயில்வதா, ‘அது சோம்பேறிக்கு இக்கணம்’ என்பான். கவிதைக் கலை யெனின், ‘நிறுத்து; கவிஞனின் கற்பனைதான்’ என்றிகழ்வான். இப்படியே கலைக் கோயில்கள், காவியச் சோலைகள் அத்தனையும் சிறுகச் சிறுக அழிக்கப்பெற்று வருகின்றன. அழகும் அறமும் வாழ்ந்த இடங்களை அசூயும் மறமும் மெள்ள மெள்ள ஆக்கிரமித்து வருகின்றன.

இந்த நிலையிலும் தமிழின் பழம் பெருமையைக் காத்து அமையும் தமிழறிஞர்களும் சிலர் உள்ளமையால் ஆறுதல் அடைகின்றோம். ஆனால் அதிர்ச்சி தரும் வகையில் அவர்களின் தொகை நாளுக்கு நாள் அருகி வருகின்றது. கொடிது, கொடிது காலனின் கொடுமை என்றுதான் சொல்லவேண்டும். அண்மையில் இரண்டு தமிழன்பர்கள் இறந்தார்கள் என்ற செய்தி அம்பென நெஞ்சினைத் துளைத்துச் சென்றது. அந்தோ எவ்வளவு கொடுமை! காண முடியுமா அந்த அறிவுக் களஞ்சியங்களை இனி? கேட்க முடியுமா அந்த இன்னிசைக் குரல்களை இனி? பார்க்க முடியுமா அந்த மேதக்கோரின் முகங்களை இனி?

### இரு நட்சத்திரங்கள்

இலக்கியத்தின் உயிர்நாடி கவிதை. அந்தக் கவிதை உலகிற் பேரொளி பரப்பி நின்ற இரு நட்சத்திரங்களும் மறைந்து விட்டன. ஒன்று கவிதை ஆற்றின் ஊற்று நிலமாக விளங்கியது; மற்றொன்று கவிதை ரசனையின் விளை நிலமாயிருந்தது. முதலாமவர் இனிய எளிய நடையில் கவிதை செய்துதவினார்; இரண்டாமவர் அவற்றின் சிறப்புக்களை உணர்த்தி நம்மையும் இரசிக்கச் செய்தார். ஆனால் ஒரே காலத்தில் இருவரையும் இழந்துவிட்டோம். அந்தோ தமிழ் நாட்டிற்கும் தமிழ்மொழிக்கும் பொறுக்க முடியாத பேரிழவு!

கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை என்றால் தமிழ் உலகுக்கு நன்கு தெரியும். நாஞ்சில் நாட்டிலிருந்து தமிழ்க் கவிதையாத்த பெருந்தகையாளர் அவர். பாரதி வகுத்த பாதையில் நின்று, இலக்கண வரம்பு கடவாது, தமிழ்த் தாய்க்குத் தொண்டு செய்த பெருங் கவிஞர். தமிழுடன் அமையாது ஆங்கிலமும் பயின்ற காரணத்தால் இருபதாம் நூற்றாண்டுத் தமிழகம் தவமுடைத்து என்னும் அளவுக்கு அன்னாரின் சேவை பரந்து விரிந்தது. கல்வெட்டுக்களின் உதவியால் சரித்திர ஆராய்ச்சியில் புகுந்தும், பிறநாட்டிலக்கியங்களைத் தாய்மொழியில் எழுதியும் பணிபல புரிந்துள்ளார்கள். இத்தகைய பெருங் கவிஞர் மெள்ள மெள்ள முதுமைக்கிரையாகி, சிறுகச் சிறுக நோய்வாய்ப்பட்டு இறுதியாகத் தமது எழுபத்தெட்டாவது வயதில் இவ்வுலக வாழ்வினின்றும் விடுதலை பெற்றார்கள்.

### முத்துசிவனார்

ஆனால் பேராசிரியர் முத்துசிவன் இவ்வளவு இளமையில் இறந்துவிட்டார் என்பதைக் கேட்க முடியவில்லை; அச் செய்தியை நம்பவும் முடியவில்லை. என்ன கொடுமை செய்துவிட்டான் காலன் என்றே கேட்கத் தோன்றுகிறது. அந்தோ! அவரது மரணத்தில் தான் எத்தனை அவலம்? இரண்டு நாளைய இருதய நோய் விழுமிய வாழ்விற்கே இறுதி தேடிவிட்டது! அவர் முடிவால் தமிழ் நாட்டிற்கு ஈடுசெய்ய முடியாத பெருநஷ்டம் என்பது ஒரு புறம்; மறுபுறம் அருமை மனைவியையும் எட்டுக் குழந்தைகளையும் தவிக்கவிட்டு அவருயிரைப் பிரித்துச் சென்றுவிட்டது, மரணப் பேய்! கடவுளே, ‘இது தான் உலக இயல்பு’ எனச் சொல்லி அமைதியடைய இயலாத அத்தனை அளவுக்கு அவலம் நிறைந்தது முத்துசிவனாரின் முடிவு!

“மெத்த வளருது மேனாட்டில் கலைகள்; அவற்றைத் தமிழிலும் தருதல் வேண்டும்” என்று அன்றொருநாள் கனவு கண்டார், பாரதி, அக்கனவை நனவாக்கி வருவதில் பேராசிரியருக்கும் பங்குண்டு. கவிதைத் திறனாய்வுத் துறையில் தலையிட்டு வெற்றியும் கண்டார் அவர் என்று துணிந்து கூறலாம். அவர் மேற்கொண்ட பணிக்கு மேனாட்டறிஞர்களின் கருத்துரைகளும் கைகொடுத்துதவின. அன்னாரைத் தமிழ் நாட்டு பிராட்வியாகப் போற்றலாம்!

### புகழ்பரவவில்லை

எனினும்தமிழ்நாட்டில் அவர் புகழ் இன்னும் பரவவில்லை. அமைதியை மேற்கொண்டு தமது பெயரை விளம்பரம் செய்துகொள்ளாத ஒரேகாரணத்தினால் அவரை அறிஞர் என்று கூட ஏற்க மறுக்கும்போலிருக்கிறது! ஆதாரமற்ற சில காரணங்களைக் காட்டி இப் பேரறிஞரின் பெருமைகளைத் தாழ்வாக மதிப்பிடுவதைக் காணும்போது உள்ளம் பெரும் கவலைக்குள்ளாகிறது. இந் நிலையில் ‘இதுவா தாய்த் தமிழகத்தின் சீர்’ என்று எண்ணி ஏங்காதிருக்க இயலவில்லை.

நாஞ்சில் நாட்டுக் கவிஞர் ஆசீர்வதித்து விட்டுச் சென்ற தமிழ் நாட்டிற்குத் தலைநகராய் அமையவிருக்கும் சென்னையம் பதியில் நடைபெற்ற அனுதாபக் கூட்டமொன்றில் பேராசிரியரின் நூல்களையும் பண்புகளையும் பற்றிக் குறிப்பிட நேர்ந்தது. கூட்ட முடிவில் ஒருசிலர் தெரிவித்த கருத்து உள்ளத்தை வருத்துகின்றது. அவர் தெரிவித்த கருத்துக்கள் ஏற்றுக்கொள்ளக் கூடியனவா அல்லவா என்ற மயக்கம் ஏற்படினும், வேறொரு முக்கியமான பயனின் பேரில் அவற்றை இங்கு குறிப்பிட வேண்டியிருக்கின்றது. “திரு. முத்துசிவனின் பணி மிகச் சிறந்த பணி; அவற்றைப் பற்றி நன்றாகப் பேசினீர்” எனத் தொடங்கி “You are the best advocate for a wrong idea” என்று முடித்தார் அந்தத் தமிழ் அன்பர். வியப்பும் திகைப்பும் நேரிடக் காரணம் கேட்டபோது வெளிவந்த கருத்துக்களும் அவற்றின் அடிப்படையில் அன்பர் கண்ட முடிவும்........................!

### அவர்கருத்து

1. திரு. முத்துசிவனாரின் இலக்கிய அறிவு பெரும்பாலும் கம்பராமாயணத்தோடு நின்றுவிடுகிறது; அதற்கு அப்பால் அவர் செல்லவில்லை. 2. ஆசிரியர் மிகுதியாக வடமொழிச் சொற்களைக் கையாளுகின்றார். 3. தமிழுணர்ச்சியே இல்லாத ஓர் ஆசிரியர் அவர். தமிழுணர்ச்சி உடையவராக இருந்திருந்தால், இவர் ஒரு தடவை சொன்னாற் போதும், டக்டர் அழகப்பச் செட்டியார் அங்கொரு தமிழ்க் கல்லூரி ஏற்படுத்தியிருப்பார். தமிழ் நாட்டின் தற்போதைய சூழ்நிலையைப் பொறுத்து, ‘பகுத்தறிவு முழக்கத்தின்’ பிரதிபலிப் பென்று முதலிரண்டு குறிப்புக்களையும் நாம் புறத்தொதுக்கி விடலாம். ஆயினும் ஒரு சிறு குறிப்பு இங்கு இன்றியமையாததாகத் தோன்றுகின்றது. பிறமொழிகளின் உதவியின்றித்

(தொடர்ச்சி 8 ஆம் பக்கம் பார்க்க)

வெந்தணலுக்கிரையான

**வீரமுனை**

**விவரண காவியம்**

❊

**தீயுண்ட வீரமுனை**

ஆக்கியோன்:
வி. கி. இராசதுரை
‘ஜீவா.’
குருமண்வெளி,
களுவாஞ்சிக்குடி, E. P.
விலை ரூ. 1.

# அகநானூறு

### 50. நெய்தல்

[தோழி பாணனுக்குச் சொல்லியது.]

கடல்பா டவிந்து
 தோணி நீங்கி
நெடுநீ ரிருங்கழிக்
கடுமீன் கலிப்பினும்
வெவ்வாய்ப் பெண்டிர்
 கெளவை தூற்றினும்
மாணிழை நெடுந்தேர்
 பாணி நிற்பப்
பகலும் நம்வயி
 னகலா னாகிப்
பயின்றுவரு மன்னே
 பனிநீர்ச் சேர்ப்பன்
இனியே;
மணப்பருங் காமந்
 தணப்ப நீந்தி
வாரா தோர்நமக்
 கியாஅ ரென்னாது
மல்லன் மூதூர்
 மறையினை சென்று
சொல்லி னெவனோ
 பாண வெல்லி
மனைசேர் பெண்ணை
 மடிவா யன்றில்
துணையொன்று பிரியினுந்
 துஞ்சா காணெனக்
கண்ணிறை நீர்கொடு
 கரக்கும்
ஒண்ணுத லரிவையா
 னென்செய்கோ
 வெனவே.

—கருவூர்ப் பூதஞ்சாத்தனர்

இ - ள்: பாண! - பாணனே!, பனிநீர்ச் சேர்ப்பன் - குளிர்ந்த நீரையுடைய கடற்கரையையுடைய நந் தலைவன், கடல்பாடு அவிந்து தோணி நீங்கி - கடல் ஒலி தணியுமாறு பெருக்கொழிதலால் தோணிகள் செலவற்று, நெடுநீர் இருங்கழி கடுமீன் கலிப்பினும் - மிக்க நீரையுடைய கரிய கழிக்கரையில் அஞ்சத்தக்க (சுறு முதலிய) மீன்கள் செருக்கித் திரியினும், வெவ்வாய்ப் பெண்டிர் கெளவை தூற்றினும் - கொடுமையையே பேசும் வாயையுடைய பெண்கள் அலரை (பழிமொழிகளை)ப் பலரறியக் கூறினும், மாண் இழை நெடுந்தேர் பாணி நிற்ப - மாட்சியுறச் செய்த பெரிய தேர் தாமதித்து நிற்க, பகலும் நம்வயின் அகலானாகிப் பயின்று வரும் மன் - (இரவிலன்றிப்) பகலினும் நம்மிடத்தை விட்டுப் பிரியானாகி அடுத்தடுத்து வருவான்; அது கழிந்தது, இனி - இப்பொழுது, மணப்பு அரும் காமம் தணப்ப - (அவ்வாறு) களவுக் காலத்துக் கூடுதற்குக் காரணமாயிருந்த பெரிய (மிக்க) காமம் (வேட்கை) நீங்கலால், நீந்தி வாராதோர் - தாஞ் சென்றிருக்கும் இடத்தைக் கடந்து வாராதவர், நமக்கு யார் என்னாது - நமக்கு என்ன உறவினர் என்று கருதாது, ஒள் நுதல் அரிவை - ஒள்ளிய நெற்றியினையுடைய (நந்) தலைவி, எல்லி - இரவில், மனைசேர் பெண்ணை மடிவாய் அன்றில் - எமது மனையைச் சேர்ந்த பனையிலிருக்கும் மடிந்த (வளைந்த) வாயையுடைய அன்றில்கள், துணை ஒன்று பிரியினும் துஞ்சா காண் என - (ஆண் பெண் என்னும்) இரண்டில் ஒன்று பிரியினும் (அவைகள்) துயிலாதனவாதலை (நெஞ்சே) காண்பாயாக என்று, கண்நிறை நீர்கொடு கரக்கும் - கண்களில் நிறைந்த நீரைக்கொண்டு பின் பிறரறியாமல் மறைக்கும், யான் என் செய்கு என - இதற்கு யான் என்செய்வேன் என்று, மல்லன் மூதூர் மறையினை சென்று எவன்? - வளம் பொருந்திய பழைய ஊரின்கண் பிறரறியாமற் சென்று (நம் தலைவர்க்குச்) சொல்லின் (வருந்தவறு) யாதாகும். எ - று.

(முடிபு) பாண! சேர்ப்பன், கடுமீன் கலிப்பினும் கெளவை தூற்றினும் தேர் பாணி நிற்ப, பகலும் அகலானாகிப் பயின்று வருமன், இனி, காதல் தணப்ப நீந்திவாராதோர் (நமக்கு) யாரென்னாது, நீ மறையினை சென்று அரிவை துஞ்சாகாண் எனச் சொல்லிக் கரக்கும் இதற்கு யான் என் செய்கோ எனச் சொல்லின் எவனோ என முடிக்க. யார் என்னாது நீர்கொண்டு கரக்கும் என இயைக்க.

(விரிவுரை) கழி - கடற்குட்டம். கடுமீன் - சுறு முதலியன. கடி - அச்சம். கடி - கடு எனத் திரிந்து நின்றது. தோணியிற் சென்று மீன் பிடிப்பாரின்மையின் செருக்கும் என்றூர். தலைவன் வருகைக்கு அஃதோர் இடையீடு; களவுக் காலத்து அலர் மூதலானவற்றிற்குச் சிறிதும் அஞ்சாது பகலினும் அகலாதிருந்தார் என்க. மன் -

**வித்துவசிரோமணி**
**சி. கணேசையர்**

கழிவிரக்கப் பொருளில் வந்தது. தணப்ப - நீங்குகையாலே. நீந்தி - தாம் சென்றிருக்குமிடத்தைக் கழித்து; பரத்தையர் சேரியைக் கடந்து. நீங்கி என்பது பாடமாயின் நம்மைப் பிரிந்து என்க. மல்லல் மூதூர் - பரத்தையரின் ஆரவார மிகுதியையுடைய சேரி. மறையினை - அவர்களறியாதபடி மறைந்து. மெய்ப்பாடு - அழுகையைச் சார்ந்த பெருமிதம். பயன் - தூதுவிடல். 'அரிவை கரக்கும் இதற்கு யான் என்செய்கோ' எனச் சென்று சொல்லின் எவன் எனப் பாணனை நோக்கித் தோழி கூறினள்.

இனி, துஞ்சாகாண், இதற்கு என்செய்கோ எனச் சொல்லி அரிவை கரக்கும் எனச் சொல்லின் எவனோ? என்றுரைளினும் அமையும்.

(மேற்கோள்) 'கற்பும் காமமும்' என்னுஞ் சூத்திரத்து (தொல். பொருள். கற்பு-11) இச்செய்யுளை எடுத்துக்காட்டி, இதனுள், காம மிகுதியால் கண் தாமே அழவும், கற்பிற் கரக்கும் எனத் தலைவி பொறையும் நிறையும் தோழி பாணற்குக் கூறினள்; அவன் தலைவற்கு இவ்வாறே கூறுவன் எனக் கருதி. இனி என்றதனுற் கற்பும் பெற்ரும் என்றூர் நச்சினர்க்கினியர். 'இன்பத்தை வெறுத்தல்' என்னுஞ் சூத்திரத்து (தொல். பொருள். மெய்ப் - 22) இன்பத்தை வெறுத்தல் என்பது இன்பத்திற் கேதுவாய பொருள் கண்டவழி அவற்றின் மேல் வெறுப்புத் தோன்றுதல் என்று கூறி, அதற்கு, 'எல்லி, மனைசேர்.........என் செய்கோ எனவே' என்னும் பகுதியை எடுத்துக் காட்டினர் பேராசிரியர்.

[உரிமையுடையது]

# சிங்களமும் தமிழும் கட்டாய பாடமாக வேண்டும்

கிழக்குத் தபால் : நமது நிருபர்

மட்டக்களப்பு 13-10-54

வெப்ப மிகுதியாற் சென்ற சில மாதங்களாக இப்பகுதி மக்கள் பெரும் அவதியுற்றனர். கால்நடைகள் கண்ணீர் விட்டுக் கதறின. இப்போது தான் வருணபகவானின் கடைக்கண் பார்வை இங்கு கிடைத்திருக்கிறது. கமக்காரர் உழுது பண்படுத்தும் வேலையில் ஈடுபட்டு கருமம் ஆற்றிவருகின்றனர். சென்ற வருடத்தைவிட இவ்வருடம் இயந்திரக்கலப்பை இப்பகுதி மக்களின் கவனத்தை ஈர்த்துள்ளது.

**யாழ்ப்பாணப் பேச்சு**

சமீபத்தில் நடைபெற்ற சுற்றுப்பிரயாணத்தின் போது முதலமைச்சர் சேர் ஜோன் கொத்லாவல அவர்கள் யாழ்ப்பாணத்தில் ஆற்றிய விரிவுரையை, அதாவது சிங்களமும் தமிழும் இலங்கையின் அரசாங்க மொழிகளாக்கப்படும், தமிழுக்கும் சிங்களத்திற்கும் நாட்டில் சரிசமமான இடம் அளிக்கப்படும் என்ற உறுதி மொழியைப் பத்திரிகைகளிற் படித்ததும் ஆறுதல் அடைந்துள்ளனர். என்றாலும் சொல்லில் மட்டும் மக்கள் திருப்தியுறவில்லை. சொல்லும் செயலும் ஒன்றுகும் நிலையையே மக்கள் எதிர் பார்க்கின்றனர். தமிழ் பேசும் மக்கள் வாழும் பகுதியிலே தமிழும், சிங்களம் பேசும் மக்கள் வாழும் பகுதியில் சிங்களமும் அரசாங்க மொழிகளாக அரசியலார் திட்டம் வகுத்தகாலை இலங்கை முழுவதும் தமிழும் சிங்களமும் அரசோச்சும் மொழிகளாக விளங்கவேண்டும் என்ற கருத்தை ஆணித்தரமாக எடுத்துக் கூறுவதிற் பெரும் பங்கு கொண்டவர்கள் இப்பகுதி மக்களே எனலாம். சிங்களமும் தமிழும் இலங்கை முழுவதும் அரசோச்ச வேண்டும் என்ற திருத்தப் பிரேரணையை ஆரம்பத்தில் ஆட்சி மன்றத்திலே பிரேரித்தவர் இப்பகுதிப் பிரதிநிதி ஒருவரே என்பதும் இங்கு நோக்கத்தக்கது. முதலமைச்சர் சேர் ஜோன் தாம் குறிப்பிட்டது போல அரசாங்க மொழிக் கொள்கையை அரசியற் சட்டத்தில் இடம்பெறச் செய்து தமிழ்ப்பேசும் மக்கள் வாழும் பிரதேசத்திற் சிங்களமும், சிங்களம் பேசும் மக்கள் வாழும் பிரதேசத்தில் தமிழும் கட்டாய பாடமாகக் கற்பிக்க ஏற்ற வழிவகைகளைச் செய்யவேண்டுமென்பதை மிகவும் உறைப்பாக எடுத்துக்கூற விரும்புகிறோம்.

### கல்லோயா அபிவிருத்திச்சபை

சமீபகாலம்வரை கல்லோயா குடியேற்றக்காரர்களின் விருப்பு வெறுப்புகளைப் பொருட்படுத்தாமல் அப்பகுதி ஆட்சி மன்ற உறுப்பினர்களையும் கலந்துகொள்ளாமல் தனியரசு புரிந்துவந்தனர். கல்லோயா அபிவிருத்திச் சபையினர். இப்போது இப்பகுதி ஆட்சி மன்ற உறுப்பினர்களின் ஆலோசனைகளையும் ஏற்றுக்கொள்ள முன்வந்துள்ளதாக அறிகிறோம். இதனுல் மக்களின் குறைகள் தீருமென்பதற்கையமில்லை.

## தம்பலகாமத்தில் காந்தி விழா

வேற்றுமைகள் நீங்குதற்குப் பிரார்த்தனை ஒன்றே தகுந்த வழி. காந்தியடிகள் கூட்டுப் பிரார்த்தனையாலேயே எத்தனையோ அரும் பெருஞ் செயல்களைச் சாதித்தார். தீய சக்திகளை மாற்றியமைத்தார்.

இவ்வாறு சென்ற 10-10-54 ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்குத் தம்பலகாமம் ஸ்ரீ சாரதாவித்தியாலயத்திற் கொண்டாடப்பட்ட காந்தி விழாவில், வீரகேசரி ஆசிரியர், திரு. கே. பி. ஹரன் அவர்கள் குறிப்பிட்டார்கள். பண்டிதர் திரு. ஐ. சரவணமுத்து தலைமை தாங்கினர். வித்தியாலய மாணவிகளின் காந்தியப் பாடலுடன் கூட்டம் ஆரம்பமாயிற்று. தலைமையுரைக்குப்பின், திரு. கோ. இராசகோபால், திரு. கே. பி. ஹரன் ஆகியோர் பேசினர். ஆசிரியர் பொ. கந்தையா அனைவருக்கும் நன்றி கூறினர்.


தமிழிற் சிறந்த முறையில் எழுதி வெளியிடப்பெற்ற
VIஆம், VIIஆம், VIIIஆம் வகுப்புகளுக்குரிய

**அக்ஷர கணிதம்**
[விடைகளுடன்]
**கேத்திர கணிதம்**

பரமேசுவர (தமிழ்) ஆசிரிய பயிற்சிக் கலாசாலைக் கணிதப் பேராசிரியரா யிருந்தவரும், இப்போது யாழ்ப்பாணம் பரமேசுவரக்கல்லூரிக் கணித - விஞ்ஞானப் பகுதிப் பிரதம ஆசிரியரா யிருப்பவருமாகும்

**திரு. ச. சிதம்பரப்பிள்ளை, B. A., B. Sc., அவர்களால்**

ஆறும் வகுப்புத் தொடக்கம் தொடர்ந்து பயிலக்கூடிய முறையில், பல வருடப் போதன பயிற்சி அனுபவத்தைக்கொண்டு செம்மையான தமிழில், இலகுவான நடையில் எழுதப்பட்டுள்ளன.

— வித்தியா பிரசுர சபையினரால் அங்கீகரிக்கப்பெற்றுள்ளன —

ஒவ்வொன்றின் விலை ரூபாய் 3-00 — தபாற்செலவு சதம் 35.

எல்லாப் பிரபல புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்

தனலக்குமி புத்தகசாலை, சுன்னுகம்


## மட்டக்களப்பு இந்து மகளிர் மன்றம்
### இசைக் கழகமும் சமய வகுப்புகளும்

இம் மன்றமானது, ஞாயிறு வாரந்தோறும் கோட்டைமுனையிலும் புளியந்தீவிலும் சைவ சமய வகுப்புகளையும், வெள்ளிக்கிழமை மாலைதோறும் ஆனைப்பந்திப் பிள்ளையார் கோவிலில் கூட்டுப் பிரார்த்தனையையும் நடத்திவருகின்றது. இவற்றோடு இசை வகுப்புகளையும் நடத்தி மாணவியர்க்குப் பயிற்சியளிப்பதற்கென்று, சென்ற விஜய தசமியன்று (7-10-54) காலை 8 மணிக்கு இசைக் கழகம் ஒன்றையும் தொடங்கியுள்ளார்கள்,

அன்று 40 பேர் வரை வகுப்புகளிற் சேர்ந்தனர். மன்றத்தின் செயலாளரும், மட்டக்களப்பு அரசினர் ஆசிரியர் கல்லூரித் தமிழ் விரிவுரையாளருமாகிய திருமதி கங்கேஸ்வரி-கந்தையா அவர்கள், சாதி, மத பேதமின்றி எல்லாரும் இவ்வகுப்புகளிற்கலந்து பயனடைய வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள்.

வாய்ப்பாட்டு, வயலின் என்பவற்றில் வகுப்புகள் தொடங்கப்பட்டுள்ளன. இவற்றின் ஆசிரியர்களாக முறையே சங்கீத பூஷணம் எஸ். தங்கராசா அவர்களும், செல்வி கனகாம்பிகை-அம்பலவாணபிள்ளை அவர்களும் நியமிக்கப்பட்டிருக்கின்றனர். இசை வகுப்புகள் வாரந்தோறும் புதன், சனிக் கிழமைகளில் மாலை 4 மணி தொடக்கம் மட்டக்களப்பு விவேகாநந்த மண்டபத்தில் நடக்கின்றன. வீணையிலும் பயிற்சி வகுப்புகள் நடத்த ஒழுங்குகள் செய்யப்படுகின்றன. ஆண்டுதோறும் பரீட்சை நடத்தி மாணவரின் தரம் அறிந்து பத்திரங்களும் வழங்க மன்றம் திட்டம் இட்டுள்ளது.

தூய அன்னை ஸ்ரீ சாரதாமணி தேவியாரின் நூற்றாண்டு விழா (17-10-54) ஞாயிற்றுக்கிழமை வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத்திற் கொண்டாடப் பெறும். இக் கட்டுரை அன்னையாரின் தூய வாழ்க்கையின் ஓர் ஏடாகும்.


# தூய அன்னையார்

— சகோதரி நிவேதித அம்மையார் —

தூய அன்னையாரின் சரித்திரம் நன்கு அறியப்பட்டதுதான். ஐந்து வயதில் மணம் புரியப்பட்டதும், அவர்க்குப் பதினெட்டு வயதாகும்வரை கணவரால் மறக்கப்பட்டதும், பின்னர், தாயாரது உத்தரவு பெற்றுத் தமது கிராமவீட்டிலிருந்து கங்கைக் கரையிலுள்ள தக்ஷிணேசுவரக் கோயிலுக்குக் காலால் நடந்து சென்று அவர் முன்பு தோன்றியதும், அக்கணவர் தமக்குள்ள சம்பந்தத்தை நினைத்துக் கொண்டதும், ஆனால் தாம் பின்பற்றிவரும் வாழ்க்கையின் இலக்ஷியங்களைப்பற்றிப் பேசியதும், அம்மையார் அதற்கு இணங்கி அவர்க்கு அவ்வாழ்க்கையில் வெற்றி யுண்டாகுமாறு விரும்பிப் பிரார்த்தித்ததும், அவர் குருவாகித் தமக்குப் போதிக்க மட்டும் வேண்டியதும்—இவையெல்லாம் அம்மையாரைப்பற்றிப் பலமுறை கூறப்பட்டவையேயாம். அக்காலமுதலே, அதே தோட்டத்திலுள்ள ஒரு கட்டடத்திலே ஒரேசமயம் தவக்கன்னியாகவும், பாரியாகவும், எப்போதும் அவருடைய சீடர்களுள் முதன்மை வகிப்பவராயும், அவரது பக்கத்தே பலவருடங்கள் நன்றியோடு அவர் வாழ்ந்து வந்தார். அம்மையாரைப் பற்றிய பொறுப்பைக் கணவர் ஏற்றுக்கொண்டபோது அம்மையார் சிறுமியாயிருந்தார்; அமைதியாகப் பேச்சு நிகழ்ந்துவரும் சமயங்களில், தாம் பெற்ற பயிற்சி எத்தனைதுறைகளிற் பரந்து விரிந்திருந்தது என்பதை அம்மையாரே சிலசமயம் சொல்லுவார். கணவர் ஒழுங்கிலே மிக்க பிரியமுடையவராயிருந்தார்; பகற்காலத்தில் விளக்கையும் அதன் சம்பந்தமான பொருள்களையும் எங்கே வைக்கவேண்டும் என்பதுபோன்ற அற்பமான விஷயங்களையும் தம் மனைவியார்க்குப் போதித்தார்., கணவர் அற்பமான உடை முதலியவற்றைப் பொறுக்கமாட்டார்; கடுந்தவம் இயற்றியிருந்தும், அவர் கவர்ச்சி நலனிலும் அழகிலும், சாந்தமும் மேன்மையும் கலந்த நடையிலும் பிரியம் வைத்திருந்தார்......

ஸ்ரீராமகிருஷ்ணர் அவர்பால் மிக்க அருமை பாராட்டி வந்தார். ஆயினும் அம்மையாரிடம் இருந்த இயல்புகளுள் எவர்க்கும் தெற்றெனத் தெரிவது ஒன்று யாதெனின், அவர் தாம் வழிபட்டுவரும் கணவரைப்பற்றிப் பேசும்போது அவரிடம் விளங்கிய சற்றும் பற்றற்ற தன்மையே. அவரைச் சூழ்ந்திருப்பவர் கூறுவதுபோலவே, நல்லகாலத்தும் பொல்லாத காலத்தும் அம்மையார் அவரது மொழி ஒவ்வொன்றையும் நிறைவேற்றும் கருத்தோடு பாறைபோல அசையாது நிற்பார். 'குருதேவர்' என்ற பெயராலேயே அம்மையார் அவரை அழைப்பார்; அம்மையார் கூறும் எந்த வார்த்தையிலும் கணவர்சம்பந்தப்பட்டமட்டில் தமது சுயேச்சையை எள்ளளவேனும் வற்புறுத்துதல் என்பது காணப்பட்ட தில்லை......

இந்தியப் பெண்மையின் இலக்ஷியம் சம்பந்தமாக, அம்மையாரே ஸ்ரீராமகிருஷ்ணரது அறுதியான எடுத்துக் காட்டாகிறார் என்று எப்போதும் எனக்குத் தோன்றிக் கொண்டிருக்கிறது. ஆனால் அவர் பண்டைய மரபினின்றும் உதித்தவருட் கடைசியானவரா? அன்றேல் புதியதோர் மரபினைத் தொடக்குபவரா? மாதருள் மிக எளிமையானவராய், அடையக்கூடிய ஞானத்திற்கும் இனிமைக்கும் அவர் இருப்பிடமாகிறார்.) ஆயினும் அவரது மரியாதையிலுள்ள காம்பீரியமும் அவரது பெருமையற்ற கரவற்ற உள்ளமும் அவரது ஞானமகிமைக்குக் கிட்டத்தட்ட இணையாக ஆச்சரியம் வாய்ந்ததாகிறது. அவரிடம் கேட்கும் கேள்வி எவ்வளவு புதிதாயினும் சிக்கலாயிருப்பினும், உதாரமான மஹத்தான ஒரு தீர்ப்பை அளிப்பதற்கு அவர் சிறிதும் தயங்கியதை யறியேன். அவரது வாழ்வு ஒரு நீண்ட அமைதியார்ந்த பிரார்த்தனை மயமாகிறது. அவரது முழு அனுபவமும், ஞானஆட்சி நிகழும் நாகரீகத்தைச் சார்ந்ததாகின்றது. ஆயினும் அவர் எந்தச் சமயத்திலும் உசிதமான முறையிலே காரியம் இயற்றும் திறமை வாய்ந்திருந்தார். அவரைச் சூழ்ந்திருப்பவருள் யாரேனும் தமது தவறான செயலிற் பிடிவாதம் உடையராயினும், அதனால் அவர் தொந்தரவு அடைவதில்லை. அப்போது அவரிடத்திற் காணப்படும் அடையாளம் ஒரு புதுமையான அமைதியும் ஆழ்ந்த சிந்தனையும் தான். அவரால் அறியமுடியாத சமூகக் கிளர்ச்சிகளினின்றும் உதிக்கும் யாதேனும் ஒரு மனக்குழப்பத்தையோ மனத்தாங்கலையோ அவரிடம் ஒருவர் உரைக்கின்றனரா? பிழையாத ஞானக்காட்சியோடு அவர் விஷயத்தில் நேரே உட்புகுந்து, அச்சங்கடத்தைத் தீர்க்கும் மனநிலையில் கேட்பவரை வைத்துவிடுவார். கடுமையாயிருக்கும் அவசியம் உண்டா? எவ்வித அசட்டுத்தனமான தாக்ஷண்யத்தாலும் அவர் சிறிதும் அதற்குத் தயங்கமாட்டார்......



தூய அன்னை ஸ்ரீ சாரதாமணி தேவியார்

**இந்தியப் பெண்மையின் இலக்ஷியஞ் சம்பந்தமாக, அம்மையாரே ஸ்ரீராம கிருஷ்ணரது அறுதியான எடுத்துக்காட்டாகிறார்.**

எழுதத் தெரியாவிடினும், அவர் கல்வியறிவற்ற ஒரு மாதரென்று எண்ணிக் கொள்வது தவறாகும். வைதிக காரியங்களையும் லௌகிக காரியங்களையும் நிர்வகிப்பதில் நீண்ட சிரமம் மிகுந்த அநுபவம் அம்மையார்க்கு இருந்தன. அன்றியும், இந்தியாவின் பெரும் பகுதியில் உள்ள புண்ணிய தலங்கள் பலவற்றிற்கும் யாத்திரை சென்றுள்ளார். மேலும் ஸ்ரீராமகிருஷ்ணரது பத்தினியாரான முறையில் அம்மையார் தமது குணத்தை மேம்படுத்திக் கொள்வதற்கு இயன்றவரை மிக உயர்ந்த சந்தர்ப்பத்தைப் பெற்றார் என்பதையும் நாம் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். ஒவ்வொரு சமயத்தும், பெரியாரோடு இணங்கியிருக்கும் பெரும்பேற்றை எய்தியிருந்ததற்குத் தாம் அறியாமலே அவர் சான்று பகர்கிறார்.

ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்

## தமிழர் ஐக்கிய முன்னணி

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

லாம். இவ்வரசாங்கத்தில் குறுகிய தேசிய மனப்பான்மை, அதிகார வெறி முதலியன வெளிப்படையாகத் தெரிகின்றன. இத்தகைய அரசாங்கத்தை எதிர்க்க ஓர் இயக்கத்தை நிறுவுதல் வகுப்புவாதமாகாது. இன்று, தமிழ்ப்பேசும் மக்களிடையே ஐக்கியமேற்படுத்தியே ஆகவேண்டும்'' என்றார்.

தமிழ்க்காங்கிரஸ்தலைவர் ஜீ. ஜீ. பொன்னம்பலம் கூட்டத்திற்கு வரஇயலாமல் இருந்ததால் அக் கட்சியின்சார்பாக நியாயவாதி எஸ். சரவணமுத்து பேசினார். அவர் பேசும்போது சபையோர் கேள்விகளை அடுக்கித் தொந்தரவு செய்தனர். தமிழ்மகனின் தன்மானம் குன்றிக்கொண்டே போவதாகவும், அதை நிறுத்தவேண்டியது தமிழனின் கடமையென்றும் அவர் குறிப்பிட்டார்.

எல்லாளன் முன்னணிக் கழகப் பிரதிநிதி ஆரம்பிக்கும்போதே, தமிழ்க் காங்கிரஸ் தலைவரை நிந்திக்கத்தொடங்கினர். ஆனால், சில நிமிஷ நேரங்கூட அவர் பேசமுடியவில்லை, தமிழ் மக்களிடையே ஒற்றுமை ஏற்படுத்தவேண்டும் என்ற முழுஆர்வத்துடன் மண்டபத்தினுள்ளேயும் வெளியேயும் குழுமியிருந்த ஆயிரக்கணக்கான மக்கள் பழங்கதையைப் புரட்டிப் பறைசாற்றிய அப்பேச்சாளரைப் பேசவிடவில்லை. திரு. பொன்னம்பலம் அவர்களை ஆதரிக்காதவர்கள்கூட அப்பேச்சை வெறுத்தது குறிப்பிடத்தக்கது. பழைய ஊழல்களைப் புரட்டிப் புரட்டி மோந்து பார்க்குமளவும், எதிர்காலத்திலும் தமிழரிடையே ஒற்றுமை ஏற்படப்போவதில்லை யென்றே பலரும் பேசிக்கொண்டனர். இந்த எல்லாள முன்னணிக்கழகத்தால் தமிழ் மக்களுக்கு நன்மைதான் இல்லாவிட்டாலும் தீமையாதல் ஏற்படாதிருக்க வேணுமென்று பலரும் விரும்புகின்றனர்!

ஈழத்தமிழ்மொழியாளர் முன்னணியினராற் கூட்டப்பட்ட இக்கூட்டத்துக்கு வித்துவான் என். ஏ. ஜே. வேதநாயகம் தலைமை வகித்தார். திரு. ஏ. இராகவன், திரு. எம். பி. பாரதி, டக்டர் ஈ. எம். வி. நாகநாதன் ஆகியோர் பேசினர்.

## வைத்தீசுவர வித்தியாலயம்

# புதிய கலா மண்டபம்

யாழ்ப்பாணத்திலுள்ள ஸ்ரீ இராம கிருஷ்ண சங்க வைத்தீசுவர வித்தியாலயப் புது மண்டபத் திறப்பு விழா 16-10-54 சனிக்கிழமை மாலை 6-30க்கு நடைபெறும். ஸ்ரீமத் சுவாமி யதீஸ்வரானந்தர் அவர்கள் புது மண்டபத்தைத் திறந்து வைப்பார்கள். அன்று மாலை 6 மணிக்கு வண்ணை வைத்திசுவர ஆலயத்திலிருந்து ஊர்வலம் ஆரம்பமாகும். பகிரங்கக் கூட்டம் டக்டர் வி. குருசுவாமி அவர்கள் தலைமையில் நடைபெறும். ஸ்ரீமத் சுவாமி யதீஸ்வரானந்தர், ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர், வழக்கறிஞர் வி. நாகலிங்கம் ஜே. பி., ஸ்ரீமத் சுவாமி பிரேமாத்மானந்தர் ஆகியோர் விரிவுரைகள் ஆற்றுவார்கள்.

கவின்மிகு இம் மண்டபத்தைப்பற்றி எல். பி. சாமி எழுதுவதாவது:-

இப்போதெல்லாம் நாட்டின் பல் பாகங்களிலும் களியாட்ட விழாக்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. ஏன் இவர்கள் இந்த விதமான விழாக்கள் வைக்கிறார்கள்? என்று நம்மிற் பலர் கேட்டால் அவர்களிடமிருந்து வரும் பதில் 'எங்கள் கல்லூரியிற் கட்டடங்கள் கட்டுவதற்கும் உபகரணங்கள் வாங்குவதற்கும் பணம் எம்மிடம் போதியளவு இல்லை. ஆனபடியினாலேதான் இந்த விழாவை ஏற்பாடு செய்துள்ளோம். உங்கள் உதவியும் அதிகம் தேவைப்படுகிறது' என்பதேயாகும். சேர்ந்த பணத்தைக் கொண்டு கட்டடம் அல்லது ஏதாவதொரு கொட்டிலாவது கட்டியுள்ளார்களா இல்லையா என்பது வேறு விஷயம்.

சென்ற வருடம் ஓகஸ்ட் மாதத்தில் யாழ்ப்பாணம் இராமகிருஷ்ண சங்க வைத்தீசுவர வித்தியாலயமும் ஒரு கலை விழாவை நடாத்தியது. ஏற்பாடு செய்தவர்கள் எதனை அதிக ஆவலுடன் எதிர்ப்பார்த்து ஏங்கி இருந்தார்களோ அது... பணம்... போதியளவு கிடைக்கா விட்டாலும் தாராளமாகக் கிடைத்தது. கிடைத்த பணத்தைக் கொண்டு என்ன செய்தார்கள்? அதைத்தானே கூறிவிடுகிறேன்

### புது மண்டபம்

யாழ்ப்பாணத்திலிருந்து மானிப்பாய் வீதி வழி செல்வோர் ஐக்கிய லாப நிதிச் சந்தியை அடையும்போது கிழக்கே சற்று நிமிர்ந்து பார்த்தால் அனைவர்களின் கவனத்தைக் கவரக்கூடிய புதிய கட்டடம் உருவாகியுள்ளது தெரியும். ஆமாம்; வைத்தீசுவர வித்தியாலயத்தின் இடநெருக்கடியை ஓரளவு தீர்ப்பதற்காக எழுப்பப்பட்ட கலா மண்டபம்தான் அது. இதையிட்டு நாம் ஆச்சரியப்பட முடியாது. ஏனெனில் இப்பொழுது யாழ்ப்பாணத்தில் எங்கும் வித்தியாலயப் புதுக் கட்டடத்தைப் பற்றிய பேச்சுத்தான்.

உன்னதமான அழகிய கட்டடம். முன் பக்கத்தில் வரிசை வரிசையான இலச்சினை. முகப்பில் இராமகிருஷ்ண சங்கத்தின் சீரிய முத்திரை. ஓடு போடாமல் சீமெந்தாலேயே கட்டப்பட்ட கூரையுடன் கூடிய முன்வாயில் முகப்பு. வரிசை வரிசையாகக் கட்டப்பட்ட வண்ண வண்ணத் தூண்களிலே வகைவகையான எழுதக வேலைப்பாடுகள். வாயிலிலே வருவோரை,

(தொடர்ச்சி 7 ஆம் பக்கம் பார்க்க)

## வைத்தீசுவர வித்தியாலயம்

### தூய அன்னையாரின் விழா

தூய அன்னை ஸ்ரீ சாரதாமணி தேவியாரின் நூற்றாண்டுவிழா 17-10-54 ஞாயிற்றுக்கிழமை காலை 9-30க்கு ஆரம்பமாகி நடைபெறும். ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள் தலைமை தாங்குவார்கள். திரு. க. இராமச்சந்திரன், செல்வி ஞானேஸ்வரி தம்பு ஆகியோர் விரிவுரைகள் ஆற்றுவார்கள். மாலை நிகழ்ச்சிகள் 5 மணிக்கு நாதசுவரக் கச்சேரியுடன் ஆரம்பமாகும். நீதிபதி திரு. பி. ஸ்ரீஸ்கந்தராஜா அவர்களின் தலைமையில் நடைபெறும். ஸ்ரீமத் சுவாமி யதீஸ்வரானந்தர், ஸ்ரீமதி மீனாட்சி பொன்னுத்துரை, ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் ஆகியோர் விரிவுரைகள் ஆற்றுவார்கள்.

ஈழகேசரி

சுன்னாகம், ஜய ஐப்பசி ௧
— காந்தி ஆண்டு 86 —
பேசுகந்தர் இல. 305

# டில்லி ஒப்பந்தம்

நட்புறவு உணர்ச்சியுடனும் ஒத்துழைப்பு மனப்பான்மையுடனும் ஏற்பட்டுள்ள டில்லி ஒப்பந்தம் இலங்கை இந்தியச் சிக்கலுக்கு நிலையான பரிகாரம்தேடியிருக்கின்றதெனக் கூறிவிட முடியாது. இலங்கையிலுள்ள இந்தியர்களின் நிலையைப் பரிசீலனைசெய்து சிக்கலைத் தீர்ப்பதில் இரு நாடுகளுக்குமிடையே கருத்து வேற்றுமை இருப்பதாகவே இப்போதும் தோன்றுகின்றது. இவ் வேறுபாடுகளையேற்று இலங்கைவாழ் இந்தியர்கள் இலங்கைக் குடிகளாகவோ அன்றி இந்தியக் குடிகளாகவோ பதிவுசெய்யப்படவேண்டும். இவ்வேலையை விரைவில் முடித்து வைப்பதே ஏற்றதென இலங்கை முதல் அமைச்சரும் இந்திய முதல் அமைச்சரும் தமது சகாக்களுடன் ஆலோசித்து ஒரு முடிவிற்கு வந்துள்ளனர். இலங்கைக் குடிகளாகவோ அன்றேல் இந்தியக் குடிகளாகவோ இருந்து வருவோரின் தொகையை இதன்மூலம் குறைத்துவிடலாமெனினும் இரு நாட்டினரும் ஏற்றுக்கொள்ளாத வகையில் 'நாடற்றவர்கள்' எனச் சொல்லப்படுவோர் அல்லற்படுவது விரும்பத்தக்கதல்ல.

இலங்கைக் குடியுரிமை பெறாத இலங்கைவாழ் இந்தியரனைவரும் இந்தியக்குடிகளேயென்ற பழைய பாடத்தை இலங்கையரசினர் இன்னும் மறந்தபாடில்லை. இதனை இந்திய அரசினர் ஏற்றுக்கொள்ள மறுக்கின்றனர். இந்தியக் குடிகளாகப் பதிவுசெய்துகொள்ள விரும்புவோரையே இந்தியக்குடிகளாக ஏற்கமுடியுமென இந்திய அரசினர் புதிய ஒப்பந்தத்திலும் சந்தேகத்துக்கிடமின்றிக் கூறியுள்ளனர். இலங்கைக் குடிகளாவதற்கு இந்தியர்கள் செய்துள்ள விண்ணப்பங்களைப் பரிசீலனைசெய்து நீதி வழங்குவதில் இலங்கை நியாயமான முறையில் நடந்துகொள்ளவில்லையென இந்தியா கருதுவதைத் தட்டிக்கழித்துவிடமுடியாது. புதிய ஒப்பந்தம் இவ் வேலையைத் துரிதப்படுத்துமென்பது மகிழ்ச்சிக்குரியது. ஒத்துழைப்பு மனப்பான்மையுடன் இத்துறையில் இலங்கை முயற்சிக்குமாயின் இந்திய பாகிஸ்தான் குடியுரிமைச் சட்டத்தின்கீழ் இலங்கைக் குடியுரிமைவேண்டி நிற்போரின் சிக்கல்களை இருவருடகாலத்திற் கணிசமான அளவுக்குத் தீர்த்துக்கொள்ளலாமென இரு நாட்டினரும் கருதுகின்றனர். இப்படிப் பதிவுசெய்தபின்னரும் இந்தியக் குடியுரிமைக்கோ அன்றி இலங்கைக் குடியுரிமைக்கோ அருகதை அற்றோரின் சிக்கல் ஏற்பட்டேதீரும். இதனை மீண்டும் பரிசீலனை செய்வதென ஒப்பந்தத்திற் கண்டிருக்கின்றது. எனவே நாடற்றவர்களின் எண்ணிக்கையைக் குறைப்பதற்கெனக் கையாளப்படும் முயற்சி விரும்பத்தக்க பலனை அளிக்குமென எதிர்பார்க்க முடியாது.

மெருகேற்றப்பட்ட ஒப்பந்தத்தின்படி இலங்கைவாழ் இந்தியர்கள் இந்தியாவிலுள்ள தங்கள் உறவினருக்குப் பணம் அனுப்புவதுடன் அவ்வப்போது தாய்நாடு சென்று திரும்பும் வசதியுமுண்டு. இலங்கைக் குடியுரிமை பெறுபவர்கள் 55 வயதுவரை இப்போதைய தொழில் துறைகளில் இருந்துவருவதற்குப் புதிய ஒப்பந்தம் இடமளிக்கின்றது. இலங்கையினின்றும் கிளம்பி இந்தியா செல்ல விரும்பும் இந்தியர்களுக்குக் கைம்மாறுத் தொகைகளை (உபகாரப்பணம்) அளிப்பதற்கும் இலங்கை திட்டமிட்டுள்ளது. இவையனைத்தையும் நிறைவேற்றுவதற்கு இரு நாட்டினருக்குமிடையே நட்புறவுணர்ச்சி அதிகம் ஏற்படவேண்டும். இல்லையேல் மீண்டும் மீண்டும் அவநம்பிக்கையும் அச்சமும் உண்டாக இடமுண்டு.

டில்லி யாத்திரை முதலமைச்சர் சேர் ஜோன் கொத்தலாவல அவர்களுக்கு நல்ல வெற்றியை ஈட்டிக்கொடுத்துள்ளது. இந்தியச் சிக்கலைச் சுட்டிக்காட்டி நாட்டிலே அதிருப்தியை உண்டாக்கிவந்த முன்னாள் அமைச்சர் டட்லி சேனநாயகாவையும் எதிர்க்கட்சித் தலைவரான திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயகாவையும் தம்முடன் அழைத்துச்சென்று அவர்களின் முனைப்பை மழுக்கியமை முதலமைச்சரின் இராசதந்திர உச்சமாகும். இந்த மட்டில் ஒரு வெற்றியேயன்றி இரு வருடங்களுக்குப் பின் நிலைமை மீண்டும் பழுதடையின் அது நூதனமாகாது.

## வரவேற்கின்றோம்

இந்து மதத்துக்கு உலகப் புகழ் ஈட்டித்தந்த சுவாமி விவேகாநந்தர் பாரத புண்ணிய பூமிக்குப் புத்துயிரையும் புதுமலர்ச்சியையும் ஊட்டிவைத்தார்கள். பரமஹம்சரின் அருள் நெறியை உலகிடைப் பரப்புவதற்காக ஸ்ரீ ராமகிருஷ்ண சங்கத்தையும் அவர்கள் நிறுவினார்கள். இச்சங்கத்தின் ஆதரவில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றுவரும் வைத்தீசுவர வித்தியாலயத்தின் கலாமண்டபத்தைச் சுவாமி யதீஸ்வரானந்தர் திறந்துவைக்கின்றார்கள். இப் பெருந் துறவி சென்னை, மயிலாப்பூர் மடத்துக்குத் தலைவராகத் திகழ்ந்ததுமன்றி ஜேர்மனி, அமெரிக்கா போன்ற மேனாடுகளுக்குஞ் சென்று சமயப்பணியாற்றியுள்ளார்கள். ஆங்கிலத்தில் அரிய நூல்களையும் ஆக்கியுள்ளார்கள். புது மண்டபத் திறப்புவிழாவிற் பங்குபற்றி விரிவுரை ஆற்றுவதற்காகத் திருச்சிராப்பள்ளி இராமகிருஷ்ண தபோவனத்திலிருந்து 'தர்மசக்கரம்' ஆசிரியர் சுவாமி சித்பவானந்தர் அவர்களும் இங்கு வருகை புரிந்துள்ளார்கள். இப் பெரியார்களின் அறிவுரைகளைக் கேட்டுப் பயனடைவதற்கு இலங்கைமக்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம் இன்று கிடைத்துள்ளது. அருள் நெறி தழைக்க உழைத்து வரும் இத் தவமணிகளை எங்கள் நாட்டுக்கு வரவேற்கின்றோம். அவர்களின் வரவு நல்வரவாகுக!

# பாதை ஓரத்தில்

சம்புத்த ஜயந்தி விழாவைக் கொழும்பிலுள்ள சுதந்திரச் சதுக்கத்திற் சென்ற செவ்வாய்க்கிழமை முதல் அமைச்சர் சேர் ஜோன் கொத்தலாவல ஆரம்பித்து வைத்தார். புனிதமான இவ் வைபவத்தினிடையே ஒரு சில புத்தபிக்குகள் கூக்குரலிட்டுக் குழப்பம் விளைத்ததைப் பத்திரிகையிற் படித்தபோது இந்த விழாவிலுமா இப்படிக் 'கலாட்டா' ஏற்பட வேண்டுமென எண்ணி வருந்தவேண்டியதாயிற்று. அடாதுமழை பெய்தாலும் விடாது நாடகம் நடைபெறும் என்றது போலக் குழப்பம் நடந்தபோதிலும் புத்த ஜயந்தி விழா நடந்தேறியது. முதல் அமைச்சர் தமது விரிவுரையை ஆற்றிய பின்னர் தலைவருக்குரிய இடத்தில் அவர் அமர்ந்தபோது அவருக்கு அந்தஇடத்தை அளிக்க ஒருவருக்கும் உரிமையில்லையெனப் பிக்கு ஒருவர் கூச்சலிட்டார். இலங்கையின் மகாதேசாதிபதி ஒரு கிறிஸ்தவராகையால் விழாவுக்கென அவர் அனுப்பிவைத்த ஆசியுரையை வாசிக்கக் கூடாதென வேறு சில பிக்குகள்நெருப் பெடுத்தனர். அரசாங்கம் இந்த விழாவில் ஈடுபட்டுப் பணஞ் செலவழிக்க வேண்டியதில்லையென ஆர்ப்பரித்தனர் வேறுசிலர். குழப்பம் உண்டாவதைப் பார்த்துப் பத்திரிகைப் புகைப் படக்காரர் படம்பிடிக்க முனைந்தபோது இந்தப் பிக்குகள் தங்கள் முகங்களைக் குடைகளால் மறைத்தனராம். இக்காட்சியைப் படம் பிடித்திருந்தாற் குடைவிரி கோலத்துடன்பிக்குகள் நின்று சண்டைபோட்ட அழகை நன்கு இரசித்திருக்கலாம்.

### கொலைகாரனா?

நிலைமை மோசமாகிக் கொண்டு வருவதைக் கண்ட முன்னாள் முதலமைச்சர் டட்லி சேனநாயகா குழப்பம் நடைபெற்ற இடத்துக்குச் சென்றார். பௌத்த பண்பாட்டிற்கு இருப்பிடமான பெரியாரென மதிக்கப்படும் திரு. டட்லியையும் பிக்குகள் கண்ணியப்படுத்தவில்லை. "வேலை நிறுத்தத்துக்குக் காரணராயிருந்த ஆசாமி இதோ வருகிறார்! கொலைகாரன்! கொலைகாரன்!" என அந்தப் பிக்குகள் அலறிப்புடைத்தனர். டில்லி சென்று இலங்கை இந்தியர் சிக்கலைத் தீர்க்கச் சென்ற டட்லி பிக்குகளிடம் தனக்குச் செல்வாக்கு

'பாட்டைசாரி'

இல்லாததை யறிந்து வந்த வழியைப் பார்த்துத் திரும்பிச் செல்லவேண்டியதாயிற்று.

### காடையர்களா?

இப்படியெல்லாம் அத்துமீறிப் பௌத்த பிக்குகள் யுத்த முஸ்தீப்பில் இறங்கியிருப்பதைச் சகிக்கமுடியாத பாராளுமன்றக் காரிய தரிசி ஒருவர் அவர்களிடஞ் சென்று "பௌத்த மதத்தைப் பாதுகாப்பதற்கு நீங்கள் காட்டும்வழி இதுதானா? என்று உரோசத்துடன் வினவினார். குழப்பத்துக்குத் தலைமை தாங்கிய ஸ்ரீநிவாசதேரர் என்ற பிக்கு, இதைக் கேட்டவுடன் சகிக்க முடியாமற் போலும் "வாருங்கள், நாங்கள் வெளியேறுவோம்" என்று கையை ஓங்கிக் கொண்டே விழா நடைபெற்ற இடத்தை விட்டு வெளிக் கிளம்பினர். இவருக்குப்பின்னால் ஆகக் கூடி இருபது பேர்தான் வால் பிடித்துச் சென்றனர் எனத் தெரிகின்றது. இதற்குப் பின்னராயினும் அமைதி நிலவியதோ என்றால் அதுதான் இல்லை. அப்படியிருந்தபோதிலும் விழா தொடர்ந்து நடைபெற்றதாம். சண்டை போட்ட பிக்குகள் மண்டபத்தைவிட்டு வெளியேறியதைக் கண்ட வேறு சிலர் "அங்கி போட்ட காடையர் அதோ போகின்றனர்" என்று கூறினராம். புனிதன் புத்தனின் பேரில் இத்தனை சீர் கேடுகளும் சுதந்திர மண்டபத்தில் நடைபெற்றிருக்கின்றன. இத்தனையும் உண்மைதானோ எனச் சிலர் எண்ணக்கூடும். நான் ஒன்றையும் நேரிற் பார்க்கவில்லை. பத்திரிகைகளைப் படித்து விட்டுத்தான்எழுதியிருக்கிறேன்.

### அந்த விருந்து

முதல் அமைச்சருக்குக் கோப்பாய் மகளிர் ஆசிரிய கலாசாலையில் 16-10-54 இரவு 8 மணிக்கு நடைபெறவிருக்கும் விருந்து வைபவத்துக்குச் சமூகமளிக்குமாறு காந்தி சேவா சங்கச் செயலாளர் திரு சி. க. வேலாயுதபிள்ளைக்கு அழைப்புக் கிடைத்துள்ளது. அவர் அந்த விருந்து வைபவத்திலே தாம் கலந்து கொள்ள முடியாமைக்குக் காரணங்கள் காட்டி வரவேற்புச் சபைச் செயலாளருக்குக்கடிதம் எழுதியிருக்கின்றார். அதன் பிரதி ஒன்றை வரவேற்புச் சபைத் தலைவரான மாகாண அதிபதிக்கும் அனுப்பியிருக்கின்றார். அத்துடன் பத்திரிகைகளுக்கும் அதனை அனுப்பியிருக்கின்றார். அவர் கூறியுள்ள எட்டுக் காரணங்களில் ஒன்று வருமாறு:

"நமது கருத்துக்களும் சீவிய முறைகளும் சுதேசி — தேசீய அடிப்படையில் அமைந்துள்ள தினாலும் குறித்த விருந்து வைபவத்துக்கு மாத்திரம் அழைக்கப்பட்டிருப்பதால், இது ஒரு கேலியாதுமோவென நாம் அபிப்பிராயப்படுவதினாலும், நாம் அதிற் கலந்து கொள்வது பொருத்தமானதா?"

## திரு. இரா. நெடுஞ்செழியன்

**யாழ்ப்பாணத்தில் விரிவுரை**

சென்னை திராவிட முன்னேற்றக்கழகத் துணைச்செயலாளரும் 'மன்றம்' பத்திரிகையின் ஆசிரியருமான திரு. இரா. நெடுஞ்செழியன் எம். ஏ. 19-10-54 யாழ்ப்பாணம் வருகிறார். அவர் அன்றுமாலை 6 மணிக்கு யாழ்ப்பாணம் நகர மண்டபத்தில் "தமிழர் நாகரீகம்" என்றபொருள்பற்றி விரிவுரை ஆற்றுவார்.

# நெருக்கடியான இறுக்கம் தளர்தல்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தலைமையை இங்கு ஞாபகப்படுத்திக்கொள்ளலாம்.

### தமிழர் முன்னணி

ஒரு நாட்டின் உண்மையான குடி அந் நாட்டின் செல்வத்தைப் பெருக்கும் தொழிலாளிகளேயென்றும், இம்முறையிலே பார்க்குமிடத்து, இலங்கை இந்தியர்கள் எனப்படும் தமிழ் மக்களே இலங்கைக் குடியுரிமைபெறும் முதல் உரித்து உடையவர்களென்றும் டக்டர் ஈ. எம். வி. நாகநாதன் அவர்கள் சென்ற ஞாயிற்றுக் கிழமை வெள்ளவத்தை சைவ மங்கையர் கழகத்திலே நடைபெற்ற பொதுக்கூட்டமொன்றிற் பேசும்போது குறிப்பிட்டார். ஈழத் தமிழ்மொழியாளர் முன்னணியினரால் கூட்டப்பெற்ற இப் பொதுக் கூட்டத்தில் இலங்கைத் தமிழ் மொழியாளர்களை ஒன்று சேர்த்து ஒரு கூட்டுமுன்னணி அமைப்பதையிட்டு ஆலோசிக்கப்பட்டது. இலங்கைத் தமிழ் மக்களின் பல்வேறு கட்சியினரும் கட்சிப்பற்றற்ற பிற பிரமுகர்களும் சமுகமளிக்கவிருந்த இக்கூட்டத்துக்கு எதிர்பார்க்கப்பட்ட பலர் வரவேயில்லை. இக் கூட்டத்தின் முழு விபரத்தையும் இப் பத்திரிகையிற் பிறிதோர் இடத்திற் காண்க.

முதலமைச்சர் சேர் ஜோன் யாழ்ப்பாணம் செல்கையின் போது தமிழுக்கும் சிங்களத்துக்கும் சம உரிமை அளிக்கும்வகையில் அரசியல் அமைப்புத் திட்டத்திலே திருத்தம் செய்வதாக அளித்த வாக்குறுதி சிங்களர் பலரிடையே ஆத்திரத்தைக் கிளப்பியுள்ளது. நகரமண்டபத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் இந் நடவடிக்கையையிட்டுப் பலமான கண்டனம் தெரிவிக்கப்பட்டது. பெரும்பான்மையினருக்குச் சொந்தமான சிங்கள மொழிக்கே இலங்கையில் முதன்மைத்தானம் தரப்படவேண்டியது அவசியம் என அக் கூட்டம் தீர்மானித்தது. மேலும், இலங்கை அரசியற் திட்டத்தைத் திருத்தி அமைத்து இலங்கையை ஒரு பௌத்த அரசு ஆக ஆக்கவேண்டுமெனப் புத்த பிக்குகளின் இன்னொரு சட்டம் தீர்மானித்தது.

### 'ஸ்ரீமான் ஆனந்தம்'

இலங்கைப் பல்கலைக்கழகக் கொழும்புக் கிளையின் தமிழ்ச் சங்கம் "ஸ்ரீமான் ஆனந்தம்" என்னும் தமிழ் நாடகத்தை ஒக்டோபர் 23, 24 என்னும் தேதிகளில், தேஸ்டன் வீதியிலுள்ள கிங் ஜேர்ஜ் மண்டபத்தில் அரங்கேற்ற விருக்கிறது. ஒஸ்கார்வைல்ட் எழுதிய 'The Imporatance of being earnest' என்னும் ஆங்கிலநாடகத்தின் தழுவலாகிய "ஸ்ரீமான் ஆனந்தத்தை"த் திரு. சண்முகநாதன் (சாணு) அவர்கள் தயார்செய்கிறார்கள்.

### முத்தமிழ் விழா

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் ஆதரவில் நடைபெறும் முத்தமிழ் விழா வரும் வெள்ளி, சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் நடைபெறவிருக்கிறது. இவ் விழாவிற் பங்குபற்றுவதற்காக, "மன்றம்" ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன் எம். ஏ. அவர்கள் இங்கு வருகைபுரிந்துள்ளார்.

# 'ஒற்றுமையே உகந்த வழி'
## சாவகச்சேரியில் முதல் அமைச்சர்

யாழ்ப்பாணம் 15-10-54

இலங்கை முதலமைச்சர் சேர் ஜோன் கொத்தலாவல அவர்கள் வெள்ளிக்கிழமை இரண்டாவது தடவையாக யாழ்ப்பாணம் வந்தடைந்தார். முதலமைச்சர் வந்த அதிதீவிர சிறப்புவண்டி காலையிற் சாவகச்சேரிப் புகையிரத நிலையத்தை வந்தடைந்தது. புகையிரத நிலையமும் மைதானமும் நன்கு அலங்கரிக்கப்பட்டிருந்தன. பிரதமர் வண்டியிலிருந்து இறங்கும் சமயம் மங்கல சங்கு வாழ்த்தொலி முழங்கி நல்வரவு கூறியது. அத்துடன் சிறுமிகளின் ஆடல் பாடல்களும் நடைபெற்றன. அவருடன் தபால்பகுதி அமைச்சர் சு. நடேசன், கைத்தொழில் அமைச்சர் சேர் கந்தையா வைத்தியநாதன் ஆகியோரும் வந்திருந்தனர். சாவகச்சேரித் தொகுதிப் பிரதிநிதியும் தற்காலிக போக்குவரத்து அமைச்சருமான திரு. வி. குமாரசுவாமி முதலமைச்சருக்கு மலர்மாலை சூட்டி வரவேற்றார். புகையிரத நிலைய அதிபர் திரு. செல்வத்துரை, யாழ்ப்பாணப்பகுதி வரவேற்புச்சபைத் தலைவரான மாகாண அதிபர் திரு. ம. ஸ்ரீகந்தா, சாவகச்சேரிப்பகுதி வரவேற்புச்சபை இணைச் செயலாளர்களான வழக்கறிஞர் எஸ். கே. திரவியநாயகம், காரியாதிகாரி திரு. சாமுவேல் தம்பையா, வித்தியாதரிசி திரு. எஸ். இராமலிங்கம் ஆகியோரும் மற்றும் பல பிரமுகர்களும் அவருக்கு மாலைகள் அணிவித்தனர்.

காலை 8மணியளவில் அற்புதமாய் அலங்கரிக்கப்பட் இரதத்தில் முதலமைச்சரை அமரச்செய்து அங்கிருந்து ட்றீபேக் கல்லூரிக்கு ஊர்வலமாய் அழைத்துச் சென்றனர். ஊர்வலத்தில் பாடசாலைச் சிறுவர் சிறுமியர் வரிசையாக நின்று முதலமைச்சரை வாழ்த்தினர்

ட்றீபேக் கல்லூரி அதிபர் திரு. கே. எஸ். சரவணமுத்துவும் ஏனைய ஆசிரியர்களும் முதலமைச்சரை வரவேற்றார்கள்.

அடுத்ததாக இந்துக் கல்லூரிக்குச் சென்றபோது அங்கு கல்லூரி அதிபர் திரு. மண்டலேசுவரனும் ஏனைய ஆசிரியர்களும் வரவேற்று வாழ்த்திதழ் வாசித்தளித்தனர். அத்துடன் சிறுமிகளின் ஆடல் பாடல்களும் நடைபெற்றன. கல்லூரி அதிபர் திரு. ஏ. மண்டலேசுவரன் முதலமைச்சரின் சேவைகளைப் பாராட்டினார். முதலமைச்சர் தமது பேச்சில் திரு. வி. குமாரசுவாமி எம். பி. அவர்களின் ஆற்றலை மெச்சியதுமன்றி அவருடைய சேவை நாட்டுக்கு அவசியமெனவும் குறிப்பிட்டார். அடுத்ததாகச்


நமது நிருபர்

சாவகச்சேரி அரசினர் மகளிர் கல்லூரிக்கு சேர் ஜோன் கொத்தலாவலவும் ஏனைய பிரமுகர்களும் சென்றபோது அதன் தலைவி செல்வி கனகசபை மாலைசூட்டி வரவேற்றார்.

இலங்கையின் முதலாவது முதலமைச்சரான காலஞ்சென்ற கௌரவ டி. எஸ். சேனநாயகா அவர்களின் உருவச்சிலையை சேர் ஜோன் அரசினர் மகளிர் கல்லூரியில் திறந்து வைத்துப் பேசுகையில் தேசபிதா டி. எஸ். சேனநாயகா அவர்கள் நாட்டின் விடுதலைக்குப் பாடுபட்டது மட்டுமன்றி அரசியல் தலைவர்களுக்கும் முன்மாதிரியாக விளங்கினார் என்று குறிப்பிட்டார். முதலமைச்சர் தொடர்ந்து பேசும்போது பெண் குலம் சிறப்புற வேண்டுமெனக் கூறி அக்கல்லூரியையும் வாழ்த்தினார்.

தற்காலிக போக்குவரத்து அமைச்சர் திரு. வி. குமாரசாமி அங்கு பேசும்போது டி. எஸ். சேனநாயகா அவர்கள் நாட்டு மக்களிடத்தில் நல்லிணக்கமும் ஒற்றுமையும் நிலவப் பாடுபட்டாரென்றும் தீமையைத் தீமையால் எதிர்க்காமல் நன்மையால் வெற்றி பெறுவதே தமிழ் மக்களின் பண்பென்றும் சொன்னார். அத்துடன் ஒற்றுமை வாழ்வே உகந்ததெனவும் கூறினார்.

இன்று (15-10-54) மாலை 6 மணிக்கு ட்றீபேக் கல்லூரி மண்டபத்தில் முதலமைச்சருக்



குச் சாவகச்சேரிப் பொதுமக்கள் வரவேற்பளிப்பார்கள் ஊர்வலம் இந்துக் கல்லூரியிலிருந்து ஆரம்பமாகும். அன்று வாசித்தளிக்கப்படும் வரவேற்பிதழில் மகாவலி கங்கையின் கிளையொன்றை யாழ்ப்பாணக் குடா நாட்டுக்குத் திருப்பி வானம்பார்த்தபூமியாகிய இந்த நாட்டைச் செழிப்படையச் செய்வதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு முதலமைச்சரிடம் கோரப் படுமெனத் தெரிகிறது. இம் மாபெருங் கூட்டம் தற்காலிக அமைச்சர் திரு. வி. குமாரசுவாமி அவர்களின் தலைமையில் நடைபெறும்.

### ஏனைய சில நிகழ்ச்சிகள்

முதலமைச்சர் சேர் ஜோன் கொத்தலாவல அவர்களுக்கு 16-10-54 சனிக்கிழமை காலை 8 மணிக்கு மானிப்பாய் நகர சங்கம் வரவேற்பளிக்கும். காலை 9.10க்குச் சுன்னாகம் சந்தியில் கிராம முன்னேற்றச் சங்கங்களாலும் பொதுமக்களாலும் வரவேற்பளிக்கப்படும்.

10-45 க்குக் காங்கேசன் துறை பட்டின சபை வரவேற்பு

11-25 குரும்பசிட்டி மருத்துவச்சாலைக்கருகில் சன்மார்க்க சபையாராலும் கிராமச்சங்கத் தலைவராலும் வரவேற்பளிக்கப்படும்.

மாலை 4-30 மணி இராமநாதன் கல்லூரி பொதுவரவேற்பு

17-10-54 காலை 9 மணி நயினாதீவு பொதுவரவேற்பு.

மாலை 6 மணி வேலணை பொது வரவேற்பு.

### அமுதமொழி

இயற்கை முழுதிலும் இனியதோர் ஒழுங்குப்பாடு உண்டு. அந்த ஒழுங்குப்பாடு புரிகின்ற ஆட்சி ஓய்வில்லாதது. அந்த ஆட்சிக்கு அன்பும் நீதியும் அமைச்சர்களாய் அமைந்திருக்கின்றன.

—தர்ம சக்கரம்

## முதல் அமைச்சர் சேர் ஜோன் கொத்தலாவல
# யாழ்ப்பாணத்துக்குச் செய்த பணி

— பாரிஸ்டர் ஸி. ஸி. இராச—இரத்தினம் —

(3–10–54ன் தொடர்ச்சி)

இரண்டாவது உலகயுத்தம் முடிந்ததும் காங்கேசன் துறை ராணுவ ஆஸ்பத்திரி நிர்மூலமாக்கப்பட இருந்தபோது ஸ்ரீ. நடேசனின் வேண்டுகோளுக்கிணங்க முன்னாள் பிரதமரும் சேர் ஜோனும் குறுக்கிட்டு அக்கட்டடத்தை காங்கேசன் துறை ஆஸ்பத்திரியாக்கப் பெற்றுக் கொடுத்தனர். இராணுவ அதிகாரிகள் அக்கட்டிடத்துக்கு 1½ கோடி ரூபாய் கேட்ட பொழுது சேர் ஜோன் ஸ்ரீ மகாதேவாவுடனும் ஸ்ரீ நடேசனுடனும் என்னுடனும் வந்து பார்வையிட்டு அதைப்பெற்றே தீருவது என்று முடிவு செய்தார். இராணுவத்தினரோடு பேரம் பேசி 30 இலட்ச ரூபாய்க்கு அக்கட்டிடத்தை மக்களுக்காக வாங்கிக் கொடுத்தார். இதுதான் காங்கேசன் துறை ஆஸ்பத்திரியின் சரித்திரம். இதற்குரிய பெருமை சேர் ஜோனைச் சேரும்.

தீவிர தேசபக்தரும் இலங்கைத் தேசியகாங்கிரஸ் ஸ்தாபகரும் அரசியல் முன்னேற்றத்துக்குச் சட்டரீதியில் வழி வகுத்த சிற்பியுமான சேர் .பொன்னம்பலம் அருணாசலம் அவர்களின் நூற்றாண்டுவிழா சென்றவருசம் இலங்கையிலும், இலங்கை ஸ்தானிகர் காரியாலயம் உள்ள பல்வேறு இடங்களிலும் சிறப்பாக சேர் ஜோன் கொத்தலாவல அவர்கள் தலைமையில் ஒழுங்கு செய்யப்பட்டு கொண்டாடப்பட்டது.

சேர் ஜோனிடம் அன்பும் விசுவாசமும் நட்பும் என்றும் கரை புரண்டோடும். தமிழர்களின் பிரதிநிதிகளாயிருந்த அருணாசலம் மகாதேவாவிடம் அல்லது திரு. சுப்பையா நடேசனிடம் கேட்டால சேர் ஜோன் எப்படிப்பட்டவர் என்பது தெரியும். ஏன்? அவரிடம் நெருங்கிப் பழகிய யாரைக் கேட்டாலும் சொல்லுவார்கள். ஆனால் இருண்டிருந்த போது, மனது குழைந்து கொண்டிருந்தபோது அவரிடம் உதவிகள் பல பெற்றசிலர்மட்டும் அவற்றை மறந்து விட்டார்கள், அல்லது மறந்துவிட்டதாக நடிக்கிறார்கள்.

அவர் ஒருபோதும் வகுப்புவாதிகளை ஆதரித்ததில்லை என்பது அசைக்க முடியாத உண்மை. அவர் கம்யூனிசத்தின் (பொதுவுடைமைக் கொள்கையின்) பரமவிரோதி என்பதும் உலகறிந்த விஷயம்; தேசிய வாதி என்ற போர்வையில் உலவும் காட்டுப் பற்றைக் காண்பிக்கும் பகல் வேஷக்காரன் என்று அவரைப் பழிக்க அவருடையவிரோதிகள் கூடக் கூசுவார்கள்.

பயங்கர ஆட்சி நடைபெற்ற 1915-ம் ஆண்டில், இராணுவச் சட்டங்களும் நீதி ஸ்தலங்களும் மிரட்டிய போது, இலங்கையிலிருந்து சிங்கள வர்க்கமே அழிந்து போகும் என்று பயந்தபோது, அவர்களுக்கு வாழ்வளித்த வள்ளல்கள் சேர் பொன்னம்பலம் அருணாசலம் சேர் பொன்னம்பலம் இராமநாதன் இருவருக்கும் சிங்கள சமூகத்தின் கடமைப் பாட்டைப் பகிரங்கமாக அடிக்கடி எடுத்துக் கூறி வருபவர் சேர் ஜோன் கொத்தலாவல.

சேர் ஜோனுக்கு யாழ்ப்பாணம் தன் நன்றியையும் அன்பையும் காண்பிக்காமல் முடியாது. சிறுபான்மையினருக்கும் குறிப்பாகத் தமிழருக்கும் அவர் மந்திரியான காலத்திலிருந்து செய்துவரும் எல்லாவற்றையும் பாராட்டியே தீருவார்கள்.

1947ம் ஆண்டிலிருந்து யாழ்ப்பாண ஐ. தே. க. வினைக்கு எப்படி சேர் ஜோன் இருந்தார் என்பதைக் குறிப்பிடாவிட்டால் இது பூரணமாகாது. ஐ. தே. க. யில் உள்ள சில வகுப்புவாதிகள் தூரத்தில் உள்ள சகோதரர்களை அலட்சியம் செய்த போதெல்லாம் சேர் ஜோன் வேண்டிய பலத்தையும் சகாயத்தையும் அளித்து வந்திருக்கிறார். வரண்ட யாழ்ப்பாணத்தில், தொலைவில் வசித்த தன் கூட்டத்தை இந்த ஞாபகசக்தி நிறைந்த சேர் ஜோனுக்குள்ளே வசித்த ஐ. தே. க. யானை மறந்து விடவில்லை. ஒரு ஐ. தே. க. விழாவுக்கு 1952ம் ஆண்டு முற்பகுதியில் முன்னாள் பிரதமரின் மரணத்துக்கு முன் நீண்டதூரப் பிரயாணம் செய்து வந்து சேர்ந்தார். வகுப்புவாத நாய்கள் குலைக்கலாம். ஆனால் தேசிய யாத்திரிகர்கள் ஓயமாட்டார்கள். முன்னேறிக் கொண்டே யிருப்பார்கள்.

# வைத்தீசுவர வித்தியாலயம்

1-ம் பக்கத் தொடர்ச்சி

'என்னைப்பார்! என் அழகைப் பார், கண்ணாலே!' என்று கூறுவதைப் போன்று கம்பீரமாகக் காட்சி யளிக்கும் இரும்புக் கதவு. இரும்புக் கதவைத் தாண்டி உள்ளே சென்றால் வன்ன முதிரையாற் செய்யப்பட்ட இன்னொரு பளபளக்கும் கதவு. அதையும் தாண்டி உள்ளே சென்றால் எங்காவது கனவுலகத்திற்கு வந்து விட்டோமோ என்ற சந்தேகம். அவ்வளவு அழகான உட்புற வேலைப்பாடுகள்! பார்க்கும் இடமெல்லாம் பள பளக்கும் பலமிக்க தூண்கள். எம்மை உன்னாலே தாங்க முடியுமா? என்று பலப்பரீட்சை செய்வதைப் போன்று அதன்மீது அழகாக வீற்றிருக்கும் பிரமாண்டமான உத்தரங்கள். உத்தரத்தின் மேலே அந்தி வானந் தெரிகிறதே இன்னும் வேயவில்லையா என்று எண்ணிவிடாதீர்கள்! நீங்கள் காண்பது அந்தி வானமல்ல. புது ஓடுகள். ஆமாம் புத்தப் புதிய ஓடுகள். இன்னும் இரவைப் பகலாக்கும் எத்தனையோ மின்சார விளக்குகள். கொஞ்சத் தூரம் உள்ளே மேடையை நோக்கிச் சென்றால் எங்கோ கோவில் மூலத்தானத்துக்கு வந்து விட்டோமே! என்ற எண்ணம் உண்டாகும். இந்து மதத்தின் பண்பாட்டுக்கு அறிகுறியாக விளங்கிக் காலைத் தூக்கி நின்றாடும் தெய்வமான நடராச உருவத்தை வைத்து வழிபடுவதற்காக அங்கு அமைக்கப் பெற்றிருக்கும் பீடமும் திருவாசியின் வேலைப் பாடும் மிக அற்புதமானவை. இத்தகைய சிறப்புக்களுடன் அமைந்துள்ள வைத்தீசுவர வித்தியாலயத்திற் பயிலும் மாணவர்கள் கொடுத்து வைத்தவர்கள். முன் படித்தவர்களுங் கூடக் கொடுத்து வைத்தவர்களே. இந்தக் கலாமண்டபத்தை நிறுவுவதற்கு உழைத்த வித்தியாலய ஆசிரியர்களும் அன்பர்களும் அபிமானிகளும் பொதுமக்களின் பாராட்டுக்கு உரியவர்கள். பொதுமக்களின் ஆசியுடன் பணியாற்றி வரும் வைத்தீசுவர வித்தியாலயம் வாழ்க! அதன் கலைப் பணி ஓங்குக!!

# இலங்கை மக்கள் பாரதத்தின் புதல்வர்கள்
## 'ஈழகேசரி'க்கு சித்பவாநந்தர் செய்தி

நமது நிருபர்

யாழ்ப்பாணம் 15-10-54

இலங்கை மக்கள் அனைவரும் இந்தியாவிலிருந்து வந்தவர்கள். இந்த நாட்டிலுள்ள சமயங்கள் கூட இந்தியாவிலிருந்து வந்தவையே. ஆகவே இலங்கை இந்தியாவின் குழந்தை போன்றது. தாயையும் சேயையும் என்றும் பிரிக்க முடியாது. இவ்வாறு ஸ்ரீ இராமகிருஷ்ண சங்க வைத்தீசுவர வித்தியாலயப் புது மண்டபத் திறப்பு விழாவிற் கலந்துகொள்ள திருச்சியிலிருந்து விமானமூலம் யாழ்ப்பாணம் வந்துள்ள ஸ்ரீமத் சுவாமி சித்பவாநந்தர், வெள்ளிக்கிழமை பிற்பகல் காங்கேசன் துறை விமான நிலையத்தில் ஈழகேசரி நிருபருக்கு அளித்த பேட்டியிற் குறிப்பிட்டார்கள்.

ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தரையும் சென்னையிலிருந்து விமானமூலம் வந்துள்ள ஸ்ரீமத் சுவாமி யதீஸ்வரானந்தரையும் வித்தியாலய வளர்ச்சி நிதிச்சபைத் தலைவர் டக்டர் சி. குருசாமி மலர்மாலைகள் சூட்டி வரவேற்றார். ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர், வைத்தீஸ்வர வித்தியாலய அதிபர் திரு. எஸ். அம்பிகைபாகன், முதலியார் சி. முத்துத்தம்பி, ஈழகேசரி ஆசிரியர் திரு. இராஜ அரியரத்தினம், டக்டர் சண்முகரத்தினம் ஆகியோரும் சுவாமிகளை ஏனைய அன்பர்களுடன் வரவேற்றனர்.

சுவாமி சித்பவானந்தர் தமிழ்மொழி மூலம் உயர்தரக் கல்வி போதிப்பது பற்றிக் குறிப்பிடுகையில் மேல் வகுப்புகளில் தமிழில் உயர்தரக் கல்வி போதிப்பதில் சிரமம் எதுவுமில்லையெனவும், நம் சொந்தமொழியில் போதிப்பது அத்தியாவசியமென்றும் உலகப் பொதுமொழியாக ஆங்கிலம் இருந்து கொள்ளலாம் எனவுங் குறிப்பிட்டார்,

# சன்மார்க்க சபை காந்தி விழா

## கவிமணி பிரிவுக்கு அனுதாபம்

இன்றைய உலகில் மக்கள் பயம் நீங்கி நிம்மதியுடன் வாழவேண்டுமானாற் பேச்சளவில் மாத்திரமன்றிச் செயன் முறையிலும் காந்திஜியின் போதனைகள் இடம்பெறவேண்டும். அஹிம்சை சத்தியம் ஆகிய காந்திஜியின் தத்துவங்கள் எல்லாராலும் கைக்கொள்ளப்பட்டு வந்தாற் சமாதானம் எங்கும் நிலவும். ஒன்றே குலம் ஒன்றே உலகம் என்னும் சிறந்த இலட்சியங்கள் மலர்ச்சியடையும். இவ்வாறு குரும்பசிட்டி சன்மார்க்க சபை காந்தி ஜயந்தி விழாவுக்குத் தலைமை தாங்கிய ஆசிரியர் க. செந்திநாதன் தமது பேச்சிற் குறிப்பிட்டார்.

காந்தி ஜெயந்தி விழாவின் முக்கிய பகுதியாகப் பனை மகோற்சவம் கொண்டாடப்பட்டுப் பனம் விதைகள் புலக் காணிகளில் நாட்டப்பட்டன. இதையொட்டி ஆசிரியர் த. இராசரத்தினம் பேசியதாவது: அந்நிய அரசாங்கம் மக்களை, அந்நிய நாட்டுப் பொருட்களைச் சிந்தனையற்று உபயோகிக்கும் யந்திரங்களாக மாற்றிவிட்டது. பனையில் இருந்து எமது தேவையைப் பூர்த்தி செய்யக்கூடிய எத்தனையோ பொருட்கள் இருக்க, அவற்றை விட்டு அவற்றிற்குச் சமதையான வேறு பொருட்களைப் பணம் கொடுத்து வாங்கி எமது பொருளாதார நிலையைச் சீர்குலைத்துவிட்டோம். சுதந்திர அரசாங்கத்திற் பனையின் பொருட்களை விஞ்ஞான முறையில் ஆராய்ந்து சிறந்த பொருட்களை ஆக்க வேண்டும். இப்படியான முயற்சிகளைச் சுதந்திர அரசாங்கம் செய்யவேண்டிய அவசியம் ஏற்பட்டுக் கொண்டு வருகிறது. ஆதலின் பனைகளைப் போற்றிப் பாதுகாப்பதுடன் புதிதாகவும் பனம் விதைகளை நாட்டவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

திரு. கனக. செந்திநாதன் அவர்கள் கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளை அவர்களுடைய கவித்துவ சக்தியை விளக்கிக் காட்டினார். பின்வரும் அனுதாபப்பிரேரணை சபையில் நிறைவேறியது.

"தமிழ் நாட்டில் தோன்றிய கவிகளில் இக்காலத்தில் மிகவும் சிறந்தவராகப் பொதுமக்களாலும் கற்றோராலும் போற்றப்பட்டவரும் சிறந்த இலக்கிய கருத்தாவுமாகிய கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளையின் மரணம் குறித்துச் சன்மார்க்க சபை ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து அவர் தம் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறது.

திரு. சி. இரத்தினம், பேராசிரியர் ஆ. முத்துசிவனைப் பற்றிப் பேசியபின்னர் கீழ்க்கண்ட பிரேரணை நிறைவேற்றப்பட்டது. "சைவத்துக்கும் தமிழுக்கும் அயராது உழைத்த அழகப்பாக்கல்லூரிப் பேராசிரியரும் எமது சபைக்கு வருகை புரிந்து சபையோர் மனத்தைக் கவர்ந்து 'நடராசர் தோற்றம்' பற்றி விரிவுரை யாற்றியவருமாகிய பேராசிரியர் ஆ. முத்துசிவன் அவர்கள் சடுதியாகப் பிரிந்தமையைக் குறித்து எமது சபை அனுதாபம் தெரிவிக்கிறது.

கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை, பேராசிரியர் முத்துசிவன் என்போர் மரணம் குறித்துச் சபையோர் மூன்று நிமிஷம் மௌனமாக நின்று மரியாதை செலுத்தினர்.

—நிருபர்

# அறிவுரை

*

நம்மிடத்திற் பிளவு மனப்பான்மை! மற்றும்
நல்லசெயல் இல்லாத போக்கு! தீச்சொல்!
'எம்மையவன் மீறுவனோ?' என்ற எண்ணம்
இன்னவைதாம் எம்நாட்டைப் பின்னே தள்ளி
அம்மியைப்போல் அசையாத வண்ணம் இந்நாள்
ஆக்கிவிட்ட தறிகின்றோம்! இனிமேலேனும்
கும்மாளம் போடாமல், எம்மூர் மக்கள்
குறித்து நன்மை நாட்டுக்குச் செய்தல்வேண்டும்!


# யாழ்ப்பாணம் ஐக்கிய லாப நிதி

1918-ம் ஆ. ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா

**இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா 34,36700. 100 ரூபா விகிதமான 8000 பங்குகள்.**

**பங்குப் பணம் கட்டுமுறை :**

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாதந்தோறும் கட்டப்பட வேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

**தினசரிப் பற்று வரவு :**

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்று வரவு செய்யலாம்.

**தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம் :**

க்ஷேமப் பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னுங் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம் 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

**உண்டியல்கள் :**

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும்.

இந்தியா நோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

**கடன் :**

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 12விகிதம் அறவிடப்படும். (ஈடு வைத்தவர்கள்) முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

வேண்டிய விபரங்களை என்மூலம் அறிந்துகொள்ளலாம்.

S. கனகசபை
சிறுப்பர்

[5241]


## பிஸ்கால் விற்பனை கோமிசன் இலக்கம் 4305.

பருத்தித்துறை டிஸ்திறிக் கோட்டில்
பிஸ்கால் ஆபிசில்,
யாழ்ப்பாணம் 5-10-54

அல்வாய் வடக்கு –
ஆழ்வாப்பிள்ளை ஆறுமுகம் வழக்காளி
விரோதமாக

புலோலி மேற்கு:– (1) தாமர் கைம்பெண் சிவகாமிப்பிள்ளை. (2) சுப்பிரமணியம் செகஜோதி கைம்பெண் ரத்தினம். (3) தாமர் தெட்சணாமூர்த்தி. (4) பெண் பொன்னம்மா. (5) அல்வாய் வடக்கு:– சுப்பிரமணியம் தியாகராசா. (6) புலோலி மேற்கு – கந்தையா ஏரம்பமூர்த்தி. (7) பெண் பறுபதபாக்கியம். (8) செகஜோதி ஞானதரன், பிராயமற்றவர். பாதுகாவலர் 2 ஆம் எதிரி. (9) M. கந்தையா கணபதிப்பிள்ளை. (10) V. A. குமாரசாமி கைம்பெண் பொன்னம்மா. (11) முருகப்பர் கார்த்திகேசு. (12) கந்தப்பர் அம்பலவாணர். (13) பெண் செல்லம்மா. (14) சட்டநாதர் குமாரசாமி. (15) குமாரசாமி ஆறுமுகம். (16) குமாரசாமி கிருஷ்ணபிள்ளை.

எதிராளிகள்

(காலஞ்சென்ற 1 ஆம் எதிரிக்காக பதில் எதிராளிகள் 9-16 வரை)

இதன்கீழ்க் காணப்படும் ஆதனங்களின் மேற்சொல்லிய வழக்கில் வழக்காளிக்கும், 1 ஆம், 2 ஆம், 4 ஆம், 5 ஆம், 7–11 ஆம், 13–16 ஆம் எதிரிகளுக்கு உடைய உரித்தையும் பிரயோசனத்தையும் 1954 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 4-ந் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் பிரசித்த வெந்தீசில் விற்கப்படுமென்று இத்தாலறிவிக்கப்படுகின்றது. அதாவது:–

### அட்டவணை

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப்பகுதி கட்டைவேலிக் கோயிற்பற்று. அல்வாய் பெருமியார் குறிச்சியிலுள்ள "ஆண்டார் வயல்" நெற்பரப்பு இரண்டு (2) குளி ஏழொடு முப்பத்திரண்டில் ஒன்று ($7\frac{1}{32}$) அதைச்சேர்ந்தவைகளும் எல்லை கிழக்கு, மாயக்கைப் பிள்ளையார் கோவிலுக்குரிய ஆதனம். வடக்கு முருகுப்பிள்ளை கார்த்திகேசுவும் மறு. மேற்கு, வழக்காளிக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். தெற்கு, ஆறுமுகம் மகள் சிவக்கொழுந்துவுக்குரிய ஆதனம்.

உலாந்தா மேஸ்தர் V. சிவரத்தினம் அவர்களால் 13–10–52 இல் விந்தாரிக்கப்பட்ட 1202 இலக்கப்படத்தில் 1 ஆம், 2 ஆம், 7 ஆம் துண்டுகளாய் விபரிக்கப்பட்டிருக்கிறது. விலை மதிப்பு ரூபா 415/.

முதலாவதாக இவ்வாதனத்தை வழக்காளிக்கும் மற்றும் பங்காளருக்கும் விற்பனைக்கு விட்டு அவர்கள் வாங்காவிடில் மற்றவர்களுக்குப் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

S. M. J. லூயி
வடமாகாணம் பிசுக்காலுக்காக
N. V.

[5250]

## அல்வாயூர்

### ஸ்ரீ லங்கா வித்தியாசாலை

சென்ற 7–10–54 வியாழக்கிழமை காலை விஜயதசமி முகூர்த்தத்தில் இப் பாடசாலைக்கு அடித்தளக்கல் நாட்டப்பட்டது. அத்துடன் வித்தியாரம்பமும் செய்துவைக்கப்பெற்றது. திரு. தா. இராமலிங்கம் எம். பி., அவர்கள் தலைமை வகித்தார்கள். வடமாகாண அதிபதி திரு. ம. ஸ்ரீ கந்தா அவர்கள் அடித்தளக்கல் நாட்டுவதையும் மாணவர்களுக்கு வித்தியாரம்பம் செய்தலையும் நடாத்திவைத்தார்கள். வடமராட்சி இந்து மகளிர் கல்லூரித் தலைவி செல்வி கே. சரவணமுத்து அவர்களும் கொழும்பு ஆனந்தாக் கல்லூரி முன்னாள் அதிபர் திரு. வே. தா. சி. சிவகுருநாதன் அவர்களும் விரிவுரைகள் ஆற்றினர்.

# கவின் பெறு திலகம்

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ் மொழி தனித்து இயங்க வல்லது என்பது எவ்வளவு உண்மையோ, அவ்வளவு உண்மை வருங்காலத்தில் தமிழின் வளர்ச்சிக்குப் பிற மொழி உதவி என்பது!

ஆனால் மூன்றாவதான கருத்தை நினைக்க நினைக்க மனம் புண்ணாகிறது. தமிழ்க் கல்லூரி ஏற்படுத்த முயற்சிக்காத காரணத்தால் ஆசிரியரிடத்தில் தமிழுணர்ச்சி இல்லை என்பது எவ்வளவு பேதமை? அவரியற்றிய நூல்களும் பேசிய பேச்சுக்களும் அவருடைய தமிழுணர்ச்சிக்குச் சான்று பகருமே! தமிழ் இலக்கியங்களில் சுவை எங்குண்டோ அங்கெல்லாம் அவர் உள்ளமும் சென்று பற்றுமே! அவருடைய நூல்களிடையே தேசிகவிநாயகம் பிள்ளை பாடல் முதல் திருமூலர் பாடல் வரையில் எடுத்துக் காட்டுக்கள் இலங்குகின்றன. எனவே இது வெறும் ஆராய்ச்சியற்ற கூற்றென ஒதுக்கி விட்டு இச்சந்தர்ப் பத்தில் வேறோரு விஷயத்தினை ஆராய்தல் சாலும்.

## மணிவாக்கு

அழகப்பாக் கல்லூரியை அழகுபடுத்தி வந்த மணிவிளக்கு அவர். சிரித்துச் சிரித்துப் பேசி, இரசிக உணர்ச்சியை நாடெல்லாம் பரப்பிவந்த வானம் பாடி சென்ற சென்ற இடங்களிலெல்லாம் அழகப்பாக் கல்லூரியைப் புகழ்ந்து புகழ்ந்து பல்லாண்டு பாடியிருக்கிறது! தாய்த் தமிழகம் மறந்தாலும் உலகில் ஆங்காங்கு பிரிந்துசென்று தனித்து வாழும் தனிக் குடிகள் காரைக்குடியின் கவினையும் அழகப்பாக் கல்லூரியின் அருமையையும் மறக்கமாட்டார்கள். இத்தகைய பேரறிஞனை நன்றியறிவுடன் அழகப்பாக் கல்லூரி போற்றுவதும், அதற்கு மேற்படி நண்பரின் கருத்து மறைமுகமாகத் தூண்டு கோலாய்விளங்குவதும் ஒருதலை. அதாவது பேராசிரியர் முத்துசிவன் பெயரால் ஒரு தமிழ்க் கல்லூரி ஏற்படுத்தி அன்னாரின் பெருமையைப் போற்றிக் காப்பாற்றவேண்டும். அதன் வழியாக ஆசிரியரின் அருமை மாணவர்களும் அன்புக் குழந்தைகளும் சீர் பெற்றுத் தாம்செல்லுமிடங்களிலெல்லாம் காரைக்குடி அழகப்பாக் கல்லூரியின் பிரதி நிதிகளாக விளங்குவார்கள்!

பேராசிரியர் முத்துசிவனின் பெருமைகளைத் தமிழ்நாடு உணர்ந்து கொள்ளாததில் வியப்பொன்றுமில்லை. ஒருவன் புகழேணியில் கால் வைக்க வேண்டுமென்றால் அவன இறந்து பலவருடங்கள் ஆகவேண்டும் என்பது இங்கு நடைமுறையிலிருந்து வரும் ஒரு வழக்கு: அதாவது அடுத்த சந்ததியில் அவனைப் பற்றிய பேச்சுக்கள் கிளம்பும்! ஆனால் இனிமேலாவது இந்நிலைமையை அகற்ற முயல்வது இந்நாளைய தமிழன்பர்கள் கடனாகும். அதற்கு ஒரே வழிதானுண்டு. அதாவது ஆசிரியரின் சிறந்த நூல்களை வேண்டிய மட்டும் தமிழ் மாணவர்களிடத்தில் பரப்ப வேண்டும்!

## போற்றுவோர் குறைவு

இன்று கவிதை இலக்கியம் வளர்ச்சியடையா திருப்பதற்குக் காரணம் கவிதையைச் சுவைத்துப் படிப்பவர்களும் கவிஞர்களை ஆதரித்துப் போற்றுகின்றவர்களும் மிகக்குறைவாக இருப்பதேயாகும். மக்கள் உள்ளத்தில் கவிதை உணர்ச்சியைத் தட்டியெழுப்ப வல்லார் மிகமிகக் குறைவு. இக்குறைபாட்டினை அகற்ற வேண்டுமானால் மேல்நாட்டைப்போல் இங்கும் இரசனை இலக்கியங்கள், திறனாய்வு இலக்கியங்கள், விமரிசனங்கள் அதிகமாக வெளிவரல் வேண்டும். தாம் வாழ்ந்த சொற்பகால வாழ்க்கையில் திரு. முத்துசிவனார் இத்துறையில் போற்றத்தக்க அளவுக்குச் சேவைபுரிந்திருக்கிறார்கள். இவ்வுண்மையை நிலைநாட்டி இளைஞர்களை மேன்மேலும் இத்துறையில் புகுந்து தமிழ்த் தாய்க்குச் சேவை செய்யத் தூண்டுவது தாய் நாட்டுத் தலைவர்களின் தலையாய கடனாகும்.

## இரசமான முறையில்.......

கவிதை கவிதைக்காக என்ற ஒரு கொள்கை மக்களிடையே நிலவி வருகின்றது. இக் கொள்கையைப் பொருத்தமான முறையில் எதிர்த்து, கவிதை வாழ்க்கைக்கே என்பதை நிலைநாட்டுகையில், "கவிதையும் வாழ்க்கையும்" என்ற நூல் உருப்பெற்று விட்டது. கவிதை என்பது அசலுக்கு நகல் எடுக்கும் வித்தை என்றும் அதனைப் பயில்வது மனித அறிவுக்கே ஒவ்வாத செயல் என்றும் பிளேட்டோ ஏளனம் செய்கின்றான். இதனை ஆதாரமற்றதாகச் செய்து கவிதைக் கலையின் சிறப்பை மிக இரசமான முறையில் விளக்குவது அசலும் நகலும் என்ற நூல் கவிதையின் மூலாதாரமான நோக்கம், அதன் இலக்கணம் ஆகியவற்றை உணர்த்துவது கவிதை. ஆசிரியரின் இலக்கியப் பயிற்சிக்கும், நுண்ணறிவுக்கும் எடுத்துக் காட்டாக இம் மூன்று நூல்களும் விளங்குகின்றன. இனி, அன்னாரின் இரசிக உள்ளத்தினைப் புலப்படுத்துவன கலிங்கத்துப்பரணி, அசோகவனம் என்பன. பேராசிரியரிடத்தில் அமைந்த பெரும் சிறப்பு என்னவெனின் எழுத்துக் கலையில் மட்டுமன்றிப் பேச்சுக்கலையிலும் சிறந்து விளங்கினார் என்பதேயாகும். "கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய், கேளாரும் வேட்ப மொழிவதாம் சொல்" என்ற வள்ளுவரின் இலக்கணத்திற்கு திரு. முத்துசிவனார் நல்லதோர் உதாரணமாவார். சிரித்தவண்ணம் மணிமணியான வார்த்தைகளை ஆற்றொழுக்கு நடையில் உதிர்த்துக்கொண்டே பேசினால் நேரம் போவதே தெரியாது! பேச்சுக்கலையில் அவர் அடைந்த சிறப்புக்கு மேடைக்கலை ஓர் எடுத்துக்காட்டு. பேச்சுக்கலையில் திறமையடைய விரும்பும் இளைஞர்களுக்கு 'மேடைக்கலை' அரியதொரு வழிகாட்டியாக அமையும் என்பது உறுதி!

இங்ஙனம் இலக்கிய உலகிற் கவின்பெறு திலகமாக விளங்கிய பேராசிரியரை இழந்தது பெருநஷ்டமேயாகும். தமிழ் இலக்கியப் பாதையிற் புது முறை கண்ட பேரறிஞனை இனி என்று காண்போம் என உள்ளம் கவல்கின்றது. தமிழ் நாட்டுப் பிராட்லி பிரிந்து விட்டாரே என்று பரிதவிக்கிறது இலக்கிய உலகம்! அழகப்பாக் கல்லூரி மாணவர்களும் ஆசிரியர்களும், தங்கள் கலைக்கோயிலின் மணிவிளக்கு மறைந்து விட்டதைக் கண்டு துக்கக் கடலுள் ஆழ்ந்துவிட்டனர். குலக்கொழுந்தாய் உதித்த கலைஞர் திலகம் இறந்துவிட்டார் என்று அவர் குடும்பத்தார் ஆருத்துயரில் ஆழ்ந்து விட்டனர்! அந்தோ இவர்களுக்கு இனியார் துணை; யார் உறவு? அதனை எல்லாம் வல்ல அந்த இறைவன் தான் நிர்ணயிக்கவேண்டும்...

இப் பத்திரிகையில் வெளியாகும் ஹாஸ்யக் கட்டுரைகள், கதைகளில் வரும் பெயர்கள் கற்பனைப் பெயர்களே. கட்டுரையாளர் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்தரவாதியல்லர்



# கேட்டதும் நடந்ததும்

## முதற்பாகம் * அத்தியாயம்: 5 * சுகதுக்கம் சுழல் சக்கரம்

தேவன் — யாழ்ப்பாணம்

என் உதடுகள் குவிந்தன. என் கைகள் எதையோ தேடின. கதை கேட்பதில் ஆழ்ந்துபோயிருந்த எனக்கு இந்தத் தடங்கல் என்னவோ செய்தது. என் அவஸ்தையை என் தம்பி அவதானித்துவிட்டான்.

"என்ன அண்ணு! சிகரெட்டுக்குத் தவிக்கிருயா?" என்று கேட்டுக்கொண்டே மேசையிலிருந்த என் சிகரட் டப்பாவையும் நெருப்புப் பெட்டியையும் எடுத்தான். தற்செயலாக அவன் கை மேசையிலிருந்த மைப் புட்டியை உருட்டி விழுத்திவிட்டது. கீழே விழுந்த அந்த மைப் புட்டி தரையெல்லாம் மையைச் சிந்தியதுமல்லாமல் அவன் கொண்டுவந்த பத்திரிகையின் மேலும் மையைக் கொட்டிவிட்டது. அதனுல் அவன் காட்டிய நங்கையின் படம் மங்கி மறைந்தது. நான் அதைக் கவனியாதவன் போல சிகரெட் டப்பாவை அவன் கையிலிருந்து வாங்கிக் கொண்டேன். அவன் குனிந்து புட்டியை எடுத்து மேசையில் வைத்துவிட்டு அந்தப் பத்திரிகையைக் கையில் எடுத்தான். சிகரெட்டைப் பற்றவைத்துக்கொண்டே "என்ன? உன் கதா நாயகி வி..." என்று கேட்க வாயைத் திறந்தேன். மேலே பேச என்னுல் முடியவில்லை. அவன் கண்களில் நீர் துளும்பியதைப் பார்த்ததும் திகைத்துப் போய்விட்டேன். குறிப்பாகப் பார்த்தேன் அவன் கண்களை. அவனும் என்னைப் பார்த்தான்.

"ஏன் அழுகிருய்?" என்ற கேள்வியை என்னையறியாமலே கேட்டேன். "அழுகிறேனு? இல்லையே" என்று சொல்லிக்கொண்டு என்முன்னுல் வந்து உட்கார்ந்தான். "உன் கண்கள் கலங்கியிருக்கின்றனவே. நீ பொய்சொல்லலாம். உன் கண்களுக்கு அது தெரியாதே" என்றேன்.

"நீ என்னவோ மனேவசியம் செய்கிறவன்மாதிரி என் கண்களையே பார்த்துக்கொண்டிருந்தால் கண்கலங்காமல் என்னசெய்யும்?" என்று புதிர் போட்டான். "நான் கண்கட்டி வித்தை கற்றவனென்று ஒருநாளும் உன்னிடம் சொல்லவில்லையே? ஏன் இல்லாததையெல்லாம் கற்பனைசெய்து ஒரு பொய்யை மறைக்க ஒன்பது சொல்கிருய்?" என்று திருப்பிக் கேட்டேன்.

பத்திரிகையை ஒரு தடவை முகத்துக்கெதிரே பிடித்துக்கொண்டு பார்த்தான். என் பார்வையிலிருந்து தன்னை மறைத்துக்கொள்ள அதை உபயோகிக்கிருனே என்று தோன்றியது. மறுகணமே அதைக் கீழே போட்டான். சர்வசாதாரணமாக, "ஏன் அண்ணு நீ கதை எழுதுகிறவனுச்சே. ஒரு கதையில் கதாநாயகி யாரென்று எப்படி நிச்சயிப்பது?" என்று என்னிடம் கேட்டான். "கதையிலே வரும் பிரதான பெண் பாத்திரம்தான் கதாநாயகி" என்றேன் தயக்கமின்றி. சொல்லிவிட்டேனே ஒழிய அது சரியென்று எனக்குப்படவில்லை.

"கதாநாயகனின் மனைவியைக் கதாநாயகியாகக் கொள்ளலாமோ?"

"சில கதைகளில் அப்படியும் இருக்கும்"

"கோவலன் கதையில் கண்ணகியா மாதவியா கதாநாயகி?"

"கண்ணகிதான்"

"சில சரித்திரங்களில் பார், அண்ணு! மகாராஜா மகா சூரராக இருப்பார். மகாராணியின்பெயரே கதையில் வராது."

"அதுதானே சொன்னேன், கதையைப் பொறுத்துத்தான் கதா நாயகியை நிர்ணயிக்கமுடியும். கதாநாயகியே இல்லாத கதைகள்கூட உண்டு."

"கதாநாயகனைப் பெற்றுக்கொடுக்கிறவள் கதாநாயகியாக இருக்கமுடியாதா?"

"ஏன் முடியாது? அப்படியும் கதைகள் உண்டு."

"அசோகனுடைய மகன் குனளன் கதை தெரியுமல்லவா உனக்கு? அதிற் கதாநாயகி குனளன் மனைவியல்லவே. அவனுடைய சிற்றன்னைதானே கதாநாயகி?"

"ஆமாம் ...... இப்பொழுது ஏன் இதெல்லாம்?"

"கதாநாயகியென்று குறிப்பிட்டேனே ஒரு பாத்திரத்தை. அவள் கதாநாயகிதானு என்ற சந்தேகம் வந்துவிட்டது."

"நல்ல கதாசிரியன் நீ. இதைக்கூட நீ நிச்சயிக்காமல் கதை சொல்லவந்துவிட்டாய். போனுல் போகிறது. கதையைச் சொல்லு. நான் கண்டுபிடித்துவிடுகிறேன்" என்றேன், கதை தடைப்பட்டதால் எனக்கு ஏற்பட்ட ஆத்திரத்தில்.

திரும்பவும் கதை சொல்ல ஆரம்பித்தான். நான் இன்னொரு சிகரெட்டைப் புகைத்துக்கொண்டே சௌகரியமாகச் சாய்ந்துகொண்டு கதை கேட்பதில் ஈடுபட்டேன்.

"அண்ணு ...... எதுவரை சொன்னேன்? நினைவுவருகிறது. விசாலத்தின் நாட்டுப்பெண், கோபாலபிள்ளையின் மனைவி, அவளுக்குப் பெயர் சரஸ்வதி. பெயரில் மட்டுமல்ல, ரூபத்திலும் குணத்திலும் வேறு பல அம்சங்களிலும் அவள் தெய்வீகப் பிறவி. சாட்சாத் கலைவாணியென்றே சொல்லலாம். அதிகம் படித்தவளல்ல. பணக்காரியுமல்ல, தகப்பனுங்கிடையாது. அவளுக்கு உறவினர் என்ற முறையில் இருந்தது அவளுடைய தாயார் மங்களம்தான்......"

நான் நிமிர்ந்து உட்கார்ந்தேன். இந்தப் பெயர்கூட எங்கோ முன்பு கேட்டதுமாதிரி இருந்தது. ஆனுல் அடுத்தாற்போல் அவன் சொன்னது, என்னை அப்படியே ஆச்சரியத்தால் அமிழ்த்திவிட்டது.

"அவளுக்கு ஓர் அண்ணன் இருந்தானும்......சங்கரசிவம் என்று பெயராம்... ஆனுல் பல வருஷங்களுக்கு முன்பே யாரோ ஊர் பெயர் தெரியாத பெண்ணைக் கலியாணம்பண்ணிக்கொண்டு ஓடிவிட்டானும். எங்கே போனுன் என்பது யாருக்குமே தெரியாது......" இப்படிச் சொல்லிக்கொண்டு போனவன் கதையை நிறுத்தி என் முகத்தில் ஏற்பட்ட வியப்பை அவதானித்தான்.

"என்ன அண்ணு இந்தக் கதை உனக்கு ஏற்கனவே தெரிந்ததுதானே?"

"அந்த அண்ணன் பெயர் என்னவென்று சொன்னுய், சங்கர ......"

"சங்கரசிவம், அண்ணு! ஏன் அண்ணு உனக்கு அந்தப்பெயருள்ள யாரையாவது தெரியுமா?

தெரியுமா என்ரு கேட்கிருய்? என் தகப்பனுரே ஒரு சங்கரசிவம்தான். அவரும் ஒரு மங்களத்தின் மகன்தான்."

"அண்ணு பெயர்கள் எப்படியோ இப்படியாகிவிட்டன. வேண்டுமானுல் வேறுபெயர்கள் மாற்றிவைக்கட்டுமா?" என்ருன், ஏதோ செய்யத்தகாததைச் செய்துவிட்டவன்போலப் பயந்துகொண்டு.

"இப்பொழுதாவது சொல்லு. நீ சொல்லும் கதை உண்மையா அல்லது கற்பனையா?"

நடுக்காட்டிற்காரில்போய்க்கொண்டிருக்கும்பொழுது 'பெற்ரேல்' முடிந்துவிட்டால் எப்படியிருக்குமோ அப்படியிருந்தது அவன் நிலைமை. என்னை ஒரு பார்வைபார்த்தான், பயம் தெளிந்த குழந்தை செத்த பாம்பை ஆராய்வதுபோல். எச்சிலை விழுங்கினுன், தொண்டைக்குள் ஏதோ அடைத்துக்கொண்டிருப்பதை நீக்க முயற்சிப்பது மாதிரி. சொல்லட்டுமா விடட்டுமா என்று தவிப்பவன் போல மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் தவித்தான்.

"அண்ணு ..." என்று வாயைத் திறந்தான். அவன் குரல் வரண்டிருந்தது.

"வேண்டாம்; நீ சொல்லவேண்டாம். எனக்குத்தெரியும். நீ கதையை மேலேசொல்" என்றேன் உறுதியாக. அவனுக்குக் கஷ்டமாயிருந்தால் எதுக்கு அவனைச் சிரமப்படுத்தவேண்டும் என்று எனக்குத் தோன்றிற்று.

அவனுக்கு ஏதோ பேராபத்திலிருந்து தப்பிவிட்டவன்போலப் பெருமூச்சுவந்தது. ஆனுலும் சந்தேகக் கண்களோடு என்னைப் பார்த்தான். நான் சிகரெட்டை வாயில் வைத்துப் புகையை உள்ளே இழுத்தேன், ஒன்றும் நேராததுபோல் நிம்மதியாகக் கதை கேட்கத் தயாரானேன். பரபரப்பு எல்லாம் நீங்கி நான் நிச்சலனமாக இருந்தது அவனுக்கு மனதில் ஆறுதலை அளித்தது. "கதையைத்தொடர்ந்துசொல்லட்டுமா, அண்ணு?" என்று கேட்டான். என்வகுப்பில் ஒரு பையன் இருந்தான், ரமணி என்று பெயர். சொன்னுலும் கேளான், "வெளியேபோக அனுமதி, ஸார்" என்று ஆரம்பித்தால். அதட்டி உட்காரவைத்துவிட்டு வகுப்பைத் தொடர்ந்து நடத்த முயற்சித்தால் "போகட்டுமா, ஸார்?" என்று கையை உயர்த்திக்கொண்டு எழுந்து நிற்பான். அவன் ஞாபகம் இப்பொழுதும் வந்தது. அவனுடைய கெஞ்சற் பார்வையை இவனுடைய முகத்தில் இப்பொழுது கண்டேன். இப்பொழுது என் சிந்தனை சந்து பொந்துகளில் எல்லாம் திரும்ப ஆரம்பித்துவிட்டது. கதை கேட்க இருந்த ஆவல் ஏனே புறக்கணிக்கப்பட்டது. என் உள்ளம் கலைந்துவிட்டது. எதையோ ஆழமாகச் சிந்திப்பவன் போல் ஒருவிதமான யோசனையுமின்றி, காலியான மூளையோடு, கண்கள் எதையோ ஊன்றிப் பார்ப்பதுபோல, ஆனுல் ஒன்றுமே புலனில் படாமல்,...... இப்படியான ஒரு நிலைமை அடிக்கடி நமக்கு உண்டாவதில்லையா? அந்த மாதிரியான ஒரு நிலைமையைத்தான் நாடியது என் உள்ளம். ஆனுல் அவனுடைய உற்சாகம் ...இன்னும் அது இருந்ததா, இல்லையா?

"உம் ...... கோபாலபிள்ளைக்கு மனைவியாகக் கிடைத்தவள் சரஸ்வதி, மங்களத்தின் மகள், காணுமற்போன சங்கரசிவத்தின் தங்கை... அப்படித்தானே? மேலே சொல்."

"கண்டவர் கண்ணைப்பறிக்கும் அழகு. பார்ப்பவர் நெஞ்சை அள்ளும் எழில். யாரையும் மயக்கவல்ல ரூபலாவண்யம். பழையகாலத்திற் பிறர் கண்ணை வசீகரித்தாலே கற்பு அற்றவளென்று அர்த்தமாமே? அப்படிப் பார்த்தால் இந்தக் காலத்தில் கற்பு என்று ஒன்று இருக்கமுடியாது, அண்ணு. பவுடரும், ஸ்நோவும், சோளிரவிக்கையும் பிறர் கவனத்தைத் தம்மேல் திருப்ப உபயோகப்படும் சாதனங்கள்தானே. அழகாய்ப் பிறந்தது அவள் குற்றமா? ஆனுல் அடக்கமான குணம். பொறுமையுள்ள சுபாவம். கள்ளங்கவடில்லாத உள்ளம். கல்மஷமேயில்லாத மனம். மொத்தமாகச் சொன்னுல் தங்கம்தான் அவள்.

"மங்களமும் விசாலமும் வெகுகாலமாக நெருங்கிப் பழகியவர்கள். சரஸ்வதியை நாட்டுப் பெண்ணுக்க அவள் சிறுமியாக இருந்தபொழுதே விசாலம் திட்டம்போட்டுவிட்டாள். அப்பொழுது கோபாலன் போய்க்கொண்டிருந்த போக்கில் இது நடக்கமுடியாத சம்பந்தம் என்றுதான் விசாலம் ஏங்கினுள். ஆனுல் பிரமதேவன் போட்டமுடிச்சு இருந்தது. காலம் மாறியது. கோபாலபிள்ளை கோலாகலமாக ஊர் வந்தார். பெரிய இடத்துப் பெண்களையெல்லாம் தட்டிக் கழித்துவிட்ட விசாலத்தின் மனதிற் சரஸ்வதியின் ஞாபகம் வந்தது. அவர்கள் குடும்பம் கதி கெட்டு நசித்துப்போய், நொந்துபோய் இருந்

(தொடர்ச்சி 12ஆம் பக்கம் பார்க்க)


**கோட்டு விற்பனவு விளம்பரம்**
**இல. 795 Testy**

உடுவில்.

காலம் சென்ற முருகேசு சிவகுருநாதரின் ஆஸ்திக்கு உடுவில்,
1. சின்னத்தம்பி பொன்னம்பலம்
2. பெண் சின்னப்பிள்ளை

தத்துவகாரர்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் 795-ம் இலக்க தத்துவ வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னுல் விபரிக்கப்படும் இரு துண்டுக் காணிகள், 1954-ம் ஆண்டு அக்டோபர் (ஐப்பசி) மாதம் 27-ந் திகதி (27-10-54) புதன்கிழமை பிற்பகல் 3-30 மணி தொடக்கம் அந்தந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

**காணிகளின் விபரம்**

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப் பகுதி உடுவிற் கோயிற்பற்று சுன்னுகமிறை "வலம்பை அல்லது வலனக்கை" நிலப்பரப்பு நாலு (4-ம்) மற்றும் பயிர்களும் எல்லை: கிழக்கு, கன்னியர் தம்பிப்பிள்ளையின் பிள்ளைகளுக்குரிய ஆதனம். வடக்கு, அம்பலவாணி பெண் இராசம்மாவுக்கும் கதிர்காமு மார்க்கண்டு பெண் செல்லத்திற்குமுரிய ஆதனங்கள். மேற்கு, கைஒழுங்கை. தெற்கு, ருேட்டு. இதிற் சொரியலாய் நிலப்பரப்பு ஒன்று (1-ம்) அதற்குரியவைகளும்.

2. மேற்படி உடுவிலிறை "சனத்தான் வடக்கு அல்லது கமட்டான்" நிலப்பரப்பு ஒன்பதும் (9-ம் குளி 11-ம்) மற்றும் பயிர்களும் எல்லை: கிழக்கு, சின்னட்டி சின்னப்புவுக்கும் பெண்ணுக்குமுரிய ஆதனம். வடக்கு, உடுவில் ஊரெல்லை. மேற்கு, வல்லிபுரம் விசுவலிங்கத்திற்கும் பெண்ணுக்குமுரிய ஆதனம். தெற்கு, கனகசபைக்கும் பெண்ணுக்குமுரிய ஆதனம், இதடங்கலும்.

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை
Commissioner & Licensed Auctioneer
தெல்லிப்பழை, 1-10-1954 [5248]

**கோட்டு விற்பனவு விளம்பரம்**
**இல. 5601**

1. வேலுப்பிள்ளை கந்தையாவும்
2 பெண் கனகம்மாவும்

கொட்டடி, வழக்காளி

1. அந்தோனி சந்தியாப்பிள்ளையும் பெண்,
2. ரேசம்மாவும், நாவாந்துறை, வண். மேற்கு. எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் 5601-ம் இலக்க வழக்கின் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1954-ம் வருஷம் கார்த்திகை மாதம் 13-ம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

**தீர்வைத்தொகை:-** முதல் வட்டி ரூபா 1106-50-ம் ரூபா 1000/-க்கு 14-6-49 முதல் 5-8-49 வரை 15 வீத வட்டியும் பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு மொத்தம் ரூ. 175-35-ம்

**காணி விபரம்**

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வண்ணர்பண்ணைப் பிரிவு வண்ணுபண்ணை மேற்கு, இறை பிராயடி பர. நில. இலா. $\frac{3}{4}$- இதற்கெல்லை கிழக்கு ஒழுங்கை. வடக்கு, அந்தோனி, தமியானின உரிமைக்காரருக்கு உரிய ஆதனம். மேற்கு, அந்தோனி வயியானின் உரிமைக்காரருக்குரிய ஆதனம். தெற்கு, சுவாம்பிள்ளை பெண் ரேசையினுரிமைக்காரருக்குரிய ஆதனம். இதிற் சொரியலாய் $\frac{1}{3}$ (உள்ளும் புறமும்) வீடும் செய்பயிர்களும்.

S. Ambalavanar, கொம்மிஷனர்
புங்குடுதீவு, 5-10-1954 [5249]

# ஆசிரியருக்குக் கடிதங்கள்

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

3. பொன்னுவெளியிற் கிடைத்த படம் சென்னையில் பச்சையப்பன் கல்லூரியிலோ அல்லது யாழ்ப்பாணத்திலோ எடுத்த உண்மையான நிழற்படமாயிருக்க வேண்டும். அல்லது நாவலர் அவர்களை நேரிற் கண்ட சைத்திரிகர் ஒருவரால் ஆக்கப்பட்டு அச்சில் வந்ததாக வேண்டும். இது எனது தனித்த அபிப்பிராயம்.

4. லோட்டன் எடுத்த படப் பிரதிகள் உண்மைப் படத்தின் பிரதிகளாயிருந்தும் வழங்காமைக்குப் பல காரணங்கள் இருக்கின்றன.

ஒன்று: நாவலர் அவர்கள் படங்களையெல்லாம் ஏரம்பையர் படம் என்று சொல்லுகின்ற பரம்பரை வழக்கம்.

இரண்டாவது: பெரியவர்களுக்குப் படம் இல்லாமலிருப்பது நல்லதென்ற அபிப்பிராயம்.

மூன்றாவது: சென்னையில் அமைத்த படம் முழு உருவத்தோடும் ஆராதனைக்கு வைக்கத்தக்கவகையில் வெளி அலங்காரத்தோடும் அமைந்து, பிரபலஸ்தர்களாலும் அங்கீகரிக்கப்பட்டு வழங்கத் தொடங்கினமை.

நான்காவது: பொன்னுவெளியிற் கிடைத்த படத்திற் கால்களின் கீழ்ப்பாகம் தோன்றாமை. அவ்வாறே லோட்டன் எடுத்த பிரதிகளும் பூரண உருவம் ஆகாமை. (ஆராதிப்பவர்கள் பாதங்களோடு கூடிய பூரண உருவத்தையே விரும்புவார்கள்).

ஐந்தாவது: பொன்னுவெளியில் உள்ளவர்கள் இப்பொழுது வழங்கும் படத்தையும் உண்மையான நிழற்படம் என்று கருதியிருக்க, இங்கேயுள்ளவர்கள் பொன்னுவெளியின் படப் பிரதிகளாகிய லோட்டன் எடுத்த படங்களையும் ஏரம்பையர் படம் என்று கருதியமை.

ஆறாவது: ஆறுமுகநாவலர் சரித்திரத்தில் படத்தைப் பற்றி ஒன்றும் பேசாமை.

என்றிங்ஙனம் எத்தனையோ காரணங்கள் உண்மையான படம் வழங்காமலிருப்பதற்கு இருக்கின்றன.

பொன்னுவெளி உடையார் நாவலர் அவர்களோடும் இருபது வருடம் வரை தொடர்புபட்டவர்; கல்விமான்; சமயாசாரம் தவறாதவர். அவர் ஒரு போலியான படத்தை வைத்துப் பூசித்திருக்க மாட்டார். லோட்டன் படம் அமைத்த காலம், உடையார் நாவலர் அவர்கள் படத்தைப் பூசிக்கத் தொடங்கிய காலம் இரண்டும் ஆராயப் படவேண்டும்.

நாவலர் அவர்கள் காலத்தில் நிழற்படம் பிடிக்கும் வழக்கமில்லையென்று சிலர் வாதிக்கின்றார்கள். இது ஒத்துக்கொள்ளக் கூடியதாயில்லை. மகா வித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை நாவலர் அவர்களுக்கு மூன்றாண்டு முந்தி இறந்தவர்கள். பிள்ளை அவர்களின் நிழற்படம் எடுக்கக் கூடியதாயிருந்தும், எடுக்கத் தவறிவிட்டோமே என்று டக்டர் சாமிநாதையர் அவர்கள் வருத்தந் தெரிவித்திருக்கின்றார்கள்.

லோட்டன் எடுத்த படப் பிரதிகள் அபிமானிகளுக்குச் சந்தேகத்தை வருவித்தமையால், பொன்னுவெளியிற் கிடைத்த படத்தை அப்படியே வெளியிடுகின்றோம். அபிமானிகள் லோட்டன எடுத்த படப் பிரதிகளோடும் இப்பொழுது வழங்கும் படத்தோடும் ஒப்பிட்டுத் தீர்மானிக்கக் கடவர்.

சந்தேகம் ஒன்று தோன்றினமையால், நாவலர் அவர்கள் நிழற்பட வெளியீட்டுச் சபை, அபிமானிகளிடம் பெற்ற பணத்தைத் திருப்பிக்கொடுக்கத் தீர்மானித்து விட்டது. அபிமானிகளைப் பணம் அனுப்பாதிருக்கும் பொருட்டும், அனுப்பியவர்களைத் தங்கள் தங்கள் பணத்தை மன்னிப்போடும் ஏற்றுக் கொள்ளும்படியும் சபை அதி விநயத்துடன் கேட்டுக் கொள்ளுகின்றது.

பணம் சேகரிக்கும் பத்திரம் பெற்றவர்கள் தயை செய்து பத்திரங்களையும் சேர்ந்த பணத் தொகையையும் தனாதிகாரிக்கு அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்ளுகின்றோம். சேர்ந்த தொகையை, தந்த தந்தவர்களிடம் ஒப்பிக்க முடியுமாயின் ஒப்பித்து அவர்களிடம் பற்றுச் சீட்டுப் பெற்றுப் பணம் சேகரிக்கும் பத்திரத்துடன் அனுப்பி வைக்கும்படி வேண்டுகின்றோம். பணம் உதவிப் பின் ஏற்றுக் கொண்டவர்களின் பெயரும் தொகையும் வெளியிடப்படும்.

பொன்னுவெளியிற் கிடைத்த படம்பற்றி எழுந்த சந்தேகம் ஆராயப்படுகின்றது. ஆராய்ச்சி முற்றுப் பெற்றதும் சபை தன் தீர்மானத்தை வெளியிடும்.

சி. கணபதிப்பிள்ளை
ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் ஞாபகார்த்த சபைத் தலைவர்
சைவாசிரிய கலாசாலை,
திருநெல்வேலி. 5-10-54.

## விலக்கப்பட்டுள்ள தலைமை ஆசிரியர்

தேவரையாளிச் சைவ வித்தியாசாலையிற் கடந்த 27 வருஷ காலம் தலைமையாசிரியராகவிருந்த மு. செல்லையா ஆசிரியரை வேலையிலிருந்து விலகும்படி முகாமைக்காரர் சென்ற ஏப்பிரல் மாதம் 30 ஆம் திகதி அறிவித்தல் கொடுத்தார். தன் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களைப்பற்றி விரைவில் விசாரித்துத்தீர்ப்பளிக்க வேண்டுமென்று அந்த மாதத்திலேயே குறித்த தலைமையாசிரியர் யாழ்ப்பாணம் வித்தியா கந்தோருக்கு விண்ணப்பஞ் செய்தாராம்.

வித்தியா பகுதியார் மிகவும் பிந்தியே விசாரணை தொடங்கி முடித்து இன்று வரையும் ஏறக்குறைய 50, 55 நாட்களாகியும் விசாரணை முடிவு அறிவிக்கப்படவில்லையாம். குறித்த தலைமை யாசிரியர் வேலையில்லாமற் பல மாதங்கள் தத்தளித்துக் கொண்டிருப்பதை ஆசிரிய உலகம் பார்த்துக் கொண்டு சும்மா இருக்கலாமா? அதிகாரிகள் நத்தை வேகத்திற் காரியம் செய்வதைப் பார்க்கும்போது "பிள்ளைக்கு விளையாட்டுச் சுண்டெலிக்குச் சீவன் போகிறது" என்ற பழமொழிதான் நினைவுக்கு வருகிறது.

11-5-54 ஓர் ஆசிரியன்

## மட்டக்களப்பும் தமிழரசும்

ஈழகேசரி கிழக்குத் தபாலில், 'மட்டக்களப்பு நிதானம்; அரசியல் தலைவர்களின் போக்கு' என்ற தலைப்புகளின் கீழ் எழுதப்பட்டிருந்தனவற்றைப் படித்த பொழுது, வருத்தப்படாமல் இருக்கமுடியவில்லை.

திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலத்தின் அரசியற்போக்கு, மட்டக்களப்பு மக்களிடையே பரபரப்பை உண்டாக்கவில்லை என்று கூறுவதிற் சில உண்மைகள் இருப்பினும், சுயேச்சையாக நின்று மக்களை ஏமாற்றி ஏற்றம் பெற்ற யூ. என். பி. கொள்கையுடைய பாராளுமன்றப் பிரதிநிதிகளுக்கும் மட்டக்களப்பு மக்களிடம் செல்வாக்குக் குறைந்து விட்டது என்பது உண்மை. ஆனால் தமிழரசு இரும்புக் கோட்டைபோன்று கீழ்மாகாணப் பகுதியில் இருக்கிறதென்பதை மறுக்கமுடியாது. அப்படி இருந்தும் தமிழரசுக் கொள்கை இனி மட்டக்களப்பில் தலை காட்ட முடியாது என்று தங்கள் நிருபர் எழுதி இருக்கிறார். தமிழ் மக்களின் இதயக் குரலான தமிழரசுக் கொள்கை இடம் பெறுதாயின் வேறு எக் கொள்கைக்கும் இந்நாட்டில் இடமில்லை என்பதைக் கூறவிரும்புகின்றேன்.

எஸ். சுப்பிரமணியம்
மட்டக்களப்பு, 9-10-54

## கடிதர்க்கு விடை

'ரசிகன்' : உமது பெயரும் விலாசமும் கடிதத்திற் குறிப்பிடப் படாமையாற் கடிதம் வெளியிடப் படவில்லை. ப-ர்.

# வாழ்க்கையும் சமயமும்

## கலைகளை வளர்த்தல் அவசியம்

இச் சங்கத்தின் சிறப்புக் கூட்டம் சென்ற 10-10-54 ஞாயிற்றுக்கிழமை மாலை சங்கத் தலைவி ஸ்ரீமதி தனேஸ்வரி கணபதிப்பிள்ளை அவர்கள் தலைமையிற் சன்மார்க்க சபை மண்டபத்தில் நடைபெற்றது. அத்தருணம் தலைவி குறிப்பிட்டதாவது: இருபத்தைந்து, முப்பது வருடங்களுக்கு முன் கிராமங்களிலுள்ள கோவில்கள், பள்ளிக்கூடங்கள், வீடுகள் முதலாம் இடங்களில் நவராத்திரி விழா வெகு சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது. இக்காலத்தில் இது அருகி வருகின்றது. மாதர்களாகிய நாங்கள் சமய சம்பந்தமான விழாக்களை அழிய விடாமல் வளர்க்கவேண்டியது அவசியமாகும்.

யாழ்ப்பாணக் கலாநிலையச் செயலாளர் திரு. க. நவரத்தினம் அவர்கள் 'நவராத்திரி மகிமை' என்னும் பொருள் பற்றிப் பேசும்போது குறிப்பிட்டதாவது: மேல்நாடுகளிலே சமயமானது லௌகீக வாழ்க்கையிலிருந்து பிரிந்து நிற்கிறது. கீழ்நாடுகளிலே சமயமும் வாழ்க்கையும் ஒருமைப்பட்டுப்பிரிக்க முடியாததாக இருக்கின்றன. நவராத்திரி விழாவானது தமிழருடைய ஒரு கலை விழாவாகக் கருதப்பட்டு, வீரம், கல்வி, தனம் ஆகியவற்றைப் பெறுவதற்காக முறையே துர்க்கை, இலட்சுமி, சரஸ்வதி, ஆகிய தெய்வ வழிபாடுகள் செய்யப்படுகின்றன. வங்காளம், மைசூர், மலையாளம் முதலிய இடங்களிலே இப் பூசையானது மிக விசேஷமாகக் கொண்டாடப் படுகின்றது. யாழ்ப்பாணக் கிராமங்களிலே இருபது இருபத்தைந்து வருடங்களுக்கு முன்னர் இவ் விழா நன்கு கொண்டாடப் பட்டது. இக்காலத்தில் இதனை அநாகரீகப் பழக்கமென எண்ணிக் கைவிட்டு விட்டார்கள். இந் நிலை ஏற்படின் காலகதியிற் சமயமும் கலைகளும் அற்றுப்போய் மனித வாழ்க்கையானது உண்பதும் உறங்குவதாகவுமே முடிந்து விடும். இவ்வாறு மனிதன் மிருக வாழ்க்கை வாழாது சமய வாழ்க்கை வாழ்வது அவசியமாகும்.

கலாநிலைய மாணவிகளால் நவராத்திரி பூசை சம்பந்தபட்ட 'திருவெம்பாப் பிரார்த்தனை' 'கும்மி', 'கோலாட்டம்' 'நடனம்' என்பன பழைய கால சம்பிரதாய முறையில் நடாத்தப்பட்டன. திருமதி சின்னத்துரை மங்களேஸ்வரி அவர்களின் நன்றியுரையுடன் கூட்டம் நிறைவேறியது.


# கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. 578/G

புத்தூர் கிழக்கு, சிதம்பரப்பிள்ளை மகள் சிவபாக்கியத்தின் ஆஸ்தியின் பேரில்,

புத்தூர் கிழக்கு, சிதம்பரப்பிள்ளை கைம்பெண் வள்ளிப்பிள்ளை அல்லது தெய்வானை பாதுகாவலர்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் 578/Gஆம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஈட்டுத் துண்டுக் காணிகள், 1954ஆம் ஆண்டு ஒக்டோபர் (ஐப்பசி) மாதம் 30ஆந் திகதி (30-10-54) சனிக்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் முறையே அந்தந்தக் காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

## காணிகளின் விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப் பகுதி கட்டைவேலிக் கோவிற்பற்று அல்வாய் பெருமியார் குறிச்சியிறை "இணவொல்லை" நிலப்பரப்பு $13\frac{3}{8}$ம் எல்லை கிழக்கும் தெற்கும் சிதம்பரம் அம்பலவாணசுவாமி கோவில் ஆதனம். வடக்கு சின்னத்தம்பியார் வேலுப்பிள்ளைக்கும் மறுபேருக்கு முரிய ஆதனம். மேற்கு நடை வரம்பு. இவ் வெல்லைக்குட்பட்ட நிலம், பனைகள், தென்னைகள், எலுமிச்சை, மாமரங்கள், மாதுளைகள் முதலிய யாவிலும் சொரியலாய் $\frac{5}{96}$ பங்கில் சொரியலாய் $\frac{1}{6}$ பங்கும் இக் காணிக்கு வடக்கிலும் தெற்கிலுமுள்ள காணிகளிலிருக்கும் கிணறுகளில் வழமையாயிறைத்துவரும் தண்ணீர்ப்பங்குகளும் வழிவாய்க்கால் உரித்தும்.

2. மேற்படி அல்வாய்பெருமியார் குறிச்சியிறை "இணவொல்லை" நிலப்பரப்பு $10\frac{5}{8}$ம் தோட்டம் 2. எல்லை: கிழக்கு, சிதம்பர அம்பலவாணசுவாமி கோவிலுக்குரிய ஆதனம். வடக்கு, இணவொல்லை நிலப்பரப்பு $12\frac{3}{4}$ விலைப்பட்ட காணியும் மறுவும். மேற்கு நடை வரம்பு, தெற்கு இணவொல்லை நிலப்பரப்பு $22\frac{1}{4}$ம் விலைப்பட்ட காணி. இவ்வெல்லைக்குட்பட்ட நிலத்தில் சொரியலாய் $\frac{3}{16}$ பங்கும் பனை நிலத்தில் $\frac{3}{16}$ பங்கும் இன்னும் குறித்த பங்குக்குமுரிய தென்னைகளிலும் தென்னைகளடங்கிய நிலத்திலும் சொரியலாய் ஆறில் ஒரு பங்கும் குறித்த காணிக்குத் தென் கிழக்குப் பக்கமாகவுள்ள இணவொல்லை யென்னும் காணிக்குள்ளும் தென்மேற்குப் புறமாகவுள்ள வட்டுவத்தை என்னும் காணிக்குள்ளும் இருக்கும் கிணறுகளிலிதற்குரிய பங்கும் வழி வாய்க்காலுரித்தும்.

3. மேற்படி பருத்தித்துறைக் கோவிற்பற்று புலோலி கிழக்கு மழவராய குறிச்சியிறை "தானத்தான்வடலாவத்தை" நிலப்பரப்பு $13\frac{3}{8}$ம் வயல் நெற்பரப்பு $11\frac{3}{8}$ம் தானத்தான்வடலாவத்தை வீடு 1 கூரை சிதைவு இவற்றில் 1ஆம், 3ஆம் பிரிவுகளுக்கே கூடிய நிலப்பரப்பு 14 குழி $12\frac{3}{4}$ல் வடபுறமாக நிலப்பரப்பு 3. உலாந்தா G. C. கணபதிப்பிள்ளையால் விந்தாரிக்கப்பட்ட 1504ம் இலக்கப் படத்தில் சுட்டிய 5ஆம், 6ஆம், 7 ஆம், 8 ஆம் இலக்கத் துண்டுகளின்படி நிலப்பரப்பு 2 குளி $6\frac{1}{16}$க்கு எல்லை கிழக்கு இதன் கீழ்க் காட்டும் ஆதனம். வடக்கும் மேற்கும் தெற்கும் வல்லியார் சின்னத்தம்பிக்கும் மறுபேருக்குமுரிய காணிகள். இவ் வெல்லைக்குட்பட்ட நிலம் பனைகள், வடலிகள், மாமரம், குமிழ்கள், ஒதிகள் முதலியயாவிலும் சொரியலாய் அரைவாசி ($\frac{1}{2}$).

4. மேற்படி புலோலி கிழக்கு வென்றிபாகுதேவன் குறிச்சியிறை "கிழக்கு வடலாவத்தை" நிலப்பரப்பு $4\frac{3}{4}$ம் முன் விற்றது நீக்கி மேற்காட்டிய படத்தின்படி வடக்குப்புறமாக இருக்கிற 4ஆம், 9ஆம் துண்டுகளுக்குக்காட்டிய குழி $17\frac{9}{16}$க்கு எல்லை கிழக்கு சுப்பர் குமரப்பருக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். வடக்கும் தெற்கும் வல்லியார் சின்னத்தம்பிக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். மேற்கு இதில் குறிக்கப்பட்டிருக்கும் 3ஆம் ஆதனம். இவ் வெல்லைக்குட்பட்ட நிலம் வடலிகள் யாவிலும் சொரியலாய் அரைவாசி ($\frac{1}{2}$).


5. மேற்படி புலோலி கிழக்கு மழவராய குறிச்சியிறை "குருவிச்சாஞெல்லை வட கிழக்கு" நிலப்பரப்பு 3 குடியிருப்புவீடு 1 உலாந்தா G. C. கணபதிப்பிள்ளையால் விந்தாரிக்கப்பட்ட குறித்த 1687-ம் இலக்கப்படத்திற் காட்டிய 1 ஆம் இலக்கத் துண்டுக்கு நிலப்பரப்பு 4-ம் குழி $3\frac{8}{16}$க்கு எல்லை கிழக்கு கந்தப்பர் கணபதிப்பிள்ளைக்கும் மறுபேருக்குமுரிய ஆதனமும் ஒழுங்கையும். வடக்கு இராமர் கைம்பெண் புதியாத்தைக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். மேற்கு கந்தையா இராமலிங்கத்துக்கும் மறு பேருக்குமுரிய ஆதனம். தெற்கு சின்னத்தம்பி கந்தையாவுக்கும் மறுபேருக்கு முரிய ஆதனம். இவ்வெல்லைக்குட்பட்ட நிலம் கிணறு பனைகள் வடலிகள், மாமரம், புளியமரங்கள் யாவிலும் சொரியலாய் அரைவாசி ($\frac{1}{2}$)

6. மேற்படி இறை "தானத்தான்வடலாவத்தை கிழக்கில் நடு" நிலப்பரப்பு $4\frac{5}{8}$ மேற்படி தோட்டம் 2. எல்லை கிழக்கும் வடக்கும் சுப்பர் குமரப்பருக்கும் மறுபேருக்கு முரிய ஆதனங்கள். மேற்கு வல்லியார் சின்னத்தம்பிக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். தெற்கு மாப்பாணர் அப்பாப்பிள்ளைக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். இவ் வெல்லைக்குட்பட்ட நிலம் கிணறு வடலிகள் தென்னைகள், மாமரங்கள் முதலிய யாவிலும் சொரியலாய் நாலில் ஒரு பங்கும் ($\frac{1}{4}$) குறித்த நிலத்தில் வடபுற அரைவாசியில் என்னால் உண்டுபண்ணிய இளம் வடலிகளில் சொரியலாய் அரைவாசியும்

7. மேற்படி அல்வாயிறை "இணவொல்லை" நிலப்பரப்பு 3-ம் பயிர்களும். எல்லை கிழக்கு, ஏரம்பு பெண் பொன்னுச்சிக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். வடக்கு சின்னையா கைம்பெண் சிதம்பரத்தின் ஆதனம். மேற்கு கணபதியார் சண்முகத்தின் ஆதனம். தெற்கு கணபதிப்பிள்ளை சிதம்பரப்பிள்ளையின் ஆதனம். இதிற் சொரியலாய் $\frac{1}{7}$ பங்கு.

8. மேற்படி அல்வாயிறை" "இணவொல்லை" நிலப்பரப்பு $3\frac{1}{4}$ம் பயிர்களும். எல்லை கிழக்கு கணபதிப்பிள்ளை சிதம்பரப்பிள்ளைக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். வடக்கு கனகசபை பெண் முத்துவுக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். மேற்கு தம்பையா பெண் பொன்னம்மாவுக்கும் மறுபேருக்கு முரிய ஆதனம். தெற்கு கார்த்திகேசு ஆறுமுகத்திற்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். இதில் சொரியலாய் $\frac{1}{4}$ல் சொரியலாய் $\frac{1}{7}$ பங்கு.

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை
Commissioner & Licensed Auctioneer
தெல்லிப்பழை, 4-10-54.



# பாலர் பகுதி

## மாமா மறுமொழி

**பி. சுப்பிரமணியம், கோலாலம்பூர்:** உமது 'பூதம் காத்த குளம்' என்ற கதையும், படமும் கிடைத்தன. நீர் கதைகள் கட்டுரைகள் அதிகமாக எழுதவும், கடதாசியின் ஒரு பக்கத்தில் மட்டும் பேனையினுல் வடிவாய் எழுதவேண்டும். உமது கதைகள், கட்டுரைகள் பாலர் பகுதியில் இடம்பெற வேண்டுமானுல் நீர் ஒரு பாலர் பகுதி அங்கத்தவனுகச் சேரவேண்டும். உமது விண்ணப்பத்தை இப்போதே அனுப்பவும்.

**இ. புவனேஸ்வரி (910)** உமது விண்ணப்பப் பத்திரமும் கடிதமுங் கிடைத்தன. "நான் தமிழில் நல்ல கெட்டிக்காரி அல்ல, என்ருலும் இயன்றவரை முயற்சித்துக் கட்டுரை, கதைகள் எழுதி அனுப்புவேன்" என்று நீர் கூறியதிலிருந்தே தமிழின் மீது உமக்குள்ள அன்பு எத்தகையது என்று வெளிப்படையாகத் தெரிகிறது. கதை கட்டுரை எழுதி யனுப்பவும்; வெளியிடுவேன். உமது சினேகிதர்களையும் பாலர் பகுதியில் சேரச்சொல்லவும். பலர் சேருவதானுல் ஒவ்வொருவரும் தனித்தனி விண்ணப்பப்பத்திரத்தை நிரப்பி எல்லாவற்றையும் ஒன்ருகச் சேர்த்து ஒரு கடிதத்தில அனுப்பலாம். உமக்கு என் ஆசிகள்.

கீழ்க்காணும் மருமக்களிடமிருந்து கதைகளும் கட்டுரைகளும் கிடைத்துள்ளன. சிறந்தவைகள் பாலர் பகுதியில் வெளிவரும்.

க. யோகலிங்கம் (877) (இரண்டு கட்டுரைகள்).
வ. தியாகராஜா (886)
இ. குமாரசாமி (882)
தா. தில்லைநாதன் (899)
ஏ. பி. செல்லையா (898)
செ. குணரத்தினம் (890)
கெ. முத்துலிங்கம் (841)
தேவி விஜயரத்தினம் (906)
சி. மகேந்திரதேவி (864)
நா. நாகலிங்கம் (901)
ப. கார்த்திகேசு (884)

1. கே. சதாசிவம்
2. விமலன்
3. து. தியாகராஜா

நீவிர் மூவரும் பாலர் பகுதி அங்கத்தவர்களாகச் சேர்ந்ததன் பின்புதான் உங்கள் விஷயங்கள் பாலர் பகுதிக்கு ஏற்றுக்கொள்ளப்படும். முன்பே பாலர் பகுதி அங்கத்தவர்களானுல் கடிதத்தில் உங்கள் சேர்வு இலக்கங்களைக் குறிப்பிட்டு எழுதுவதற்கு மறந்துவிட வேண்டாம்.

**இ. நாகராசா (889)**
உமது கடிதங் கிடைத்தது. அத்துடன் ஓர் அழகான விளம்பரமும் எழுதி அனுப்பியிருக்கிறீர். உமது கட்டுரையை நான் படித்துப் பார்க்காமல் எவ்விதம் வெளிவரும் என்று விளம்பரஞ் செய்ய முடியும்? உமது கட்டுரையை விரைவில் அனுப்பி வைக்கவும்.

**அன்பான மருமக்களே!**

பெரும்பாலான மருமக்களிடமிருந்து கதைகளும், கட்டுரைகளும் கிடைத்து வருகின்றன. இவர்களின் முயற்சிக்கு எனது ஆசிகள் உரியதாகுக. ஆனுல் பாலர் பகுதிக்கு எழுதும் மருமக்களிற் பெரும்பாலோர் 'மாலைக் காட்சி', 'காலைக் காட்சி' என்ற இந்த இரண்டு விஷயங்களையும் பற்றித்தான் கட்டுரைகள் எழுதி வருகின்ருர்கள். இனிமேலும் எனது அன்பான மருமக்கள் இந்த இரண்டு விஷயங்கள் பற்றி மட்டுமே எழுதாமல் வேறு விஷயங்கள் பற்றிய கட்டுரைகள் எழுதவேண்டும் என ஆசைப்படுகிறேன். கதைகள் எழுதும் மருமக்களும் தங்கள் கதைகளைப் பாட புத்தகங்களில் வரும் கதைகளைத் தழுவியே எழுதி வருகின்றனர். இந்தப் பழக்கத்தை அவ்விதம் எழுதும் மருமக்கள் மறந்துவிட வேண்டும். நன்ருக யோசித்துச் சொந்தமான புதிய விஷயங்களை எழுதி அனுப்பலாம். உங்கள் வீடு, பள்ளிக்கூடம் இவற்றில் நடைபெறும் நிகழ்ச்சிகளை வைத்தே நீங்கள் ஒரு அழகிய கதையை எழுதிவிடலாம். அவ்விதமிருக்க ஏன் மற்றவர்களின் கதையைத் தழுவி எழுதவேண்டுமோ தெரியவில்லை. இன்றுதொடக்கம் இந்தப் பழக்கத்தைக் கைவிட்டுவிடத் திட சங்கற்பஞ் செய்துகொள்ளுங்கள்.

உங்களிற் பலர் கதை கட்டுரைகள் எழுதி எனக்கு அனுப்பும்பொழுது பெயர், விலாசத்தை எழுதுவதுடன் நின்றுவிடுகிறீர்கள். இனிமேல் உங்கள் பதிவிலக்கத்தையும் எழுதி அனுப்ப மறந்துவிட வேண்டாம். உங்கள் எல்லோருக்கும் என் ஆசிகள்.

கேசரி மாமா

## உங்களுக்குத் தெரியுமா?

— த. யோகநாதன் —

298. ஹிந்தோளம் என்னும் இராகத்தை ஒத்திருக்கும் ஹிந்துஸ்தானி இராகம் எது?

299. முதல் முதல் நோபெல் பரிசு எப்போது கொடுக்கப்பட்டது?

300. ஸயாம் நாட்டின் மறு பெயர் என்ன?

301. கீழ்க் கணக்கு என்பது எது?

302. பாகிஸ்தானிலுள்ள பெரிய அணைக்கட்டு எது?

303. உலகத்திலே மிகச் சிறிய தேவாலயம் எங்கே உண்டு?

304. 48 நட்சத்திரங்களுடன் 6 வெள்ளைக் கோடுகளும் 7 சிவப்புக் கோடுகளும் உள்ள கொடி எந்த நாட்டுக்குரியது?

305. மின்மினிப் பூச்சி மின்னுவதற்குக் காரணம் ஒருவித 'வைடமின்' அதனிடம் இருப்பதுதான். என்பதைக்கண்டறிந்த அறிஞர்யார்?

206. ஆந்தைக்குப் பகலில் கண் தெரியாது என்பது உண்மையா?

307. எட்டுத்தொகை நூல்களுள் ஒன்ருகிய நற்றிணை தொகுப்பித்தவர் யார்?

308. இலங்கைத் தமிழரசுக் கட்சித் தலைவர் யார்?

309. திருமுருகாற்றுப் படையைக் கேட்டு முருகக் கடவுள் சங்காரம் செய்த பூதம் எது?

(விடைகள் 12ஆம் பக்கம்பார்க்க)

## புதிய மருமக்கள்

**பி. சுப்பிரமணியம் (908)** பட்லர் ரோட், திறம்பான் வடக்கு, திறம்பான்.

**க. சதாசிவம் (909)** அரசடி மெ. மி. பாடசாலை, மட்டக்களப்பு.

**புவனேஸ்வரி இராமலிங்கம் (910)** சுண்டிக்குளி பெண் பாடசாலை, யாழ்ப்பாணம்.

**எம். எச். எம். அபூபக்கர் (911)** அரசினர் சிரேஷ்ட பாடசாலை, அழுத்துகம.

**எல். கங்காதரன் (912)** 306, காங்கேசன் துறைரோட், யாழ்ப்பாணம்.

**எஸ். மனோஹரன் (913)** கொட்டடி புதுரோட், யாழ்ப்பாணம்.

**எஸ். நடேஸ்வரன் (914)** கொட்டடி புதுரோட், யாழ்ப்பாணம்.

**எம். அன்வர் அலி (915)** 600, மெயின்வீதி, மாததளை,

**எஸ். சவாஹிர் பரீத் (916)** 550, மெயின்வீதி, மாத்தளை.

**சி. சிவநாதன் (917)** பழைய வைத்தியர் ரோட், தெஹிவல.

**இ. மனோன்மணி (918)** சாசாலை, சாவகச்சேரி.

**யாசின் தாஹா முகம்மது** [919) காத்தான்குடி. 3ஆம குறிச்சி.

**வ. க. கோகிலம் (920)** வவுண்டறி ரோட், மட்டக்களப்பு.

**பொன்னம்பலம் பேரின்பநாயகம் (921)** புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு.

**நீ. முத்துராஜா (922)** ரோ. க. பாடசாலை, விடத்தல்தீவு, மன்னுர்.

**சோ. அருண்மொழித்தேவன் (923)** சரவணை மேற்கு, வேலணை.

## மாலைக் காட்சி

நீ. ஞானசீலன் (838)

கதிரவன் தன் கடமையைச் செய்து களைத்தவன் போன்று பொன் ஒளியை வீசிக்கொண்டு அடிவானத்தில் அரைகுறையாக மறைந்துகொண்டு இருக்கும் நேரம்.. மானிடர் தம் தம் தொழில்களை விட்டு மாலைப் பொழுதைக் கழிக்கும் பொருட்டு ஆயத்தமாகின்றனர். உதாரணமாக உழவன் தன் வயலில் வேலையை விட்டுவிட்டு கலப்பையை எடுத்துத் தோளில் வைத்துக்கொண்டு எருதுகளை முன் நடத்தித் தன் வீடு வந்து சேர்கிருன்.

அப்போது அவன் மனைவி மனைக்குத் தீபம் ஏற்றிக் கணவனை வரவேற்கிருள். பின் ஆலயத்தில் மணி அடிக்க அங்கே சென்று தம் குலக்கடவுளை தொழுது வீடு வந்து மாலை உணவு உண்டு நித்திரைக்குச் செல்கின்றனர். இதற்கு மிருகம் பட்சி முதலியன விதிவிலக்கல்ல. மிருகங்கள் தங்கள் இரைதேடும் தொழிலைவிட்டு இருப்பிடத்திற்கு விரைந்து செல்கின்றன. உதாரணமாக, பசு தன் கன்றையும் கூட்டிக்கொண்டு எசமான் வீடு சென்று அவர்க்கு இனிய பால் ஈந்து, அவரால் அளிக்கப்பட்ட பசிய புல் உண்டு, அலுப்புத்தீர உறங்க ஆயத்தமாகின்றது. பட்சிகளும் தம் தம் இரை தேடும் வேலைவிட்டுத் தத்தம் கூடுகளுக்குச் செவ்வானத்திற் சிறகடித்துப் பறந்து செல்கின்றன.

குளத்தில் தாமரை மலர்கள் தங்கள் காதலன் பிரிவு ஆற்றமாட்டாதனபோல் தங்கள் இதழ்களைச் சுருக்கிக் கொள்கின்றன. அல்லிமலர்கள் தங்கள் காதலன் அம்புலி வரவை எதிர் பார்க்கின்றன. இன்னும் மலர்களில் மது உண்டு மயங்கிக் கிடக்கும் பொன் வண்டுகள் மயக்கம் தெளிந்து தாங்கள் இருக்கும் மலர்கள் தங்களையும் சேர்த்துக் குவிந்துகொள்ளப் போகின்றன எனப் பயந்து மலரை விட்டுப் பறந்து செல்கின்றன. இப்படிப் பல காட்சிகள் மாலை நேரத்தில் நடைபெறுகின்றன. இக்காட்சிகள் மனிதனுக்கு இயற்கை அழகை எடுத்துக்காட்டி மகிழச் செய்கின்றன. என்னே மாலைக் காட்சியின் மாட்சி!

---

பாலர் பகுதிக்கு விண்ணப்பப்பத்திரம் அல்லது கதை கட்டுரைகள் அனுப்புவோர் மறந்துவிடாமற் கீழே காணும் விலாசத்திற்கே அனுப்பவும்.

**கேசரி மாமா**
ஈழகேசரி நிலையம்
சுன்னுகம் (இலங்கை)

---


வட-இலங்கைத் தமிழ் நூற் பதிப்பக வெளியீடு:

ஆங்கில, தமிழ்ப் பாடசாலைகளில் உபயோகித்தற்குரிய

**தவணைப் பரீட்சை இடாப்பு**
[TERM EXAMINATION SCHEDULE]

| | | | |
|---|---|---|---|
| 10 பாடங்கள் எழுதக்கூடிய | 24 பக்கம் | — | 2-50 |
| ,, ,, ,, | 36 ,, | — | 3-50 |
| 14 ,, ,, | 24 ,, | — | 3-00 |
| ,, ,, ,, | 36 ,, | — | 4-00 |

[தபாற் செலவு வேறு]

தமிழ், ஆங்கில பாடசாலைகளிலும் கல்லூரிகளிலும் நடாத்தப்படும் 3 தவணைப் பரீட்சைகளிற்கும் உபயோகிக்கக் கூடியதாகத் தயார் செய்யப்பட்டுள்ளது. மாணவர் ஒவ்வொருவரினதும் சேர்வு இலக்கம், இலக்கம், பெயர், பாடங்களின் புள்ளிகள், கூட்டு மொத்தம், சராசரி, தகுதி நிலை ஆகிய விபரங்களைக் குறிப்பதற்கு ஒவ்வொரு தவணைப் பரீட்சைக்கும் புறம்பாகக் கோடுகள் இடப்பட்டுள்ளன.

எல்லாப் புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்

சுன்னுகம்: தனலக்ஷ்மி புத்தகசாலை


---

### விண்ணப்பப் பத்திரம்

ஈழகேசரி — பாலர் பகுதி
கேசரி மாமா, ஈழகேசரி, சுன்னுகம்.

அன்புள்ள மாமா,
தயவுகூர்ந்து என்னை ஈழகேசரி-பாலர் பகுதியிற் சேர்த்துக்கொள்ளுமாறு வேண்டுகின்றேன்.

முழுப்பெயர்: ____________

விலாசம்: ____________

____________

பிறந்த திகதி ____________

____________
தந்தையார் அல்லது ஆசிரியர் ஒப்பம்

### —கவனிக்கவும்—

ஈழகேசரி பாலர் பகுதியில் 6 வயதுக்கு மேற்பட்டவர்களாயும், 19 வயதுக் குட்பட்டவர்களாயும் உள்ள சகலரும் அங்கத்தவர்களாகச்சேரலாம். அங்கத்தவர்களாகச் சேர விரும்புவோர் இங்கு வெளியாகியுள்ளவிண்ணப்பப் பத்திரத்தை நிரப்பி அனுப்ப வேண்டும்.

T'Phone No. 805

Registered at the G. P. O. as a Newspaper

25TH YEAR OF PUBLICATION

# EELAKESARI

NATIONALIST TAMIL WEEKLY
Largest Circulation in Ceylon, India, Burma & Malaya Union
Founder: N. PONNIAH

Vol. 25 | Chunnakam, Sunday, Oct. 17, 1954 | No. 14

சந்தா விபரம்

ஆண்டுச் சந்தா:
இலங்கை-இந்தியா ரூ. 6-00
மலாயா — $ 6-00
தனிப்பிரதி சதம் 10. காசு 10

## கேட்டதும் நடந்ததும்.

(9ஆம் பக்கத் தொடர்ச்சி)

தது. முன்போ விசாலம் வாய்விட்டுக்கேட்க அஞ்சின காலம். ஆனால், இப்பொழுதோ மங்களம் கெஞ்சவேண்டியகாலம். ஆனால் விசாலம் தன் எண்ணத்தைத் தெரிவித்ததும் மங்களத்துக்குப் "பழம் நழுவிப் பாலில் விழுந்தமாதிரி இருந்தது. அவளுடைய மகன் வீட்டை விட்டு ஓடியதிலிருந்து தவியாய்த் தவித்துக்கொண்டிருந்த மங்களம் கைதூக்கிவிடவந்த தெய்வமென்று விசாலத்தைக் கொண்டாடியதில் வியப்பொன்றுமில்லை. "கரும்பு தின்னக் கைக்கூலியா வேண்டும்" என்று கேட்டே விட்டாள். அப்புறமென்ன? கல்யாணம் நடந்தேறியது. விசாலத்தின் நெடுநாளைய கனவும் கைகூடியது.

"ஆடம்பரமாக நிறைவேறியது விவாக வைபவம் கல்லாறிலே ஒரு கல்யாணம் என்றால் அது ஒரு பொது விஷயம். சிறிய ஊரல்லவா? ஒற்றுமை நிறைந்த அந்தக் கிராமவாசிகளிடம் ஒத்துழைப்பும் மற்றவர்களுக்கு ஒத்தாசை செய்யவேண்டும் என்ற எண்ணமும் மலிவு. அதனால் ஊர் முழுவதுமேகூடி மும்முரமாக உதவிசெய்து சீரும் சிறப்புமாகக் கல்யாணத்தை நிறைவேற்றிவைத்தனர். ஊர்வலமும் வேடிக்கைகளும் நான்கு நாட் கொண்டாட்டமும் ஓய்ந்தன. சரஸ்வதி ஸ்ரீமதி கோபாலபிள்ளையானாள். நாட்கள் கழிந்தன.

"ரங்கசாமியிடம் மோட்டாரிருக்கும்பொழுது புதுத் தம்பதிகள் கவலையின்றி ஊரைச்சுற்றி வந்தார்கள். அந்த ஊரில் ஒரு செத்த கல்லூரி, உயிர்க் கல்லூரி, ஒரு பூங்கா என்று ஏதாவது இருந்தால்தானே? ஒரு நாள் ஒரு படகை அமர்த்திக்கொண்டு சமீபத்திலுள்ள ஒரு தீவுக்கு எல்லோருமாகப்போய்வந்தார்கள். ஆனால் இதிலெல்லாம் கோபாபிள்ளையின் மனது லயித்திருந்தது என்று சொல்வதற்கில்லை. சொல்லமுடியாத, இன்னதென்றே தெரியாத ஏக்கம் குடிகொண்டவர்போற் காணப்பட்டார். மனைவியுடன் சல்லாபமாகப் பொழுது போக்கவோ காதல்வார்த்தைகள் பொழியவோ அவருக்குப் பொழுதிருக்கவில்லை. அவற்றைச் சரஸ்வதி விரும்பினளா, இல்லாததினால் மனக் கவலை அடைந்தாளா என்பதுமில்லை. ஏதோ சர்வசாதாரணமான நிகழ்ச்சிகளில், கல்யாணமும் ஒன்று என்றுதான் இருவரும் கருதினார்கள்போலும். மானே, தேனே, மரகதமே என்று பேசக் கற்றுக்கொள்ளவில்லை, கோபாலபிள்ளை. அப்படியான வார்த்தைகள் அவருடைய சுபாவத்திற்குப் பொருந்தியவையுமல்ல. 'ஏ' என்று தான் சரஸ்வதியை அதிகாரத் தொனியோடு அழைக்கத் தலைப்பட்டார்.

சரஸ்வதியும் கண்மணியும் மிகுந்த அன்னியோன்னியமானார்கள். நெருங்கிய தோழிகள்போல் சதா சிரிப்பும் பரிகாசமும் இருவரிடையே. ஆண்கள் முன்னால்மட்டும் இந்தக்கிண்டல்கள் ஒன்றும் கிடையா. ஆனால் ரங்கசாமி என்றும்போலத்தான் இருந்தாலும் கண்மணியை அடிக்கடி கண்டுபிடிக்கமுடியாமல் அவஸ்தைப்பட்டான். 'ஏதேது? அண்ணியோடுதான் சதாகாலமும் கொஞ்சல், என்று அன்போடு ஒருநாள் அதட்டிக்கேட்டு விட்டான். "என்னைக்கூட மறந்துபோச்சோ?" என்று ஏக்கத்தோடு அவன் பரிதாபமாக அவளிடம் கெஞ்சியபோது கண்மணிக்கு 'களுக்' என்று சிரிப்புவந்துவிட்டது. கணவனுடைய தவிப்பை உணர்ந்துகொண்டாள். அவனைப்பார்த்து அநுதாபங்கொண்டாள். ஆனால் அவள் நடத்தையில் ஒருவித மாறுதலும் உண்டாகவில்லை. இந்த இரு இளம் பெண்களுக்கும் பேசுவதற்கு என்னதான் இருந்ததோ? சதா ஒன்றாகவேயிருந்தார்கள்.

மங்களமும் விசாலமும் கிழடுகள். இளம் சோடிகளின் இன்பப்பிணைப்பைக் கண்டு உள்ளம் நிறைந்தார்கள். மகளும் மருமகளுமாகப் போட்டி போட்டுக்கொண்டு உபசரணை செய்தார்கள். இந்த அமைதியும் வீட்டில் நிறைந்திருந்த மௌனமான இன்பரேகையும் வரப்போகும் எந்தப் புயலுக்கு முன்னோட்டமோ, யார் கண்டார்கள்? கோபாலபிள்ளை மலாயாவுக்குத் திரும்பும் நாளும் நெருங்கிக்கொண்டிருந்தது. அவர் பிரயாணத்துக்குத் திட்டம்போட்டுத் திகதியும் குறிப்பிட்டு வேண்டிய ஆயத்தங்களில் ஈடுபடத் தலைப்பட்டார். இன்னும் ஆறு வாரங்களில் தம்பதி சமேதராய் நீலக் கடலில் மிதந்துசெல்ல ஏற்பாடாயிற்று. — தொடரும்.

### விவேகானந்தசபை சமயபாடப் பரீட்சை
### 11,600 மாணவர்கள்

கொழும்பு விவேகானந்த சபையார் வருடந்தோறும் நடாத்தும் சைவ சமய பாடப் பரீட்சை 10-10-54 இல் இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் நடைபெற்றது. 192 பாடசாலைகளிலிருந்து 11,600-க்கு மேற்பட்ட மாணவர்கள் இப் பரீட்சையிற் பங்குபற்றினர். எந்தவருடத்திலும் இவ்வளவு பெருந்தொகையான மாணவர்கள் இப் பரீட்சைக்குத்தோற்றியதில்லை. சென்ற வருடத்திலும் பார்க்க 4500-க்கு அதிகமாக மாணவர்கள் இவ்வருடம் தேறியுள்ளனர்.

### சரஸ்வதிபூசை

சுழிபுரம் ஆறுமுக வித்தியாசாலையிற் சென்ற 6-10-54 புதன்கிழமை காலை மாணவர் சங்கத்தின் ஆதரவில் சரஸ்வதி பூசை கொண்டாடப்பட்டது.

### கணபதி வித்தியாலயத்தில் கலைமகள் விழா

சென்ற 7-10-54 கொழும்பு தட்டாரத் தெருவிலுள்ள கணபதி வித்தியாலயத்தில் கலைவாணிக்கு விசேட பூசை, ஆராதனைகள், கூட்டுவழிபாடுகள் நடைபெற்றன. தலைமை ஆசிரியரால் பல பிள்ளைகட்கு ஏடு தொடக்கி வித்தியாரம்பம் செய்துவைக்கப்பட்டது. அன்று பல பிள்ளைகளைப் பாடசாலையிற் சேர்த்துக் கொண்டார்கள்.

வித்தியாலய முகாமைக்காரர் திரு கணபதிச்செட்டியார் அவர்களும் தலைமை ஆசிரியர் இ. சி. சோதிநாதன் அவர்களும் விரிவுரைகள் ஆற்றினர்.

### கொழும்பு இந்துக் கல்லூரி

சென்ற 5-10-54 செவ்வாய்க்கிழமை மாலை கொழும்பு இந்துக்கல்லூரி இந்துமாணவர் சங்கத்தின் ஆதரவிற் கலைமகள் விழாக் கொண்டாடப்பட்டது.

### விடைகள்

298. மால்கோஷ்.
299. கி. பி. 1901.
300. தாய்லந்து.
301. தமிழ் நூல் வரிசைகளுள் ஒன்று.
302. சுக்கூர்.
303. அமெரிக்காவில்.
304. ஐக்கிய அமெரிக்கா.
305. டக்டர் வில்லியம்.
306. பொய். மனிதனைவிட மிக நன்றாக அவை பார்க்கும். ஆந்தை ஒரு காட்டில் இருப்பது கண்டால் மற்றப் பட்சிகள் பயந்து அந்தக் காட்டை விட்டே ஓடிப்போகும். இதற்காகவே ஆந்தை பகலில் வெளிவருவதில்லை.
307. பண்ணுடு தந்த பாண்டியன் மாறன் பெருவழுதி,
308. எஸ். ஜே. வீ. செல்வநாயகம்.
209. கிழகி.

### வெலிக்கந்தையில் பால் நிலையம்

ஒரு தென்னைமரம் வளர்ந்து நல்ல பயன் தரத் தண்ணீரும் பசளையும் எத்துணை அவசியமோ, அதுபோலப் பாலர்களின் உடல் வலுவும் வனப்பும் கொண்டிருக்க நல்ல உணவு அவசியம். அதிலும் சேவசத்துமிக்க பால் மிக அவசியம். அதற்காகவே அரசினர் இலவசமாகப் பால் கொடுத்து வருகின்றனர். இவ்வாறு வெலிக்கந்தைப் பால் நிலையத்தைத் திறந்துவைத்துத் திரு. என். ஜயசேகர டி. எல். ஓ. அவர்கள் பேசினார்கள். விழாவுக்குப் பால் நிலையங்களின் பகுதி மேற்பார்வையாளர் திரு. என். ரி. சோமநாதர் தலைமை வகித்தார். பால் நிலைய மேற்பார்வையாளரும் பாடசாலைத் தலைமை ஆசிரியருமாகிய திரு. வி. கே. கந்தசாமி அவர்கள் நன்றி கூறினார். இவ் விழா அரசினர் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

—சமசம்

மாதவிடாய் நின்றுபோனதா?

நிகரற்ற மருந்து (தேவி பில்ஸ்) Regd. by the Central Drugs Laboratory of Govt. of India, Under No. CDL/688

எக்காரணத்தினாலும் எத்தனை மாதமானாலும் நின்றுபோன மாதவிடாய் அதிசுலபமாகவும் அதிசீக்கிரமாகவும் தவறாமல் உடனே வெளியாகும். அநேக நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்ற திவ்ய ஔஷதம் உத்திரவாதமுள்ளது. போலி மருந்துகளை வாங்கி ஏமாறாதீர்கள். சாதாரண கேஸ்களுக்கு (Ordinary) விலை ரூ 10-0-0 மாதங்களான கேஸ்களுக்கு (Special) ரூ. 13-0-0 (தபால் செலவு தனி)

கர்ப்பத்தடை நிகரற்ற மருந்து (ஸ்பெக் பில்ஸ்) Government Registered No. 266

12 நாட்கள் சாப்பிட்டால் 6 வருஷத்திற்கு சாஸ்வதமாக கருவைத்தடுக்கும். மாதவிடாய் தவறாது. அநேக நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்ற திவ்ய ஔஷதம். போலி மருந்துகளை வாங்கி ஏமாறாதீர்கள். பில்ஸ் விலை ரூ. 15-0-0 (தபால் செலவு தனி)

சிலோன் ஏஜண்ட்: New Colombo Medical Stores, 82, Main St., Colombo-11
Mfgrs: SEENU & CO., POST BOX. 1638. MADRAS-1
பிராஞ்ச்: 134. SERANGOON ROAD. சிங்கப்பூர்.




இப்பத்திரிகை, இதன் சொந்தக்காரருக்காக, யாழ்ப்பாணம்—குரும்பசிட்டி, முத்தையா—சுபாரத்தினம் அவர்களால் தன்னுடைய திருமகள் அழுத்தகத்தில் 1954-ம் ஆண்டு ஒக்டோபர் 17-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.